...ஜூலை 2000
...லை ரூ. 10.

www.padippakam.com

# கவிதாசரண்

...ளாததோடு தமிழுக்கும் தமிழருக்கும் எதிராகத்
தமிழிலேயே குரைத்துப் பிழைக்கும் அநாகரிகக் கும்பல்
உலகின் வேறெந்த மொழிக் குழுவிலும் காண்பது அரிது

## பெருஞ்சித்திரனார் தமிழ் ஊட்டம்

ஒவ்வோராண்டும் பாவலரேறு ஐயாவின்
பிறந்த நாள் திங்களில் வழங்கப்படும்
இப்பரிசுத் தொகை ரூபாய் ஐயாயிரம்

இந்தோனேசியாவின் யோக் யாக்கார்த்தா
(Yog Yakarta) நகரைத் தலைமையகமாகக்
கொண்டியங்கும் **பொருள்முதல் ஆய்வகத்தின்**
இவ்வாண்டிற்கான பரிசுத் தொகை
தமிழின விழிப்பின் வெளிப்பாடாய் வந்த
**தன்மையம்**
கட்டுரைக்காகக் கவிதாசரண் இதழுக்கு
வழங்கப்படுவதாய்
Saudara Gajah Mada Hamid அறிவிக்கிறார்

•

**நன்றி:**

பரிசறிவித்துச் சிறப்பு செய்தமைக்கும்,
மேலும்
கவிதாசரண் கட்டுரைகள் பலவற்றைத்
தென்கிழக்காசியா முழுதும் தமிழரிடம்
பரப்பி வருவதற்கும்
எங்கள் நெஞ்சார்ந்த நன்றி

படிப்பகம்

www.padippakam.com

## தலித் அரங்கியல் விவாதத்தில் உஞ்சைராசனின் எதிர்வினை

தலித் அரங்கியல் நீண்டத்தகாததா? எனும் தலைப்பில் தோழர் கரு.அழ. குணசேகரனின் கடிதம் (அக்-டிச 99 கவிதாசரண் இதழ்) படித்தேன்.

தக்க சமயத்தில் தொடங்கப்பட்ட விமர்சனம். தமிழ் நாடகச் சூழலில் 'தலித் நாடக அரங்கு' கவனம் கொள்ளப்படவில்லை என்கிற போக்கையும் இந்தியத் தன்மைக்கே உரித்தான தீண்டாமை உள்ளடக்கத்தையும் சுட்டியுள்ளார். இச்சூழலில் மேலதிகமாக, தலித் சிந்தனையாளர்களும் சரி, பிற வகைப்பட்ட சிந்தனையாளர்களாயினும் சரி சிந்திக்க வேண்டியது அவசியம்.

நாடக அரங்கைப் பொறுத்தவரை பொதுவாக இரு வகைப்படுத்தலாம். நாடக அரங்கை வெளிப்படுத்தும் வகையில் துண்டறிக்கை, விளம்பரங்களில் துள்ளியப்படுத்திக் கூறுவதை கவனித்தால் புரியும். .... எனும் "சமூக நாடகம்" நடைபெறும் என்றும், ... எனும் "புராண நாடகம்" நடைபெறும் என்றும் வெளிப்படுத்துவார்கள். இவ்விரு நாடக வகைகளைத் தவிர வேறு சில இருக்கலாமெனினும் அவை உத்திகள், உள்ளடக்கம் ஆகியவற்றில் கொண்டிருக்கிற வேறுபாடுகளைக் கொண்டதாகவே கொள்ள முடியும்.

நெடுங்காலமாகவே புராண வகைப்பட்ட நாடகங்கள் ஒரே மாதிரி வடிவங்களையே கொண்டிருக்கின்றன. உத்தி

பின் அட்டை உள்பக்கம்—

---

## திருத்தம் — அறிவிப்பு

பக்கம் 15இல் 'அப்பன்' கவிதையின் கவிஞர் 'இளமுருகு'. செதுக்குகள் 2இல் வரும் அமைப்பு 'தமிழ் வளர்ச்சிப் பேரவை'. பிற எழுத்துப் பிழைகள் வழக்கம்போல் உங்கள் திருத்தத்துக்கு.

இது மே – ஜுலை 2000 இதழ்.

அடுத்த இதழ் ஆகஸ்ட் 2000இல் 'செதுக்குகள்' மிச்சமுள்ளவை.

பங்கு பெறுவோரில் சிலர்

பாப்லோ அறிவுக்குயில் லதா ராமகிருஷ்ணன் அபிமானி
மதிவண்ணன் சாலன் தலித் சுப்பையா கண்மணி
நிறைய கவிஞர்கள்

படிப்பகம்

www.padippakam.com

கவிதாசரன்
படைப்பிலக்கிய இதழ் ★ ஆசிரியர்: கவிதாசரன்

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

பத்து இதழ்களுக்கான
சந்தாத் தொகை ரூ. 100
வெளிநாடு: 16US டாலர்
சந்தாவை M.O. செய்க.

மே - ஜூன் 2000 விலை ரூ. 10

# மிகவும் நல்லது

மிகவும் நல்லது
தென்னாடுகளில் சிலுவை ஏந்திய
கறுத்த சோதரனே,
மனதில் சந்தேகம் வரும்போது
நீ பாடுவது மிகவும் நல்லது.

உன் தேவ கீதங்கள் நன்று
உன் கறுத்த மேனியும்
வழக்கறிஞரின் வாதங்களும்
முழங்கிச் செல்லும் ஊர்வலங்களும்
எல்லாம் மிக நல்லவை.

நீதிக்குச் செல்லும் பாதையில்
வழுக்கி விழுந்து தடுமாறிச் செல்லும்
உன் நடையும் நன்று!

சிகாகோவிலிருந்து வாஷிங்டன்வரை
மூச்சுக் காற்றை விழுங்கும்
ஆன்ம பலமும்,
நேர்மையான நெஞ்சுள்ள
தென்னாட்டவனே, உன்
பத்திரிகைச் செய்திகளும் நன்று.

விரல்களை மடக்கி
ஒற்றுமையோடு ஓங்கி உயர்த்தும்
உன் கரங்கள் நல்லவை.
லிங்கனின் ஓவியமும்.
எல்லாம் நல்லதுதான்!

'டைனமைட்' வைக்கப்பட்டுள்ள
கோயிலில்
உன் மதச் சொற்பொழிவும் நன்று!
அமெரிக்க மக்களுக்குக்
குடியுரிமை மறுக்கப்படும் விதியை—
(விதி?) ஒரு குற்றமாக

கணக்கிலெடுத்துக் கொண்ட பின்னும்,
'வெள்ளைக்காரனும் அவன் பகைவனும்
ஒற்றுமையாய் வாழ்வதில்
உனக்குள்ள வீரமான நிர்பந்த
புத்தியும்' நன்று!

தென்மா நிலங்களில்
சிலுவை ஏந்திய கறுத்த சோதரனே,
நல்லது.
எல்லாம் மிகவும் நல்லது!

துப்பாக்கி:
போராளி சுடவும் ஓங்கியடிக்கவும்
பயன்படுத்தும் கையாயுதம்
(அகராதி இப்படிச் சொல்கிறது!)
துப்பாக்கி: (இங்கிலீஸில் 'கன்')
'திருப்பித்தாக்கும் அடிமைகளின் ஆயுதம்'
என்றும்கூடச் சேர்க்க வேண்டும்.

ஆனால்—'அது' நடந்துவிட்டால்,
சோதரனே, உன் கையில் துப்பாக்கி இல்லை,
என்ற நிலை வருமானால்—
அப்படி வந்துவிட்டால்—
என்னவென்று எனக்குத் தெரியவில்லை—
ஏதாவதொன்றை யோசித்து வை!
ஒரு தடியோ, மண் கோடாரியோ
ஒரு பாறாங்கல்லோ, ஏதாவது—
வலி உண்டாக்கும் எதையாவது—
அடையாளம் உண்டாக்கும் எதையாவது—
இரத்தம் பெருகச் செய்யும் எதையாவது—
எதையாவது . . . . .

**மூலம்:**
**கியூபா தேசியக் கவி**
**நிக்கோலாஸ் கியேன்**

**தமிழில்:**
**கவிஞர்**
**புவியரசு**

●

www.padippakam.com



## கடவுளும் நிரோத்தும்

கடவுளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கையில்
கண்ணில் பட்டது 'நிரோத்'

கடவுளின் அனுக்கிரகம் பெயர்த்து
விழும் உயிரின் துளிகளை
சுருட்டி யெறிந்தது குப்பைத் தொட்டியில்.

உயர்ந்த கோபுரங்களைக் கண்டு
கைகொட்டிச் சிரித்தன நிரோத்துகள்

பூமியின் கருப்பையில்
கலந்து போனது மலட்டுத்தன்மை.

படைத்தல் தொழிலின் நிறுத்தம்
கடவுள்களைக் கேள்வி கேட்டது பூமி.
பயந்து ஒடுங்கி கடவுள் இடம் பெயர
நிரோத்துகளின் ஆட்சி.

எல்லோருடைய சட்டைப் பையிலும்
நிரோத்துகள் திணிக்கப்பட்டன.

படுக்கையறையிலிருந்து மெல்ல ஊடுருவி
அலமாரிகளில் தோல் பைகளில்
சட்டைப் பைகளில் மாறிமாறி பயணித்தது.

பேருந்துகளில் நிறுத்தங்களில்
கை தொடும் இடங்களிலெல்லாம்
நிரோத்துகளின் விளம்பர முகங்கள்.
வீடுகளில் முளைத்த தொலைக்காட்சியிலும்
நிரோத்துகளின் பேட்டி.

சிறுவர்களின் கைகளில்
ஊதப்பட்ட நிரோத்துகள்
விளையாட்டுப் பொருள்களாய்.

கடவுளின் தலங்களிலும்
நிரோத்துகள் கிடக்கின்றன
யார் எறிந்திருப்பார்கள்.

www.padippakam.com



கடவுளின் குடும்பத்தில்
நேற்றுவரைக்கும் புதுவரவு இல்லை
பல நூற்றாண்டுகள் கடந்த பின்னும்.
யார் கடவுள்?

**—கோ. இராஜேந்திரன்**

●

## எரியும் கவிதைகள்

இலுப்பை மரக் கட்டெறும்புகள்
ஊறும் செங்கரளை மண்ணிலிருந்து
குறுங்கள்ளிகள் காய்ந்து பொடியாகும்
பின்பகலில் சவ ஊர்வலம்
வெளியேறிக்கொண்டிருக்கும் சிற்றூரில்
நீயோ கவிதை எழுதிக் கொண்டிருப்பாய்
இந்நகரமீதில் புழுக்க மூட்டும்
வாழ்வின் ஒற்றையறையில்
நீ விட்டுப் போயிருக்கும் ஆண் கவிச்ச
சிற்றுள்ளாடை காய்கிறது
உனக்கு வந்த சுயமுகவரியற்ற கடிதத்தில்
உன் காதலியின் இரத்தக் கையெழுத்தும்
கண்ணீரும் தோய்ந்திருப்பதைக் கண்டேன்
முன்னர் உன் தாயின் வேண்டுகோள்
கடிதமொன்றும் கிடக்கிறது
இந்நேரம் எந்தப் புதரில்
எவனோடு என்ன இரகசியம் தேடுகிறாயோ
உனக்குப் பதில் நானே வாடகையை
அழ வேண்டும்
போகட்டும்
போகும்போது உணவு விடுதியை இன்னும்
சமன் செய்யாத என் சம்பளப் பணத்தையுமா

படிப்பகம்

www.padippakam.com



எடுத்துப் போனாய்
நகரத் திருட்டு கிராமத்தில் பாவமில்லை போலும்
உன் கவிதைகளைக் கொளுத்திக்கொண்டிருக்கிறேன்.

—யவனிகா ஸ்ரீராம்

●

## பரிகாரம்

இங்கு எல்லாவற்றுக்கும்
பரிகாரம் உள்ளது
சிதம்பரம் பத்மினிக்கு அரசுப்பணி...
முத்தாண்டிக்குப்பம் வசந்தாவுக்கும்
வாச்சாத்தி மலைப் பெண்களுக்கும்
சில ஆயிரம் ரூபாய்கள்
கிளர்ந்தெழுந்த பூலான்தேவிக்கு எம்.பி. பதவி
ராஜஸ்தானின் பான்வாரி தேவிக்கும் இதில்
ஏதாவதொன்று கிடைக்கக்கூடும்

காவல்துறை செயல்களாய்ச் செய்ததை
நீதித்துறை எழுத்தில் செய்யும்

இவர்கள் பார்வையில்
பெண் என்பவள்
வெறும் பெண்குறி மட்டுமே

இங்கு எல்லாவற்றுக்குமாய்
பரிகாரம் உள்ளது.

—ம. செல்வபாண்டியன்

●

படிப்பகம்

www.padippakam.com



## மர வாழ்வு

செம்மண்ணில்
பிடி கொண்ட
என்னின்
ஒரு கிளை இலைகள் பழுப்படைந்து.
மறு கிளை இலைகள் மஞ்சள் ஏறி.
வழக்கமான
பிற இலைகள் பச்சை பிடித்து.
வந்தமரும் பறவைகளோ
வேறு வேறு வண்ணம்.
உள்ளோடிப் பரவிய
வேரின் வண்ணம்
வீழ்வில் புரியலாமோ.

...பா.சத்தியமோகன்

●

## பகட்டு

ஒளிரும் விளக்கின்
பளபளப்பை விழுங்கத்
தாவி வந்தன
இருட்டுத் துளிகளாய் வண்டுகள்...

பசித்திருந்த அவற்றை
இறையாக்கிக் கொண்டது
பார்த்திருந்த
பல்லியொன்று.

பகட்டு மினுக்கம்
மரணத்தின் விளம்பரமாய்...

படிப்பகம்

www.padippakam.com



புழுதி மண்டிய வாழ்க்கையில்
நினைவுகள்
ஜிகினாப் பூச்சுகளோடு.

ஆலாய்ப் பறக்கிறது பல்லி
ஆசைப்படும் வண்டுகளுக்கு
மோசம் செய்ய.

வெளிச்சப் பகட்டை உதறிவிட்டு
அமைதியின் சுமையோடு
திரும்பிப்போகும்
மற்றும்சில வண்டுகள்.

—அபிமானி

●

மலைக்கு அந்தப்புறமும்
மலை பார்த்துக் கொண்டிருப்பார்கள்
இந்தப்புறம் இருந்து
பார்க்கும் போது
இப்படித்தான் தோன்றுகிறது.

அருவிக்கு மேலும்
இருக்கிறது அருவி.

சிற்றருவி
புலி அருவி
செண்பகதேவி
தேனருவி.........
திரும்பிவர நினைக்கிறவன்
தேனருவி பார்க்க முடியுமா.

புற்றைப் பார்க்கவில்லை
பாம்பைப் பார்க்கவில்லை
புற்றும் இருக்கிறது
பாம்பும் இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



தலைவைத்து நுழைந்தவுடன்
புற்றுக்குள்
தலை திருப்பிக் கொள்கிறது
நாகம்.

குடிக்கக் குடிக்க–
துடிக்கத் துடிக்க–
திரௌபதை அபிமன்
தேடினால் கிடைப்பாள்.

(நம்பிராஜனுக்கு)

—கல்யாண்ஜி

●

மேலும் கீழுமாய்
கிழிக்கப்பட்டன இரண்டு கோடுகள்.

முனைகளற்ற கோடுகள் இவை.

இடைவெளி இல்லை
கண்ணுக் கெட்டிய தூரம் வரை
கோடுகளிடையே.

எப்படி ஆனது?

உலகம் வெடித்துச் சிதறியது
என் முதுகுப் புறத்தில்.

ஒரு புள்ளி அதிர்வு.

கிழிந்த கோட்டில்
முனைப்பைத் தேடியபடி நான்.

ஒவ்வோர் விளிம்புகளிலும்
மந்திகையில், சங்கிலியால் பிணைத்தபடி,
பைத்தியமாக்கப்பட்ட மனிதன்
சிரித்தபடி.

சூனியமாக்கப்பட்ட இருட்டின் மறைவில்,
இன்னொரு மனிதன்.

படிப்பகம்

www.padippakam.com



ஆள் கட்டை.
'நன்றி கெட்டதுகள்'
நாய் முனகலில்,
கோடுகள் அழிய,
சுருங்கி வெறுமையானது
கி.பி.க்குப் பின் இன்னோர் உலகம்.

**—தேவிகணேசன்**

●

**எங்கிருந்து—**

வெளி அழகாயிருக்கிறது எப்போதும்.
நமைச்சல் புகைச்சல் குடைச்சலென
எரிச்சலுக்குள்
புதைந்து கிடப்பதாலும்
இருட்டு சூன்யங்கள்
நிரம்பி இருப்பதாலும், உள்
வெறுக்கக் கூடியதாய் ஆகிவிட்டது.

வெளியின் கம்பீரத்தின் முன்
தொட்டதும் காணாமல் போகிற
நத்தையின் மேனியாய்
உள் சிறுத்து விடுகிறது.

உள்ளொன்று வைத்து
வெளியொன்று பேச
உள்ளுக்குள் குறுகும் உள்.

என்றாலும்,
வெளியிலிருந்து பார்த்தால்
சிற்சில சமயங்களில்
உள்ளேயும் அழகாயிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



நுணுகிப் பார்க்க
எங்கிருந்து பார்ப்பது என்பதுதான்
தலையாய பிரச்சினை.

—மா.காளிதாஸ்

●

## தேடல்

இல்லாதவனுக்கு வயிறு
நிரம்பியவனுக்கு மூளை
கனத்தவனுக்கு ஆன்மா

தேடும் இடம்
மனிதனுக்கு மனிதன் மாறும்.

## விழிப்பு

சாவதற்காகவா வாழ்கிறோம்?
வாழ்வதற்காக வாழ்கிறோம்.
வாழ்கின்றோமா வாழ்கின்றபோது?

செத்த வாழ்க்கை வாழ்ந்தது போதும்
வாழும் வாழ்க்கைவாழ- இனித்
தலைப்பட வேண்டும்.

## வளர்ச்சி

விதை ஊன்றிய மண்
நிரம்பிய நீர்
அதனைப் பொறுத்தும்
செடியின் வளர்ச்சி.

படிப்பகம்

www.padippakam.com



எதுவும் தானாய் ஆவது இல்லை.
கேட்டால் பொறுக்காது உனக்கு.
அது உன் அறிவு.
கேட்காமல் முடியாது எனக்கு.
அது என் வளர்ச்சி.

**—கள்ளழகர்**

●

## வாழ்வுக்கப்பால்

வானவில் தாங்கி நின்று
வெய்யிலால் விழுங்கப்படும்
நீராவித் திரை
ஓடிப்பிடித்து ஏறுகையில்
கழன்று வரும்
வாகனக் கதவுப்பிடி
தவளை தாவிக் கெடுக்கும்
குளத்தின் அமைதி
அவசரச் செய்தி
சொல்ல வந்த ஒற்றனின்
மரணச் செய்தி
பசித்த பிள்ளைக்காய்
பதை பதைக்கும்
வற்றிப்போன முலை
காணாமல் போன
கடிகாரச்
சின்ன முள்
இழவு வீட்டில்
சுரக்க மறுக்கும்
கண்ணீர்

படிப்பகம்

www.padippakam.com



கடைசி வரிக்காகக்
காத்திருக்கும்
கடிதம்

அறியாப் புது உலகில்
மழலையின்
தேடல்

அறிவித்து விட்டு
ஆழ ஊன்றும்
கொசு

அம்மி கொத்தியே
கூர் மழுங்கும்
உளி

அந்தி வந்ததும்
மந்தியாய் மாறும்
மனம்

பசை நாவால்
இரை தீண்டும்
பல்லி

மாசில்லா முகத்தில்
முளைத்து நிற்கும்
கரு மரு.

—நாசர்

●

## பிறந்த பொழுது

பெருந்தகைக்குப் பிறந்த நாள்.
மாலை, மலர்க்கொத்து
சால்வை, சரிகைப்பட்டு
சதிர்நிறை புகழாரம்.

படிப்பகம்

www.padippakam.com



அறுபது வயதிலும் சுடர்விடும்
அறிவுத் தாகம்.
தெருவோரத் துயர் போக்க
தீயாய் நின்ற வேகம்;
சாதிப்புதர் செழித்த கானலில்
சாவுப் பறை முழக்கி
எதிர்ப் புயலாய் எழுந்து
நின்ற சாகசம்.

எத்தனை பெருமைப் பயிர்கள்!
இத்தனையும் விளைய
இடு உரம், அடிமண்
முகவரி இல்லை.
முகத்திற்குள் முகம் அடக்கம்.

பேரறிஞன், பெருங்கலைஞன்
நாக்குச் சுழட்டலில்
நானிலத்தை வசமாக்கும் நாவலன்.
தலைகீழாய்ப் பாய்ந்து,
மூச்சடக்கி முத்தெடுத்து நிமிரும்
பேனாவின் நாயகன்,
படைப்புப் பிரமன்
ஓவியன், கோபுரச் சிற்பி
இத்தனை பெயர்களும் தந்தாய் நீ.

உனக்கெனக் கொண்டது
ஒரு பெயர் மட்டுமே
'பெண், பெண், பெண்.'

அவனது அடையாளத்துள்
புதைபட்டது
உனது அடையாளம்;
மொழியில்லை,
அவனது மொழியே!

நுழையவில்லை
உன் சமையலறைச் சன்னலில்
உலகெலாம் தலைகீழாய்ப் புரட்டும்
சுதந்திரக் காற்று.

படிப்பகம்

www.padippakam.com



பெய்யவில்லை
இன்றைக்கும் உன் பூமியில்
தரிசுக் காடெல்லாம்
தண்ணி புரள அடிக்கும் மழை.
இல்லை
எவர்க்கும் நினைவில்லை
உன் பிறந்த பொழுது.

—சூரியதீபன்

●

## வந்தியத்தேவனின் இரு கவிதைகள்

### 1. வெள்ளைச் சீழ்

சின்னச் சிறகு
வண்ணத்துப் பூச்சி
பூக்களின் விருந்து
பிள்ளைகளின் குதூகலம்
சிக்கிக்கொண்டது
சுவர்ப் பல்லி வாயில்
ஆயினும் என்ன
பல்லி எப்போதும்
வெள்ளைதான்.

### 2. வரி விளம்பரம்

'நான்'ஐ வெளிப்படுத்த
படாத பாடு
'நான்'ஐ அழித்துவிட
அதைவிடப் பாடு
இடையில் தேய்ந்ததோ
நாற்பது வருடம்.

படிப்பகம்

www.padippakam.com



இரண்டிலும் தோல்வி
என்றாகிய போதிலும்
வாழ்க்கைக் கணக்கை
அலசி ஆராய
உடனடித் தேவை
ஒரு நல்ல 'ஆடிட்டர்.'

●

## அப்பன்

இதுபோல
எப்போதாவது வருகிறது
அப்பனை நினைக்கிற தருணம்.
இருள் சூழ்ந்த நிசியில்
பனிக்குளிர் வாசலில் தனியனாய்.

போதையில் பொட்டலங்கள் வாங்கி வந்து
அண்ணனுக்குத்தான் தருவான்.
நெடுநாள் கண் வைத்து
என் உண்டியலை உடைத்துப் போவான்.
என்னிடம் தாயத்தில் தோற்றுப்போய்
கொட்டைகளைப் பழித்து வீசுவான்.
அம்மா முலைகளில் இன்னுமா
பால் வருகிறதென்று பரிகசித்துச் சிரிப்பான்.

எப்படித்தான் இருந்தாலென்ன?
கடைசிக் காலத்தில்
எனக்கென்று வைத்துப் போகிற
சொத்தாய்ப் பாவித்து
அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான்—
'எத்தன கஷ்டம் வந்தாலும்
தெய்ரியத்த மட்டும் உட்றக் குடாதுடா.'

—ஏழுருகு

படிப்பகம்

www.padippakam.com



# மதிவண்ணன் கவிதைகள்

## யாயும் யாயும் நாயாகியரோ

1

என்னை நீ பார்ப்பதென்பது
எப்போதும் என் பின்புறத்தைப்
பார்ப்பதாகவே இருக்கிறது.
ஒவ்வொரு எதிர்ப்படுதலிலும்
கவனமாய் அவதானிக்கிறாய்.
நீ மொட்டையாக்கிய இவ்வாலை
ஒழுங்கான வேகத்தில் குலைப்பதை,
ஊம் ஊமெனக் குழறும் குழறலை,
உன் காலை மோந்து, நக்கிச் சுற்றிச் சுற்றி
வருமென் கால்களில் மிதியுண்டு கிடக்கும் நானை,
நீ வீசியெறிவதை நக்கித் தின்னும் வேகம்
உன் திருப்திக்கு உத்திரவாதம் அளிப்பதாயிருப்பதை,
எல்லாவற்றையும்.
நக்கித் தின்னும் வேளையில் ஓங்கி வயிற்றிலுதைத்து,
ஊளையிட்டு இறைஞ்சி நிற்குமென் பசிப்பார்வையில்
என் மழுங்கல்தனத்தை உறுதி செய்து
கடந்து போவதுன் வழக்கம்.

2

உன்னை நான் பார்ப்பதென்பது
எப்போதும் எச்சில் ஒழுகும் உன் வாயைப்
பார்ப்பதாகவே இருக்கிறது.
ஒவ்வொரு எதிர்ப்படுதலிலும்
கவனமாய் அவதானிக்கிறேன்.
எல்லாவற்றையும் குரோதமுடன் நோக்கும்
உன் நிலையற்ற பார்வையை,
காரணமற்றுத் தேவையுமற்று அருவத்தைக் குதறும்
உன் குரைப்பை,
எதிர்ப்படுமெல்லாவற்றிலும் மோந்து பார்த்துத்
தலைக்கேறித் ததும்பும் வெறியைச் சேர்ப்பிக்க தோதான உயிர்தேடி

படிப்பகம்

www.padippakam.com



ஓட்டமும் நடையுமாய்த் தொடரும் உன் அலைவை,
எல்லாவற்றையும்.
பேச்சு மூச்சற்றுத் திகிலுடன் உன்னைக் கடந்து
பாதுகாப்பான தொலைவு வந்துவிட்டதை உறுதி செய்து
திரும்பிப் பார்ப்பதென் வழக்கம்.

●

## மார்க்கம்



திரும்பத் திரும்ப
தவறவிட்ட தருணங்களைத்
திரும்பிப் பார்க்கத் தலைப்படும் மனம்
திரும்பத் திரும்பக்
கிளைக்கும் தலைகால்களின் தீராப்பயணம்
நிலைக்கும் அலைகளின் மேல்
திரும்பத் திரும்பப் பரவும் சுரமாய்
சிறுமயிர்த்திரள் ஸ்பரிசம் உள்ளூற ஊற
நிறையத் துடிக்கும் அகம் கரையும்
திரும்பத் திரும்ப
வராது காலம் திரும்ப
வருங்காலம் திரும்பத் திரும்ப
அரும்பும் மலரும் புலரும் பொழுதும்
விழுதும் வேருமாய் மரம் பெறும் பலம்
மண்ணுள் நாளெலாம் நின்றது நின்றபடி
கொண்டதும் கொடுத்ததும் எண்ணடங்காதபடி
சற்றேறும் குறையும் என்றும்
நேற்றைப் போல் இன்றும்
திரும்பத் திரும்பக்
காற்றை வருடிக் களைத்திருக்கும் கரங்கள்.

—ரிஷி

படிப்பகம்

www.padippakam.com

# செதுக்குகள்



## 1

1958. என் கல்லூரி வாழ்வின் கடைசி ஆண்டு. கல்லூரிகள், விடுதிகள் யாவிலும் நிறைவு விழாக்கள் நிகழ்ந்து கொண்டிருந்த நேரம். சென்னை மாநகர அனைத்துக் கல்லூரிகளின் விடுதி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி ஒன்று விக்டோரியா மாணவர் விடுதியில் அப்போது நடத்தப்பட்டது.

போட்டிக்கு ஒவ்வொரு விடுதியிலிருந்தும் இரண்டு மாணவர்கள் அழைக்கப்பட்டனர். இருவரும் பெறும் கூட்டு மதிப்பெண்கள் அடிப்படையில் பரிசு வழங்குவதாக ஏற்பாடு. எங்கள் விடுதி அனுப்பியவர்களில் நான் ஒருவன்.

அந்த விழாவின் சிறப்பு விருந்தினராகவும் பேச்சுப் போட்டியின் நடுவர்களில் ஒருவராகவும் கலந்துகொண்டவர் நாவலர் நெடுஞ்செழியன். குறித்த நேரத்தில் வந்துவிட்டார். பெயருக்கென்றே செதுக்கினாற்போல் நெடுநெடுவென்று செழித்து வளர்ந்திருந்த, உயிர்ப்பும் துடிப்பும் மிக்க ஈர்ப்புள்ள மனிதர்.

நான் அவரை நெருக்கமாகப் பார்த்தது அது இரண்டாவது தடவை. முதல் தடவை பார்த்தது, 1947ஆம் ஆண்டோ அல்லது 48 ஆம் ஆண்டோ, ஒரு கோடைப் பருவத்தில். துறையூர் பாரதி திரையரங்கில் பெரியாரைச் சூழ்ந்திருந்த கருஞ்சட்டை வீரர்களிடையே, தொட்டால் பற்றிக்கொள்ளும் தீக்குச்சிபோல தோற்றமளித்த இளந்தாடி இரா. நெடுஞ்செழியனாக. கருஞ்சட்டையில் பெரியாருக்கிணையாகப் பொன்னிறமாய் மின்னினார். (அவர் போலப் பேச்சாலும் நிறத்தாலும் கவர்ந்தவர் கேரளத்தென்றலாக அறியப்பட்ட கி.மனோகரன்கூட.) கறுத்துச் செழித்த அந்தத் தாடி,

படிப்பகம்

www.padippakam.com



அவருள் சினந்திருந்த மூலமனிதனின் அசலான புறச்சின்னமாகவே விளங்கியது என்பதை, பின்னாளில் அதை சிரைத்துவிட்ட முகத்தில் தெளிவாகவே வாசிக்க முடிந்தது. தாடியில்லாத முகத்தில் அம்மைத் தழும்புகளும் அடங்கித் தெரியும் 'மாப்பிள்ளை' அழகும் பூத்துக் கிடந்தன. சிரைப்பதற்கு முன் நீர் தெளித்துப் பதப்படுத்தியபோது அந்தத் தீக்குச்சியில் நிரந்தரமாக ஈரம் ஒட்டிக்கொண்டாற்போலப் பட்டது. தீக்குச்சி நமத்துப் போயிருக்குமாவென அதை உரசிப்பார்த்தால்தான் தெரியும். பின்னாளில் முளைத்த தலைமைப் போட்டியிலும், அரசியல் சூழ்ச்சிகளிலும் முகம் கொடுத்தபோது அது தெரிந்தது. நமத்துப்போன குச்சியை உரசினால் தீக்கீற்றுக்குப் பதிலாகக் கருப்புக் கோடுதான் விழும். கந்தகக் கோடு. எரிதழலற்றுப் போன தீக்கோடு, நமத்த நெருப்பின் கறுத்த நிறம்போல. நாவலர் முகத்தில் கடைசிவரை மீசையாகத் தீற்றப்பட்டிருந்த மெல்லிய கறுப்புக் கோடு எனக்கு அவ்வாறே தோன்றியது.

விடுதி விழாவில் பேச்சுப் போட்டி முடிவுகள் நாவலரால் அறிவிக்கப்பட்டன. எங்கள் விடுதிக்கு நான்காம் இடமோ ஐந்தாம் இடமோ. அறிவிப்புகள் முடியும் தருவாயில் "இந்த அறிவிப்பை ஒரு வேண்டுகோளோடு முடிக்கலாம் என்று நினைக்கிறேன்," என்று சொன்னவர், திடீரென்று என் பெயரைக் குறிப்பிட்டு, "இந்த மாணவருக்கு- ஆறுதல் பரிசென்று சொல்ல மாட்டேன், சிறப்புப் பரிசு ஒன்று அளித்தால் போட்டி நிறைவாய் இருக்கும். இது என் வேண்டுகோள் மட்டுமல்ல; நடுவர்களின் ஒட்டுமொத்த வேண்டுகோள். தனிப்பட்ட முறையில் இவர் அதிக மதிப்பெண் பெற்றிருக்கிறார்," என்றார். ஒரு சொல்லில் நான் எல்லாருடைய கவனத்துக்கும் உள்ளாக்கப்பட்டதில் சற்று கூச்சமும் கிளர்ச்சியும் கொண்டேன். எனக்குப் பரிசை அறிவித்தாலும் என் பேச்சு நன்றாக இருந்தது என்றுகூடச் சொல்லவில்லை. அதாவது, பரிசுக்குரிய மாணவன் பற்றிய தனிப்பட்ட அக்கறை எதையும் அவர் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. (இதுகூட இப்போது நினைத்துப் பார்க்கும் போதுதான் தோன்றுகிறது.) இந்தப் பண்புகூட அவர் ஆளுமையின் கட்டமைப்பை ஆய்வதற்கு உதவக்கூடும்.

அவர் கையால் எனக்கொரு வெள்ளித் தம்ளர் பரிசளிக்கப்பட்டது. வெகுகாலம் அது என்னோடு இருந்தது- அதாவது, என் சின்ன அக்காள் என்னைக் கேட்காமல் அதை எடுத்துச் செல்லும் வரை. "ஒங்க் மாமன் ஒனக்குக் கொலுசு செஞ்சு போடுலியான்னு பாப்பாவை ஊரு சனம் நச்சரிக்குதுப்பா. அதான் எங்கிட்ட இருந்த 'வெள்ளி மிஞ்சியோட அதையும் சேர்த்து உருக்கி செஞ்சு

படிப்பகம்

www.padippakam.com



போட்டுட்டேன். அதுகூட அவ்வளவு நல்ல வெள்ளி இல்லியாம்பா. ஆசாரி சொன்னாரு," என்றாள்; அதை நான் அவ்வளவு காலம் பாதுகாத்திருக்கத் தேவையில்லை என்பது போல. எனக்குப் பதினேழு வயது நடந்தபோது அவள் தன் முதல் மகனைப் பெற்றெடுத்தாள். அவள் பிள்ளைக்கு, என் தாய் மாமன் எனக்குப் போட்ட நான்கு சுற்று நீள்முள்ள வெள்ளி அரைஞாண் கொடியைத்தான் கழற்றிப் போட்டது. அவள் குழந்தைப் பேறு மிக்வும் சிக்கலாகிப் போனதில், ஊரிலேயே முதல்முறையாக அடுத்த ஊர் பொது மருத்துவ மனையைச் சேர்ந்த ஆங்கில மருத்தவம் பார்க்கும் தாதியரை வீட்டுக்கு அழைத்து வந்து பார்த்ததினால் கூடுதல் செலவாகிவிட்ட நிலையில் சீர் செலவை சிக்கனப்படுத்துவதற்காகத் தாயாரின் சொல்படி கழற்றிக் கொடுத்துவிட்டேன். தாயார் எனக்கு நூல் கயிறு வாங்கிக்கொடுத்து அப்போதே கட்டிக்கொள்ளச் செய்தார். ஆனால் அன்று நடுப்பகலில் இறைவைக் கிணற்றில் நீந்திக் குளிக்கும் போது, தலையிலிருந்து வழிந்த தண்ணீரோடு கண்ணீரும் சேர்ந்து சிதற அந்தக் கயிற்றைக் கழற்றி வீசியதுதான்- இன்று வரை இடுப்புக் கயிறு இல்லாமல்தான் காலம் போகிறது.

நாவலர் அன்று எனக்குப் பரிசளிக்காமல் விட்டிருந்தால், குறையோ பிழையோ நேர்ந்துவிடப்போவதில்லை. ஆனால் அவர் தன்னிச்சையாக அதைச் செய்தார். தகுதிகள் கோரப்படாமலேயே அங்கீகரிக்கப்படவேண்டும் என்பது அவர் சிந்தாந்தமாக இருக்க வேண்டும். ஓர் உதாரணம் என்ற அளவில் என் அக்காள் என்னை மொட்டையடித்தாளா, அல்லது கௌரவித்தாளா என்பதை நம் சமூக அளவுகோல் துல்லியப்படுத்திட முடியாது. ஆனால் நாவலரின் சிந்தாந்தத்தை அனுசரிக்கும் அல்லது கௌரவிக்கும் இயல்பிலிருந்து அரசியல்தளம் வெகுவாக தகர்ந்து போய்விட்டது என்பது ஒரு சராசரி மனிதனுக்கும் புலனாகும் உண்மை.

நாவலர் தன் தகுதிக்கேற்ற அங்கீகாரமாய்க் கருதியிருந்தது, அண்ணா விட்டுச் சென்ற இடம் தன்னால் நிரப்பப்பட வேண்டும் என்பதாய் இருந்திருக்கும். அப்படியொரு கருதுகோள்கூட அண்ணாவால் விதைக்கப்பட்டதேயன்றி அவராகவே வென்றெடுத்ததாகத் தெரியவில்லை. "தம்பி வா. தலைமை ஏற்க வா" என்று அண்ணாதான் முன்மொழிந்தார். அந்தத் தகுதியோடே கழகத்தின் பொதுச் செயளாலராக உயர்த்தப்பட்டார். உயர்த்தப்பட்டதோடு அதற்குரிய மரியாதையோடும் நடத்தப்பட்டார். (வி.வி. ராமசாமி நாடார் தேர்தலில் தி.மு.க. தனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கோரி அண்ணாவை அணுகியபோது, பொதுச் செயலாளரிடம் கோரிப் பெறும்படி வழி காட்டப்பட்டதுண்டு.) 'நாவலர்', என்

படிப்பகம்

www.padippakam.com



னும் 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்றும் தகுநிலை மொழிக ளால் அணிசெய்யப்பட்டார். ஆகவே, அண்ணாவுக்குப் பின்னர் அவர் இடத்தில் தன்னைப் பொருத்திக் கொள்வதென்பது, தன்னை அவமதித்துக்கொள்ளாமல் காக்க அவருக்கிருந்த ஒரே வழியாக, சூழல் அவர் மேல் இறக்கி வைத்த சுமை. ஆனால் ஆட்சி அதிகாரக் களம் கோருவது சூழ்ச்சித் திறம்மிக்க தலைமையைத்தான் என்பதைக் கலைஞர் ஐயத்துக்கிடமின்றி நிறுவிக் காட்டியபோது 'இந்திரன் மாறுவான்; இந்திராணிக்கு மாற்றமில்லை' என்பது போல், இரண்டாம் இடம் எப்போதுமாக அவருக்குக் கையளிக்கப் பட்டுவிட்டது. சந்தர்ப்பத்தையும் சூழலையும் தன் வசப்படுத்தக் கற்றவன் தலைவனாய் நிலைக்கத் தக்கவன். கலைஞருக்கு அந்தத் தகுதியிருந்தது. சந்தர்ப்பத்தாலும் சூழலாலும் தாங்கப்படுகிறவன்கூடத் தலைவனாகலாம். நாவலருக்கு அதுகூட வாய்க்க வில்லை. ஒருவர் இரண்டாம் இடத்தில் பொருந்திப் போவதற்கு, 'மூத்தவர்- ஆகவே கூடுதலாகக் குப்பை கொட்டிய அனுபவமுள் ளவர்' என்னும் இயல்புத் தகுதிகளுக்கு மேல் எவ்விதச் சிறப்புத் தகுதியும் தேவையிருக்கவில்லை. ஆனால் நாவலருக்கு கூடுதலாக ஒரு தகுதி இருந்தது; அதாவது தலைமை ஏற்பவர்கள் நாவலரை இரண்டாம் இடத்தில் இருத்திக்கொள்வதன் மூலம் தங்களை மரியாதை செய்யத் தெரிந்த நியாயவான்களாகக் காட்டிக்கொள்ள உதவி புரிந்த கனவான் என்னும் தகுதி. காரணம் அவருடைய 'உயரம்' அப்படி.

ஜனநாயகக் கவசம் தரித்த அரசியல் நீரோட்டத்தில் இது மாதிரி விளையாட்டுகள் வழக்கமானவைதான். ஆனால் இந்தக் 'கலைத்துப் போடலில்' நாவலரின் ஆளுமை நரம்புகளில் ஒன்று பிசகிக்கொண்டு, அவரை விட்டேற்றியாக விறைத்துப் போகச் செய்திருக்க வேண்டும். பனித்துளிக்குள் பனைமரம் ஒடுங்கினாற் போலத் தனக்குள்ளேயே தன் தனித்துவம் ஒடுங்கித் தவமிருக்க, ஆட்சியதிகாரப் பங்கேற்பில் எதனோடும் உடனோடும் சமரசப் போக்குள்ள குடும்பக் காவலராய்த் தன்னைத் தனைத்துக் கொண் டார் என்றே தோன்றியது.

ஒரு சமயம் அரசினர் தோட்டத்தில் ஆசிரியர்கள்- அரசு அலுவலர்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றது. அரசின் சார்பில் கல்வியமைச்சர் பொறுப்பு வகித்த நாவலர் பங்கேற்றார். காலை 10 முதல் பிற்பகல் 4 மணி வரை நடந்த கூட்டம். ஒரு சிறு இடைவேளையில், நாவலருடன் இருந்தவர் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் யோசனையாக ஒன்றைச் சொல்ல, "எதுக்கும் சரிபார்த்துக்கங்கப்பா. பாதிப்பு நேரும்னா இந்த வாத்தியானுங்க

படிப்பகம்

www.padippakam.com



ஒரேயடியா கத்துவானுங்க,'' என்றார். அவருக்கு முன்னால் இருந்த ஒலிவாங்கி அந்தக் குரலை நாவலரின் நாவடக்கமின்மையாக அநாகரிகப்படுத்தியது. ஆசிரியர்கள் பலர் எள்ளல் குறிப்போடு கண்ணடித்துக் கொண்டனர். என் அருகில் இருந்தவர் என்னிடம், ''பாருங்க, நம்ம நடமாடும் பல்கலைச் சவம் வாத்திகளுக்குக் கொடுக்கிற மரியாதையை. தலையெழுத்து'' என்று சற்று உரத்தே சொன்னார். அப்போது நாங்கள் உணவருந்திக் கொண்டிருந்தோம். அவர் சொன்னது நாவலருக்குக் கேட்கக் கூடிய தூரத்தில்தான் நாங்கள் இருந்தோம். ஆனால் ஒரு குறிப்பும் அவர் முகத்தில் இல்லை. கேட்டால்தான் என்ன? நாங்கள் அவரிடம் சண்டையிடத் தயாராயில்லாததுபோலவே, அவருக்கும் அதில் சண்டையிட ஒன்றுமில்லை. அவரிடம் அப்படியொரு மரத்தனம் மேவியிருந்ததாகத்தான் பொதுப் புலத்தில் ஒரு புரிதல்.

மாமனிதனாகவே இருக்கட்டுமே – இடம் மாறி அமர்ந்துவிட்டால் இப்படித்தான் மரத்துப்போவான் அல்லது நீர்த்துப் போவான் என்றோர் தேற்றத்தை அவர்பால் பொருத்தும்போது, தேருக்குப் பின்னால் புழுதியாடியபடி இழுபட்டுக் கொண்டு வரும் சன்னக் கட்டை போல கூடவே ஒரு சிலாம்பின் அருவலும் தட்டுப்பட்டதுண்டு. எதிலும் ஒன்றுமில்லை என்றால் ஒன்றுமில்லைதான். உற்று உற்றுப் பார்த்தால் அர்த்தங்களுக்கா பஞ்சம்! சேலத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் நாவலர் நிகழ்த்திய சொற்பொழிவை வீட்டிலிருந்தபடியே கேட்டு சொக்கிப் போய்த்தான் விசாலாட்சியம்மையார் 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே' என்றாற்போல் அவரைக் கட்டிக்கொண்டாராம்.

பெரியயார் ஏன் பெரியாராய் இருந்தார் எனில், அவர் சரியான இடத்தில் தன்னைப் பொருத்திக் கொண்டார் என்பதால்தான். இளந்தாடி இரா. நெடுஞ்செழியனுக்கும் அப்படியொரு பொருத்தம் இருந்தது. இடறிப் போய்விட்டது. மூல நரம்பே வர்மப்பிடிக்குட்பட்டாற்போல் பிசகிக்கொள்ள, அவர் நடையும் தடமும் சடைத்துப் போயின.

சிறுவயது பதிவென்பதாலோ என்னவோ, எனக்கு அவர் தாடி மீது எப்போதும் தீராத தகிப்புண்டு. மனிதன் ஒன்றும் மானில்லை என்றானபின், மனிதப் பிரச்சினைகள் மயிரில் உயிர்ப்பதில்லை என்றாலும், அது உள்ளூற்றத்தின் புறச்சின்னம் என்ற அளவிலும், எல்லாம் சிந்திப் போனதில் நாலு மணிகளையாவது பொறுக்கித் தேற்ற முடியுமா என்னும் ஆதங்கத்திலும் அதுபற்றியும் சொல்லத் தோன்றுகிறது. நெடுஞ்செழியன் தன் இளந்தாடியை அப்படியே முதிரவிட்டிருந்து, திமுகவும் பச்சோந்திகளின் அரசியல் தளமாகா

படிப்பகம்

www.padippakam.com



மல் சமூக இயக்கமாகவே தொடர்ந்திருந்தால், பெரியார் சகாப்தத்தின் உச்சக்கலசமாகவே உயர்ந்திருக்கக் கூடும். 'பின்னப்பட்டுக் கிடக்கும் அரசியல் களத்தில் நின்று இழுபடும் இவர் எப்படி?' என நேர்கோட்டு விமர்சகர்கள் திகைப்புறும்படி, அவர் தன் கடைசி மூச்சுவரை பகுத்தறிவுச் சிந்தனைகளை 'அது என் உயிர்த்தாகம்' என்னும்படி சலிக்காமல் பேசிக்கொண்டிருந்தார். அந்தப் பேருரையின் முற்றுப்புள்ளியாகத்தான் அவர் மூச்சு நின்றது என்றால் அது மிகையாகாது. கலசமும் புள்ளியும் நமக்கானால் வேறுவேறுதான். ஒன்று நிமிர்ந்தால் உச்சம். மற்றொன்று கிடந்தால் முற்றும். நாவலர் என்ன பாடுபட்டிருந்தால் 'எனக்கில்லை வேறுபாடு' என்று தீர்க்க முடிந்திருக்கும்! கழகத்தினர் பகுத்தறிவும் சுயமரியாதையும் பேசிக்கொண்டிருந்த காலத்தில் பாரதிதாசனை மாய்ந்து மாய்ந்து மேற்கோள் காட்டுவார்கள். காரணம், அவர் ஒருவர்தான் புதிய சிந்தனை வீச்சுகளை கவிதை வரிகளில் கனவிட்டுக்கொண்டிருந்தவர். அவர் அடியொற்றி ஒரு பரம்பரையே உயிர்த்தெழச் செய்தவர். மேற்கோள் காட்டியவர்கள் அதிகார அரசியலுக்குள் குடிபெயர்ந்து, 'முக்காடு எதற்கு?' என்று களைந்து போட்டதும் எல்லாம் காற்றோடு போயின. நாவலர் ஒருவர்தான் கடைசிவரை அந்தக் கவிஞனை வரிவரியாய் நினைவுகூர்ந்துகொண்டிருந்தவர், 'புரட்சிக்கவி இல்லையேல் எனக்குப் பேசவராது' என்படதைப்போல.

இறந்தவர்க்கு 'இறுதிச் சடங்குகள்' நடைபெறும். மதமாய் நடத்தும் வைதிகச் சடங்குகள்; சவமாய்க் கழிக்கும் கடைசிக் கடன்கள். நாவலர் சடங்கு சாத்திரங் களையப்பட்ட நல்ல நாத்திகராய்ப் போய்ச் சேர்ந்தார் என்னும்போது, 'அவர் எத்தனை மகத்தானவராய் வரலாறு படைத்திருக்க வேண்டியவர்' என்று மனங் குவிந்து மறுகத் தோன்றுகிறது.

## 2

சென்ற ஜனவரி மாதம் ஓர் அழைப்பிதழ் வந்தது. வடசென்னையில் கடந்த பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வரும் 'தமிழ்ப் பேரவை' அனுப்பியிருந்தது தமிழியல் துறையில் ஒரு சரியான திசைவழியைத் தொட்டுக் காட்டிய ஆய்வறிஞர் மயிலை சீனி வேங்கடசாமியின் நூற்றாண்டு விழா அழைப்பிதழ்.

மகிழ்ச்சியாயிருந்தது. அரசு கொண்டாட வேண்டிய விழாவை முந்திக் கொண்டு ஒரு சிறு அமைப்பு கொண்டாடுகிறதே என்று

படிப்பகம்

www.padippakam.com



வியப்பாகவும் இருந்தது. விழாவுக்குப் போனேன். அங்கு இன்னும் ஓர் அதிசயம் அழைப்பிதழ் சொன்னாற்போலவே கடைபரப்பியிருந்தது. மயிலையார் எழுதி அச்சில் வந்த நூல்கள், நூலாகாமல் பல்வேறு இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் என ஏறக்குறைய அவரது ஒட்டுமொத்த ஆய்வுரைகளையும் தேடிப்பிடித்து, நகலச்சு செய்து, தலைப்பிட்டு, கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தன. இது ஓர் அரிய பணி மட்டுமல்லாது உயரிய விழா நெறியாகவும் முன்னுதாரணமாகியிருந்தது.

சென்னைப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொற்கோ தலைமையில் நடந்த அந்த விழா அரங்கிலேயே மயிலையாரின் எழுத்துகளை நாட்டுடமையாக்கக் கோரும் விண்ணப்பத்தில் பார்வையாளர்களின் ஒப்பங்கள் பெறப்பட்டன. பேரவை முன்வைத்த நீண்ட நாள் கோரிக்கை அது.

இவை அனைத்தையும் சாத்தியப்படுத்தியவர் பற்றியும் சிறிது சொல்லியாக வேண்டும். புலவர் கோ.தேவராசன், M.A.B.Ed. என்பவர்தான் அவர். 'தமிழ்ப் பேரவை'யின் முதுகெலும்பு. துணை நிற்கத் தேவையான நண்பர் பட்டாளம் கொண்டவர். இவருக்கும் மயிலையாருக்கும் ஓர் அபூர்வ உறவுண்டு. மயிலையார் எந்தப் பள்ளியில் எந்தப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாரோ, அதே பள்ளியில் அதே பணியிடத்தில் சேர்ந்து தன் ஆசிரிய வாழ்வைத் தொடங்கியவர்– பழுத்த இலை கழன்றதும் குருத்து இலைதளிர்த்தாற்போல். ஆனால் நூற்றாண்டு விழா எடுக்க இது ஒன்று மட்டும் போதுமா என்ன? தேவராசன் தமிழை நேசிக்கவும், தமிழறிஞர்களைத் தேடிச்சென்று பழகவும் மதிக்கவும் பயின்றவர் என்பதே முதன்மைக் காரணம்.

அவரோடு பரிமாறிக்கொள்ளக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தில் 'வாசிப்பு' பற்றிப் பேச்சு திரும்பியபோது, மெய்யாகவே என்னை வியக்க வைத்தார். கொகோல் தொடங்கி கார்க்கி வரையிலான ரஷ்யப் படைப்பாளிகளின் அறுபதுக்கு மேற்பட்ட நூல்களைக் காசு கொடுத்து வாங்கி ஒருசேரப் படிக்கும் சந்தர்ப்பம் எனக்கு பெங்களூரில் வாய்த்தது. (சோவியத் யூனியனின் மாஸ்கோ பதிப்பக வெளியீடுகள் அப்படியொரு மலிவு விலையில் விற்கப்பட்ட நாள். நூல்களின் தயாரிப்பு தொட்டுத் தொட்டு முத்தமிடலாம் போல் அத்தனை நேர்த்தியாய் இருக்கும்.) நண்பர் தேவராசன் நான் படித்த பெரும்பாலான நூல்களோடு ஒன்றிரண்டு கூடுதலாகவே படித்திருப்பதாகச் சொன்னார். சொன்னதோடு, நயமான பல கதை நிகழ்வுகளை

—இதன் தொடர்ச்சி 96ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# தமிழ் - மலையாள இலக்கியப் போக்குகள்: ஓர் ஒப்பீடு

ஏ. எம். சாலன்

ஒரு காலகட்டத்தில் அளவுக்கு அதிகமான கற்பனைகளைச் சுமந்து வந்துகொண்டிருந்த நம் கலை இலக்கியப் படைப்புகள் இன்று அவைகளை உதறித் தள்ளிக்கொண்டு, மனித வாழ்வை அகமும் புறமும் ஆராய்ந்து படைத்துக் காட்ட ஆரம்பித்துள்ளன. இப்படி படைத்துக்காட்ட ஆரம்பித்ததற்குப் பிறகு, வாசகர்களின் மனங்கள் தங்களையும் தங்களைச் சுற்றி வாழ்பவர்களின் நிலைமைகளையும் உற்று நோக்கத் தொடங்கின. அதன் விளைவால் சிலர் தங்களை மாற்றிக்கொள்ள முயன்றனர். வேறு சிலர், தங்களைச் சுற்றி வாழும் மனிதர்களையும், அவர்களுடைய கருத்துகள், கண்ணோட்டங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றையும் மாற்ற முயன்றனர். மாத்திரமல்ல, தங்கள் கால அரசியல், பண்பாடு, பொருளாதாரக் கோட்பாடு போன்றவைகளையும், அவை மூலம் மனித வாழ்வுக்குள் நிகழ்ந்துகொண்டிருக்கும் மாறுதல்களையும் தொட்டுக் காட்டத் தொடங்கினர். மொத்தத்தில் நம் கால இலக்கியங்களையும், அவைகளின் போக்குகளையும் தொகுத்து நாம் கவனமாக ஆராய்ந்தோமானால், சமூகத்தின் வெடிப்புகளுக்குள்ளிருந்து அவ்வப்போது கிளர்ந்தெழுந்துகொண்டிருக்கும் புத்தம்புது கருத்துகள், கண்ணோட்டங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றை நம்மால் காண முடியும். எனவே, நாம் நம் கால இலக்கியப் போக்குகளை உதாசீனம் செய்யவோ, புறங்கையால் ஒதுக்கவோ கூடாது. இவைகளெல்லாம் நம்மை காலத்திற்கேற்றபடி புதுப்பிக்கச்செய்வதுடன் வழி நடத்தும் வல்லமையும் அவைகளுக்கு உண்டு.

அரசியல், பொருளாதாரம், சட்டம், மதம் போன்றவற்றைப் போல இலக்கியங்களும், இலக்கியக் கோட்பாடுகளும் நம்மை வெளிப்படையாகவோ பயமுறுத்தியோ வழிநடத்துபவைகளல்ல!

இவைகளின் நடவடிக்கைகள் ரொம்பவும் சூட்சுமமாக இருக்கக் கூடியவை! அவற்றை நம் கண்களால் பளீரென தெரிந்துகொள்ள இயலாது. அதே நேரத்தில், அவற்றால் நம்மை யாருக்கும் புலப்படாதவகையில் முன்னோக்கி இழுத்துக்கொண்டு செல்லவும், பின்னுக்குத் தள்ளவும் இயலும்.

படிப்பகம்

www.padippakam.com



கலை இலக்கியப் போக்குகளில் இப்போது பலவகைகள் தோன்றியிருக்கின்றன. (யதார்த்தவாதம், இயற்பண்புவாதம், சர்ரியலிஸம், சோசலிஸ யதார்த்தவாதம், நவீனத்துவம், பின்நவீனத்துவம் கற்பனாவாதம், இருத்தலியம், நீட்சேயிஸம் என.) இவைகளுக்குள் மனிதனை வாழ்விலிருந்து அன்னியப்படுத்துபவைகள், முன்னேறிச் செல்லவிடாமல் கால்கட்டு போடுபவைகள், மனிதனைக் கூறுபோட்டு அவனுக்குள்ளிருக்கும் பல அம்சங்களில் ஒன்றை மட்டும் பிரதானப்படுத்துபவைகள், எப்பாடுபட்டாவது மனிதனை முன்னிழுத்துச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தில் இயங்குபவைகள் என இப்படி பல தன்மைகளை மேற்கண்ட போக்குகள் தங்களுக்குள் பொதிந்து வைத்திருப்பதைக் காணலாம்.

இவை போக, இலக்கியத்துள் ‘மனித வாழ்வு,’ ‘மனித குல மேன்மை’ என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற கருத்தை அப்பட்டமாகத் தூக்கிப் பிடிப்பவர்களும் இருக்கிறார்க்ள்.

இவை சம்பந்தமாக சில உதாரணங்களைக் காண்போம்.

உதாரணத்திற்கு ‘தானும் ஒரு மார்க்சீயவாதிதான்’ எனச் சொல்லிக் கொள்ளும் திரு ஞானியின் வரிகள் ஒளித்து வைத்திருக்கும் கருத்துகளை வெளியே இழுத்துப் போடுவோமானால்– அவை கட்டுடைத்தலை வற்புறுத்துவதுடன், எது நல்லது – எது மோசமானது எனப் பரிசோதித்துப் பார்த்து ‘கட்சி சேருவதை’க் கூட அவர் கடுமையாக விமர்சனம் செய்வதைக் காணலாம்.

திரு. சுந்தரராமசாமியின் எழுத்துகளைப் பரிசோதித்தால் ‘இருத்தலியத்தை’ அவர் மிகவும் வற்புறுத்துவதைப் பார்க்கலாம்.

தமிழவனது படைப்புகளுக்குள் அவரது கதாபாத்திரங்கள் காலங்கடந்துபோன பழைய புராண – கதாபாத்திரங்கள் காட்டும் மாயாஜால வித்தைகளை தரிசிக்க முடியும்.

இதுபோல ஜெயகாந்தன், பொன்னீலன், டி.செல்வராஜ், கு.சின்னப்பபாரதி, செ.யோகநாதன் போன்றவர்களுடைய படைப்புகளுக்குள் நுழைந்தோமானால் அங்கு, மிக அசிங்கமான மனிதர்கள்கூட மனித வாழ்க்கைக்கு அழகும் வலிமையும் கூட்டுவதுடன், ஜாதி மத பேதங்களை மீறி, சண்டை சச்சரவின்றி வாழத் துடிப்பதைப் பார்க்கலாம்.

இவைகளிலிருந்து கொஞ்சம் வித்தியாசமான படைப்புகளும் இப்போது வரத்தொடங்கியுள்ளன. உதாரணமாக, பெண்கள் – அவர்களுடைய பிரச்சனைகள், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் என வரும் பெண்ணியப் படைப்புகள்! இதே

படிப்பகம்

www.padippakam.com



மாதிரி நம் இலக்கியத்திற்குள், தலித்துகள் இப்போது எழுப்பிக் கொண்டிருக்கும் புதிய குரல்கள்.

இப்படி பலப்பல இலக்கியப்போக்குகள் இன்று காணக்கிடைக் கின்றன.

முதலில் நாம் கண்ட இலக்கியவாதிகள், இவர்களிலிருந்து யதார்த்தம், கலையின் உள்ளடக்கம், படைக்கும்முறை இவைகளிலி ருந்து தங்களை மிகவும் வித்தியாசமானவர்களாகக் காட்டிக்கொள் ளுகிறார்கள்.

உதாரணமாக மனிதவாழ்வு, மனித குல மேன்மை, வர்க்கப் போராட்டம், சாதிய மேலாண்மைக்கு எதிரான குரல், சாதி சமத் துவம், ஆண் - பெண் சமத்துவம் – இம்மாதிரி விஷயங்களெல்லாம், முதலில் கண்ட இலக்கியவாதிகள் பலரால் தீண்டத்தகாதவைக ளாகவே இன்னும் பார்க்கப்படுகின்றன. மட்டுமல்ல! இவைகளெல் லாம் இலக்கியத்தின் கருப்பொருளாவதுகூட இவர்களுக்கு விருப் பம் இல்லாததுபோல் தோன்றுகிறது.

இவைகள் மட்டும்தான் இலக்கியத்தின் கருப்பொருளாக்கப்பட வேண்டும் என நாம் வாதிட விரும்பவில்லை. ஆனால் மனித னின் மேன்மை, அவனது அக-புற நடவடிக்கைகள், உணர்வுகள், அரசியல், பண்பாடு, சமூக பொருளாதார நடவடிக்கைகள், அவ னது ஆன்மீக உணர்வுகள், அழகுணர்ச்சிகள் அனைத்துமே கருப் பொருளாக்கப்பட வேண்டியவைகள்தாம்! இதில் சிலர், அந்நட வடிக்கையின் போதுள்ள 'மன நிலைக்கு மட்டுமே' பிரதானம் கொடுக்கப்பட வேண்டும் என வரிந்து கட்டிக்கொண்டு வருகி றார்கள். அப்படிப் படைக்கப்படுமானால் அந்நிகழ்ச்சி மீது கவ னம் குறைந்து போவதுமட்டுமல்ல, அந்நடவடிக்கையே சிறுமைப் பட்டுப் பின்னுக்குப் போய்விடும். மாத்திரமில்லை சித்திரமற்ற பிரக்ஞை ஒருபோதும் நெஞ்சில் தங்காது என்பதையும் நாம் அவர்களுக்குச் சொல்லவேண்டி இருக்கிறது.

குறிப்பாக திரு. தமிழவன், சுந்தரராமசாமி, ஞானி போன்ற வர்களிடமும், இளம் படைப்பாளர்களான கோணங்கி, ஜெயமோ கன் போன்றவர்களிடமும் மேற்கண்ட போக்குகள் தலைதூக்கி நிற்பதைப் பார்க்கலாம்.

இம்மாதிரியான இலக்கியப் போக்குகள் மலையாள இலக்கிய உலகிற்குள் ஏற்கனவே தோன்றி நசிந்து போன போக்குகள் என்பதை இந்த வேளையில் நாம் இங்கே சுட்ட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



திரு சுந்தரராமசாமி அவர்களுடைய 'புளியமரத்தின் கதை' நாவல் பற்றி குறிப்பிடும் பொழுது 'தமிழ் நாவலின் 'அந்தஸ்து இவ்வளவுதானா?' என மலையாள நண்பர்கள் கேட்டார்களாம்! (இது, ஆ.மாதவன் அவர்களால் சதங்கை காலாண்டிதழில் குறிப் பிடப்பட்டிருக்கிறது.)

வளர்ச்சியடைந்த இலக்கிய மாணாக்கர்களில் சிலர் 'இதென்ன கருத்துப்படங்கள் மாதிரி இக்கதாபாத்திரங்கள் படைக்கப்பட்டி ருக்கின்றன!' என ஜெ. ஜெ. சில குறிப்புகளில் வரும் கதாபாத் திரங்களைப் பார்த்து கேட்டதாக மாத்ருபூமி வெளியிட்டிருந்தது. —இவை நம் இலக்கியப் படைப்புகளின் தரத்தைக் காட்டும் உதாரணங்களாகும்.

(இது, தமிழ்ப் படைப்பிலக்கியத்தைப் பற்றி மலையாள இலக் கிய உலகில் நிலவும் கருத்தைச் சுட்டிக் காட்டுவதற்காக மட்டுமே எடுக்கப்பட்ட உதாரணம். அவ்வளவுதான்.)

அப்படியானால் மலையாள கலை இலக்கிய உலகில் கலை இலக்கியப் படைப்புகளுக்குள் வரும் கதாபாத்திரங்கள் எப்படி இருக்கும் என நமக்குக் கேட்கத் தோன்றலாம்.

அங்கும் இம்மாதிரியான (இருத்தலியம், அமைப்பியல், நீட் சேயிஸம், நவீனத்துவம், பின் நவீனத்துவம் எனப்) பல இலக் கியப் போக்குகள் தோன்றாமல் இல்லை. ஆனால், அவைகளெல் லாம் அன்று, வைகம் முகமது பஷீர், கேசவதேவ், தகழி, பொற் றேகாடு, கரூர், பொன்குன்னம் வர்க்கி, திருமதி லலிதா அந்தர் ஜனம் போன்ற பழுத்த இலக்கியவாதிகளாலும், இன்று ஒ. வி. விஜ யன், முகுந்தன், எம். டி. வாசுதேவன் நாயர், திருமதி மாதவிக் குட்டி, திரு. ராதாகிருஷ்ணன் போன்ற சிறந்த படைப்பாளிகளா லும் தலை தூக்க முடியாமல் ஆயிற்று.

அதாவது, இன்று நம்மிடையே பல விவாதத்தைக் கிளப்பியுள்ள (அமைப்பியல், இருத்தலியம், நவீனத்துவம், பின் நவீனத்துவம்) இலக்கியக் கோட்பாடுகளைத் தப்முள் பொதிந்து கொண்டுவரும் படைப்புகளைப் பற்றிப் பிரபல மலையாள இலக்கிய விமர்சகரான எம். கிருஷ்ணநாயர் சொல்கிறார்:

'அவைகளெல்லாம் இங்கு (மலையாள இலக்கியத்துள்) என்றோ செத்து ஒடுங்கிவிட்டன.'

மேலும்,

'அம்மாதிரி படைப்புகளெல்லாம், ஒரு குறிப்பிட்ட காலகட்

படிப்பகம்

www.padippakam.com



டத்தின் தேவையால், தோன்றி மறைபவைகளேயன்றி நிலையான வைகளல்ல' என்றும் கூறுகிறார்.

படைப்பிலக்கியத்தைப் பற்றிப்பேசும்போது 'நாங்கள் படைப்பது மட்டும்தான் இலக்கியம்' என நம்மில் பலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவ்விலக்கிய விமர்சகர் சொல்கிறார்: ''வளைந்தும் நெளிந்தும் முன்னோக்கிப் போய்க்கொண்டிருக்கும் நம் இலக்கிய நதியின்– ஒரு வளைவு அல்லது நெளிவு மட்டும்தான் அது.''

இனி, மலையாள இலக்கியங்களை எடுத்து நாம் தொகுத்து ஆராய்ந்தோமானால், 40களிலிருந்தே சமூகத்தை குடைந்து ஆராய்ந்து எழுதத் தொடங்கியிருப்பதைக் காணலாம். அது மட்டுமல்ல. கலை இலக்கியப் படைப்புகளுக்குள் சூட்சும தன்மைக்கு அப்போதே அதிமுக்கியத்துவம் கொடுத்து படைக்கப்பட்டிருப்பதாகவும் தோன்றவில்லை. அதற்காக சூட்சும தன்மையே இல்லையென்றும் சொல்லிவிட முடியாது. அப்படியே அது வந்தாலும், அப்படைப்புகளுக்குள் தங்கியிருக்கும் கருப்பொருளுக்கு எந்த விதத்தாலும் கெடுதல் புரியவோ– அப்பொருளின் பிரகாசத்தை மங்கச் செய்யும் விதத்திலோ கையாளப்படவில்லை. இதற்கு மாறாகப் படைக்கப்பட்ட படைப்புகளும் இங்கு இருந்தன. அவைகள் தரமான, மனிதநேயம் மிகுந்த பாரதியைப்போல மக்களுக்கு எளிதில் புரியும் விதத்தில் படைக்கப்பட்ட படைப்புகளால் விரட்டியடிக்கப்பட்டுவிட்டன. இதைத்தானே எம்.கிருஷ்ண நாயருடைய வார்த்தைகளும் காட்டுகின்றன!

சொல்லப்போனால், சாதீய மேலாண்மைக்கு எதிரான படைப்புகளும் இங்கு குறைவு. காரணம், சாதீய மேலாண்மை இனி ஒரு போதும் தலைதூக்க முடியாதபடி இங்கு சாகடிக்கப்பட்டுவிட்டது என்றுகூடச் சொல்லலாம். இனி மூடல் தன்மையுள்ள படைப்புகளுக்கு இங்கு அவ்வளவு வரவேற்பு கிடையாது. அதற்காக மூடல் தன்மையே கிடையாது என்று பொருளல்ல. ஆனால் நம்மிடையேயோ அம்மாதிரியான படைப்புகள் இன்று பெருகிக்கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

ஒருவேளை தமிழ்நாட்டிற்குள் அம்மாதிரியான இலக்கியப் படைப்புகள் தோன்றக்கூடிய காலமோ என்னவோ!

பொதுவாக நாம் மலையாள இலக்கியத்தை எடுத்துப் பரிசோதித்தோமானால்,— நம் நாட்டில்போல பலவகையான போக்குகள் காணப்படத்தான் செய்கின்றன. இங்கே நடப்பது மாதிரி

படிப்பகம்

www.padippakam.com



யான விவாதங்களும் -எதிர்வாதங்களும் நடைபெறத்தான் செய்கின்றன. ஆனால் அவையெல்லாவற்றையும் தொகுத்து ஒரு வார்த்தையில் சொல்வதானால் மலையாள இலக்கியத்தின் அடிநாதமே மக்களும் அவர்களின் வாழ்க்கையும்- அவற்றுக்குள்ளே காலங்காலமாக நிகழ்ந்துகொண்டிருக்கும் மாறுதல்களும்தான் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும்.

இங்குள்ள கலை இலக்கியப் படைப்புகள் ‘முற்போக்கு – பிற்போக்கு’ என்ற உடைகளைத் தரித்து வந்தாலும்கூட பாமரனும் பண்டிதனும் ஒருபோலப் புரிந்துகொள்ளக்கூடிய தெள்ளத் தெளிவான– எளிதில் புரியக்கூடிய படைப்புகளாகவே இருக்கும்.

முற்போக்கு இலக்கியவாதியான திரு. ஈ. எம். எஸ்.ஸும் அவருக்கு எதிரான வாதத்தை முன் வைக்கும் பேராசிரியர் குப்தன் நாயரும் இலக்கிய ரீதியாக சண்டை போடும் போதுகூட மனித அடித்தளத்தை அவர்கள் விட்டுவிடுவதில்லை. (இருவரும் வெவ்வேறு இலக்கியக்கொள்கைகளையுடையவர்களாக இருந்தபோதிலுங்கூட.)

இயற்கை, தனிமனிதன், சமூகம்- இவை பற்றியும் இவைகளுக்கிடையே காலங்காலமாக நிலவிக்கொண்டிருக்கும் உறவு பற்றியும் தான் இங்கேயுள்ள படைப்பாளிகளும் அலசி ஆராய்ந்து வருகிறார்கள். குடும்பம், அரசியல், பொருளாதாரம் என இவைகளையும் அகமும் – புறமுமாக படைப்பாளிகள் துருவித்துருவி ஆராயத்தான் செய்கிறார்கள். ஆனால் இவர்களெல்லாருமே கலை இலக்கியத்தால் சமூகத்தையும் சமூகத்தால் கலை இலக்கியத்தையும் பரஸ்பரம் செழுமைப்படுத்தவும் தவறுவதில்லை.

மேலே கண்டவைகளைத் தவிர பாலியல் விவகாரம், மர்மத்தன்மை போன்றவைகளை உள்ளடக்கிய படைப்புகள் இருமொழிகளிலுமே உலாவுகின்றன. ஆனால் இம்மாதிரி படைப்புகளுக்கு மலையாள இலக்கிய உலகில் வாசகர்கள் ரொம்பக் குறைவு என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்பீடு

# அங்கதமாய் ஒரு சமூக ஆவணம்

ந. முருகேச பாண்டியன்

வரலாற்றின் பக்கங்களைப் புரட்டினால், காலந்தோறும் ஒடுக்கப்பட்டவர்களின் பலவீனமான குரல் ஒலிப்பதைக் கேட்க முடிகிறது. மக்கள் வரலாறானது ஒடுக்குமுறையாளன் × நசுக்கப்பட்டவன், நன்மை × தீமை... என முரணில் விரிகிறது. படைப்பு என்பது கருத்து வெளிப்பாட்டின் வடிவமெனில், படைப்பாளி கருத்தற்ற பிண்டமாக இருக்க முடியாது. சுற்றியெங்கும் நிகழும் சம்பவங்களின் அழுத்தம் காரணமாகப் படைப்பாளி வேதனைப்படுகிறான். சமூகப் பிரச்னைகளை வரலாற்றுப் பார்வையுடன் அலசி ஆராயும் மனநிலையும் சமூக அக்கறையும் இருப்பின் கூகிவா தியாங்கோ எழுதிய 'சிலுவையில் தொங்கும் சாத்தான்' போன்ற நூல்கள் எழுதப்படுகின்றன. கிழக்கு ஆப்ரிக்க நாடான கென்யாவின் இரு நூற்றாண்டு கால மக்கள் வாழ்க்கையும் நடப்புச் சம்பவங்களும் கூகியின் நாவலுக்குப் பின்புலமாக அமைந்துள்ளன.

கடந்த முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் உலகமெங்கும் வணிகம் செய்வதற்காகக் கப்பலில் புறப்பட்ட ஐரோப்பியர், நாளடைவில் ஆசிய, ஆப்ரிக்க நாடுகளைப் போர்கள், வன்முறைகள், பிரித்தாளும் சூழ்ச்சிகள் மூலம் தமது காலனியாக்கிக் கொண்டனர். கறுப்பின மக்களை அடிமைகளாக அமெரிக்காவில் விற்றனர். கல்வியறிவின்மையும் பொருளியல் வளமும் குறைந்த ஆசிய, ஆப்ரிக்க நாடுகளைச் சுரண்டிக் கொழுத்தனர். காலனிய பக்களின் தொழில், கலை, பண்பாடு போன்ற அடையாளங்களைச் சிதைத்தனர். இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய விழிப்புணர்ச்சி காரணமாகப் போராடிய காலனிய மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி, ஆட்சியைத் தமது விசுவாசிகளிடம் ஒப்படைத்துவிட்டுக் கப்பலேறினர். எனினும் தொழில் முதலீடு, நிதி மூலதனம், உலகவங்கி, ஐ. எம். எப்., டங்கல், காட் போன்றன மூலம் தமது பொருளியல் மேலாண்மையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர். இது ஆசிய ஆப்ரிக்க நாடுகளின் சோகமான வரலாறாகும். இந்த வரலாற்றை எப்படி நாவலாக்க முடியும்? அது அப்பட்டமான பிரசாரமாகி விடாதா? போன்ற கேள்விகளுக்கு நேர்மறையான விடையாக சிலுவையில் தொங்கும் சாத்தான் நாவல் படைக்கப்பட்டுள்ளது.

சிலுவையில் தொங்கும் சாத்தான் என்ற பெயர் கிறித்துவ சமய ரீதியிலான 'சிலுவை-சாத்தான்' குறியீட்டை மாற்றிப் புதிய

படிப்பகம்

www.padippakam.com



விளக்கம் தருவதாக உள்ளது. 'ஏகாதிபத்தியம் என்ற சாத்தானைப் போராளிகளும் மக்களும் சேர்ந்து சிலுவையில் அறைந்தாலும், அதை உடனே கீழிறிக்கி உயிருள்ளதாக மாற்றுகின்றனர் சாத்தானின் சீடர்களான தொழிலதிபர்கள். எங்கும் சாத்தானின் சீடர்களுடைய ராஜ்யம் நடைபெறுகிறது. ஏகாதிபத்தியத்தின் குரூர முகத்தைப் பல்வேறு தொல்கதைகள், புனைகதைகள், அதியற்புதப் புனைவுகள் மூலம் கூகி அம்பலப்படுத்துகிறார். கறுப்பின மக்களின் பழங்கதைகள் சொல்லும் முறையில் விரியும் நாவல் பிரச்சினையின் பல்வேறு அம்சங்களையும் அலசுகிறது. ஜெர்மானிய நாடக ஆசிரியரான பிரெக்டின் 'காப்பிய அரங்கு' கோட்பாட்டினை நாவலுக்கும் பொருத்தியுள்ளது கதை மொழியானது விவாதமாக உருவெடுக்க உதவுகிறது நாவல் வரிகள் மூலம் கதைக்குள் பயணமாகும் வாசகரிடம் ஆழமான விவாதம் முன் வைக்கப்படுகிறது. தருக்க ரீதியில் கூகியின் கதை மொழியானது வாசகனைக் கருத்தியல் நிலைபாடு கொள்ளத் தூண்டுகிறது.

ஆங்கிலேய ஏகாதிபத்திய அடிமைத் தளையிலிருந்து கென்யா நாட்டை விடுவிக்க மாவ்மாவ் தலைமையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டம் வெற்றியடைந்து நாடு விடுதலையடைந்தது. வெள்ளைத் தோல் மனிதர்களுக்குப் பதிலாகக் கறுப்புத் தோல் மனிதர்கள் அதிகார பீடம் ஏறினர். அதிகாரத்துவத்தின் ஆளுமையானது அடித்தள மக்களை நசுக்கியது. வெள்ளையர் ஆட்சியின் விசுவாசிகளும், தரகு முதலாளிகளும் அதிகார வர்க்கமாக மாறி, விடுதலையடைந்த கென்யாவின் பொருளாதாரத்தைக் கைப்பற்றினர். கறுப்பர்களின் தாய்மொழி அழிக்கப்படுகிறது. கறுப்பினப் பண்பாட்டின் வேர்கள் அறுந்து போகுமளவு சூழல் மாசுபடுகிறது. தமது அடையாளத்தை மறக்கும் மக்கள், வெளுத்த தோலை ஆராதிக்கிற மனநிலையுடையவராக மாறுகின்றனர். சிவந்த தோல் அழகு என்ற பிரேமையில் களிம்புகளைப் பூசிக் கொண்டு இயற்கையழகைச் சிதைத்துக் கொள்கின்றனர். அரசின் ஆயுத அடக்குமுறையைவிட பண்பாட்டு வன்முறை மிகவும் கொடியது. கருத்தியல் ரீதியில் கென்ய மக்கள், தமது கறுப்பின வேர்களின் மேன்மையை மறந்து வெளுத்த தோல் நாகரிகம் சிறந்தது என நம்புவது பண்பாட்டின் வீழ்ச்சியாகும். பள்ளி செல்லும் மாணவிகள் கர்ப்பமடைதல், மேலைநாட்டுச் சுற்றுலா பயணிகளின் பாலியல் வேட்கைக்கு இளம் பெண்கள் பலியாதல், மலஜலம் நிரம்பி வழிந்தோடும் அசுத்தமான சேரிகளில் பெரும்பான்மையான மக்கள் வாழ்தல்... கென்ய மக்களின் வாழ்க்கை சீரழிகிறது. ஏகாதிபத்தியங்களுக்கு அடிவருடும் தரகு முதலாளிகள் செல்வச் செழிப்பில் மிதக்கின்றனர்...

படிப்பகம்

www.padippakam.com



சாத்தான் சீடர்களின் அதிகாரத்துவ ஆட்சியில் சாதாரண மனுஷர்கள் எப்படி வாழ்கின்றனர்?

ஜசிந்தா வரீய்ங்கா, கத்தூய்ரியா, வங்காரி, மூதூரி போன்றோரின் வாழ்க்கைச் சம்பவங்களை விவரிக்கும் கூகி 'வகை மாதிரி' மூலம் பரந்துபட்ட கென்ய மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்த முயன்றுள்ளார். நாவலின் சொல்லாடல், குறிப்பிட்ட பாத்திரத்தின் கதைமட்டுமல்ல. ஆயிரமாயிரம் வரீய்ங்காக்களின் பிரதிநிதியாக வரீய்ங்கா சித்தரிக்கப்பட்டுள்ளாள். இதைச் சராசரி வாசகனாலும் புரிந்துகொள்ள முடியும். மாவ்மாவ் ஆங்கிலேயருக்கெதிராக நடத்திய போராட்டத்தில் பங்கேற்ற வங்காரி, இன்று அடுத்தவேளை உணவுக்காகக் கூலிவேலை தேடியலைவது, சாத்தானைச் சிலுவையில் அறைந்த மனிதர்களுக்கு நேர்ந்த கதியைச் சொல்வதாகும். விடுதலையடைந்த கென்யாவில் வங்காரி, விரும்பிய நகருக்குச் செல்வது கூடாது என்ற தடையானது அரசு மீது நுணுக்கமான கேள்விகளை எழுப்புகிறது. பல்கலைக் கழக ஆய்வு மாணவரான காத்தூய்ரியா, கென்யப் பண்பாட்டின் ஆணிவேரினை இசையின் மூலம் கண்டறிய முயலுகிறான். தொழிலாளியான மூதூரியும் நாவலில் முக்கிய இடம் பெறுகிறார்.

இல்மொராக் நகரில் திருடர் மற்றும் கொள்ளையர் குகையில் நடைபெறும் 'சாத்தானின் விருந்து' முக்கிய திருப்பு முனையாகும். அது தனிமனித வாழ்க்கையனுபவத்திலிருந்து அரசியலுக்கு கதையாடலை மாற்றுகிறது. இதுவரை யதார்த்தமாகக் கதை சொல்லி வந்த கூகி, கதையாடலைச் சிதைத்து முற்றிலும் புனைவு மொழிக்குள் நுழைகிறார். நைரோபி நகரிலிருந்து இல்மொராக் நகருக்கு முவாரா சொந்தமாக ஓட்டும் மட்டாட்டா மட்டாடு வண்டியில் பயணம் செய்யும் பயணியர் சூழல் விசித்திரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஓட்டுநர் முவாராவின் வெற்று ஜாலப் பேச்சு அலுப்பூட்டினாலும் ஏதோ நடக்கப் போவது போன்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறது. முவாராவின் அகடவிகடமான பேச்சு, அவன்தான் சாத்தானோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது. வண்டியினுள் நடைபெறும் முடிவற்ற விவாதங்கள், இடையிடையே வரும் பாடல்கள், வர்ணனைகள் பிரதியின் ஒற்றை வாசிப்பை சிதைத்துப் பன்முக வாசிப்பில் வாசகக் கருத்தைத் தோற்றுவிக்க முயலுகின்றன.

நாவல் முழுக்க அங்கதம் பரவியுள்ளது. கூகி எந்த விஷயத்தை விவரித்தாலும் அங்கதச் சுவை மிளிரக் கூறுகிறார். மிகவும் தீவிரத்துடன் அணுகவேண்டிய சம்பவத்தைக்கூட அங்கதப் படுத்துகிறார். அங்கதத்தின் உச்சக்கட்டம் தான் இல்மொராக்கா

படிப்பகம்

www.padippakam.com



வில் நடைபெறவுள்ள நவீன திருடர்களின் கூட்டம் பற்றிய துண்டுப் பிரசுரம். குகை– சாத்தான்– கொம்புகள் என ஏகாதிபத்திய வாதிகளின் மாநாட்டை மர்மமானதாக மாற்றுகிறார் கூகி. ஏழு வல்லரசு நாடுகளும் அவர்களுடன் தொடர்புகொள்ளவிருக்கும் தரகுக் கூட்டாளிகளுமென விரியும் சாதாரணமான காட்சியை நம்பவியலாத தளத்தில் நடைபெறுவதாகச் சித்தரிப்பதன் மூலம் நாவல் முன்னிறுத்தும் செய்திக்கு வலு கிடைக்கிறது. சர்வதேசத் திருடர்களான ஏகாதிபத்தியவாதிகளின் முன்னர் தரப்படும் வாக்குமூலங்கள் முக்கியமானவை. அவை கென்ய ஆளும் வர்க்கத்தின் நாடித் துடிப்பாகும்.

1. கிதுவா கட்டங்கூரு வாக்குமூலம்.
2. கிஹாஹூவா கதீகா வாக்குமூலம்.
3. விரேரிவா மூகிராய் வாக்குமூலம்.

மூவரும் போட்டியிட்டுக்கொண்டு தமது கேவலமான வாழ்க்கை நிலை, மக்களைக் கொள்ளையடித்து செல்வந்தரான சூழல், பெண்களுடான விபச்சாரம், சீரழிவான அரசியல் வாழ்க்கை என வாக்குமூலம் தருகின்றனர். இப்படியொரு சம்பவம் முற்றிலும் கற்பனையே என்றாலும் கூகி உற்சாகத்துடன் புதியதான வடிவில் அவர்கள் வாய் மூலமாகவே கென்யா சுரண்டப்பட்ட கதையைக் கூறியுள்ளார். முதலிருவரும் ஏகாதிபத்திய வாதிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ளத் துடிக்கின்றனர். மூன்றாவதாக மூகிராய், கென்ய நாட்டின் வளத்தை ஏகாதியத்தியக் கூட்டில்லாமல் கென்யர்களே கொள்ளையடிக்க வேண்டுமென்று தேசிய முதலாளித்துவப் பாதையை வலியுறுத்துகிறார். எனவே அவர் சாத்தானின் சீடர்களால் கொல்லப்படுகிறார்.

தரிசு நிலங்களை மலிவாக வாங்கி வீட்டுமனையாகப் பிரித்து பில்லியனராக மாறும் இதுவா, 'ஆங்கிலேயப் பள்ளி' என்ற பெயரில் கென்யர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திப் பில்லியனராகும் கிஹாஹூவா என இருவரும் தரும் வாக்குமூலங்கள் முழுக்க அகந்தையும் அங்கதமும் நிரம்பியவனவாக உள்ளன. மக்களைச் சட்டரீதியாகச் சுரண்டும் பணக்காரர்களின் கடந்த கால வாழ்க்கை முகத்திலறைந்தது போல் தகிக்கிறது. "நீங்கள்தான் எங்கள் முத வீடுகளுக்கு உள்ளூர் காவல் நாய்கள்" என்று வாக்குமூலம் தரும் பில்லியனர்களைப் பார்த்துச் சர்வதேச திருடர் தலைவர் கூறுவது முக்கியமானதாகும். மேலும் அவர் "என் சொந்தநாட்டுக்கு முன் வாசல் வழியாக நான் அனுப்பி வைக்கப்பட்டால், அங்கிருந்து இந்த நாட்டின் பின் வாசல் வழியாக மறுபடியும் இங்கு நுழைந்து விடுவேன்" என்கிறார். சாத்தான்களான ஏகாதிபத்தியவாதிகள்

படிப்பகம்

www.padippakam.com



எந்த நிலையிலும் எந்த வடிவிலும் நுழைய முயலுவார்கள் என்பது ஒரு நாட்டின் இறையாண்மைக்கு விடப்பட்ட சவாலாகும்.

குகையில் சர்வதேச கொள்ளையர்கள், உள்ளூர்த் திருடர்களின் பேச்சைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வங்காரி, இவர்களைப் பற்றிய செய்தியறிந்தால் காவல்துறை கைது செய்துவிடும் என பாமரத்தன மாக நம்புகிறாள். இறுதியில் அவளே கைது செய்யப்படுகிறாள்.

கென்யாவின் எதிர்காலம் என்னவாகும் என யோசித்த கூகி, கென்யப் பண்பாட்டின் வேர்களை இசையில் கண்டறிந்த கத்தூய்ரியா, தொழில் கற்றுத் தேர்ந்து புதிய கருத்துகளுடைய வரீய்ங்கா, மக்களுக்காக ஊர்வலம் நடத்தும் மாணவர் தலைவர், தொழிலாளியான மூதூரி என நம்பிக்கை தரும் மனிதர்களை முதன்மைப் படுத்துகிறார்.

வாசிப்புப் பழக்கம் அருகி வரும் தமிழகச் சூழலில் கென்யாவிலுள்ள கிக்கூயூ மொழியில் எழுதப்பட்ட சமூகப் பதிவாக விளங்கும் நாவலைத் தேடிக் கண்டுபிடித்துத் தமிழில் வெளியிட்ட பதிப்பகத்தாரின் நோக்கம் பாராட்டப்பட வேண்டியதாகும். 384 பக்க அளவிலான நாவலைத் தமிழ் மொழியமைப்பிற்கேற்பச் சரளமாக மொழிபெயர்த்துள்ள அமரந்தா-சிங்கராயர் ஆகிய இருவரின் கடும் உழைப்பு ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்பட்டுள்ளது.

சிலுவையில் தொங்கும் சாத்தான் நாவல் சித்தரிக்கும் கதையுலகு, கிக்கூயூ மொழி பேசும் மக்களுக்கு மட்டுமல்லாமல், இந்தியச் சூழலுக்கும் பொருந்துவதாக உள்ளது. இந்திய சமூக, அரசியல் நிலையை கூகி போல் விசாரணை செய்து கருத்தியலை முன் வைத்து நாவல் படைக்கும் பொழுது இந்நூல் தமிழில் வெளியான தன் நோக்கம் நிறைவேறும்.

அரசியல், மக்களின் சமூக வாழ்க்கை, பண்பாட்டில் ஏற்படுத்தும் மாற்றங்களை நுணுக்கமாகவும் கலையழகுடனும் சித்தரித்துள்ள சிலுவையில் தொங்கும் சாத்தான் நாவல் சமூக ஆவணமாக விளங்குகிறது. சமூக அக்கறையுள்ள ஒவ்வொருவரும் அவசியம் வாசித்து விவாதிக்க வேண்டிய இந்நாவல் காலத்தின் தேவையாக தமிழில் வெளியாகியுள்ளது.

**சிலுவையில் தொங்கும் சாத்தான்** (நாவல்)
கூகி வா தியாங்கோ
தமிழில்: அமரந்தா – சிங்கராயர்
தாமரைச்செல்வி பதிப்பகம், 31/48, ராணி அண்ணா நகர்
கலைஞர் நகர், பக். 421, விலை ரூ. 125 ●

படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்பீடு

# குறிப்பிடத் தகுந்த தொகுப்பு

**ம. மதிவண்ணன்**

தலித் கவிஞராய் அறியப்பட்ட என்.டி.ராஜ்குமாரின் இரண்டாவது தொகுப்பாய் வந்திருக்கும் 'ஒடக்கு' தொகுப்பிலுள்ள கவிதைகளை 3 வகைகளாய்த் தொகுத்துக்கொள்ளலாம் எனத் தோன்றுகிறது.

1. நவீனக் கவிஞர்களின் அறிதலுக்கு வராத, மண்ணில் வேர் கொண்ட நாட்டார் கலாச்சாரம், நம்பிக்கைகள், சடங்கு வாழ்க்கை சார்ந்த புது உலகமொன்றை ஒரு கூத்துக் கலைஞனுக்குரிய அடவுகளோடு முன்வைக்கும் கவிதைகளை முதல் வகையிலானவை எனலாம். இவ்வகை கவிதைகளில் நரபலி கேட்கும் கொல்லங்கோட்டு அம்மனும், ரணச்சோறு கேட்கும் இசக்கியம்மனும், வெறிக்கூத்தாடும் அயனியோட்டுத் தம்புரானும், பிணம் சுவைக்கும் சுடுகாட்டுச் சுடலையும், நாக்குத் துருத்தி நிற்கும் பத்ரகாளியும் புனைவுகள் உதிர்ந்த தங்கள் கதைகளுடன் காணக் கிடைக்கிறார்கள். தான் வாழும் மண்ணின் நேற்றைய- இன்றைய இருப்பின் நிலைகளைத் தான் பிறந்த கணியான் குடி சார்ந்த ஒரு அடித்தட்டுப் பார்வையில் நமக்குக் காட்டித் தரும் ஒரு கலைடாஸ்கோப்பாகக் காட்சி தருகிறன்றன இவ்வகைக் கவிதைகள். குமரி மண்ணின் வட்டார வழக்கும் அடித்தட்டுப் பார்வையும் இக்கவிதைகளின் பலம் என்றால், குமரித் தமிழில் பழமலய் பேசுவது போன்ற தோற்றத்தைத் தருமளவுக்கு பாதித்து விட்டிருக்கும் பழமலய்யின் நடை இக்கவிதைகளின் பலவீனம் என்று தோன்றுகிறது.

2. பொதுப் புத்தியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள புராணீகம், சமூகம் சார்ந்த மதிப்பீடுகளைப் புரட்டிப்போட்டு அதிர்வுக்குள்ளாக்கும் கலகக்கூறுகள் கொண்டவை இரண்டாவது வகையான கவிதைகள். ஒரு கவிதை கவிதைக்கென ஏற்றுவித்திருக்கும் புனிதத்தைப் போட்டுடைக்கிறது 'இரண்டாயிரம் ஆண்டுகளாய் / பொத்தி வைத்திருந்த கற்பு / என் கவிதையின் யோனிக்கிடையில் / நசுங்கிச் செத்தது' என்று.

குண்டி கழுவ ஒதுக்கப்பட்ட இடக்கைப் பக்கத்தை உமையவளுக்குத் தந்த ஈசனை கேள்வி கேட்கிறது ஒரு கவிதை. அப்பா விட்ட குசுவை வெகுவாகச் சிலாகித்து மகிழ்கிறது ஒரு கவிதை.

'சூரியன் எப்படி ஒருத்திக்குக் / கணவனாக முடியும் / எந்தத் தெம்மாடி ஏமாற்றிச் சென்றானோ / குந்திதேவியை' என்று பாரதத்தைப் பகடி பண்ணுகிறது ஒரு கவிதை.

படிப்பகம்

www.padippakam.com



'பரந்து மேய்ந்து தெருவோரம் பேண்டு வைத்த / காய்ந்த பீயைத் தின்று / குப்பைத் தொட்டியில் கிடக்கும் விலைஉயர்ந்த / தூமைத் துணியை மென்று அசை போட்டு / குண்டி கழுவிப் போட்ட / தேங்கிக் கிடக்கும் நீர் குடித்துச் சென்றது கோமாதா' என்கிறது ஒரு கவிதை.

இவ்வகைக் கவிதைகளில் கிண்டலும் கலகக் குரலும் கூடிய தனித்தன்மையை ராஜ்குமாரிடம் நாம் கண்டுகொள்ள முடியும்.

3. மூன்றாவது வகையாக குடும்ப உறவுகள் மற்றும் காதல் உறவு சார்ந்தவற்றை முன்வைக்கும் சுயம் சார்ந்த கவிதைகளைச் சொல்லலாம்.

முருகனைப் பிடிச்சு வைச்சி வேலை வாங்க, சித்து வேலை செய்ய, பதினாலாம் பாதிராவில் தட்டிப்பாட, இயல்பாய் இருக்க, கற்றுக்கொடுப்பவராக, அவராகத் தான் பரிணமிக்க ஏங்கும்படி பார்த்துப் பார்த்துப் பிரமிக்கும் ஒரு ஆசானாகத் தன் தந்தை குறித்த படிமத்தை முன்வைக்கும் கவிஞர், பலவீனமுள்ளதும் கிழிந்ததும் பாசம் கொஞ்சுவதுமான ஒரு கலவையான பிம்பமாகத் தாயை அறியத் தருகிறார். பிஞ்சு கரளு வாடிப்போகுமென்ற கரிசனையோடு ரெண்டு பச்சை முட்டை உடைத்துத் தருவதும், கொஞ்சிப் பேசித் தாலாட்டி வாயில் நிறைத்துறங்க வைக்கும் ஆதி மனமுள்ளதாகவும், மொல கொடுத்த அம்மையைவிட முத்தம் கொடுத்த பொண்டாட்டி ஒசத்தியாகிட்டாளா என்கிற நம்பிக்கையற்ற கிழட்டு வார்த்தையில் கேட்பதாகவும், தன்னைப்போலல்லாத ஒரு பிள்ளை பெற்றுத்தரும் அன்பு மனைவிக்காக சோற்றில் விஷம் வைத்துக் கொல்லத்தக்கதாகவும் பிளவு கொண்டதாய்க் காணக் கிடைக்கிறது தாயின் பிம்பம்.

தனது தொல்குடியின், குடும்பத்தின், மின்மினிப் பூச்சியின் கதைகளைச் சொல்லும், தங்கள் காட்டுத் தெய்வங்களுடன் அன்னியோன்யமாய்ச் சண்டையிடும் பாட்டியும் காணக் கிடைக்கிறாள்.

முக்கியமாய்க் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை, வரலாறு சொல்லச் சொல்ல வன்மையான முத்தம் கொடுத்த, ஆலய மணியின் ஓசை கொண்டு வரும் பெயர்க்காரியுடனான உறவைப் பேசும் கவிதைகள்.

பல அசாதாரணமான கவிதைகளையும், சில மிகச் சராசரியான கவிதைகளையும் கொண்டுள்ள இத்தொகுப்பை சமீபமாய் வந்துள்ளவற்றுள் குறிப்பிடத்தகுந்த ஒன்று என்று தாராளமாய்ச் சொல்லலாம்.

ஒடக்கு / என் டி. ராஜ்குமார் / விலை ரூ. 20 / பக். 71 / கலை இலக்கியப் பெருமன்றம், 1, திருநாவுக்கரசு தெரு, திருவண்ணாமலை.

படிப்பகம்

www.padippakam.com



# களத்தைத் தேடி

ஏந்திரா

“சீ, விடு. இது அவன் மாதிரி கிடக்கு” என்று நிறுத்திவிட்டு, கண்ணை மூடி உலகம் என் முன்னால் தவமிருப்பதைப் பார்த்துக்கொண்டேன். கண்ணை திறந்தபோது உண்டான வார்த்தைகளையும் ‘உறைப்பாயில்லை’ என்று நெஞ்சிலிருந்து கிழித்தெறிந்தேன். கலவரம் கேட்டு கண் விழித்தபோதெல்லாம் ‘ஆமியா?’ என்று குசுகுசுவென்று கேட்டும், பொஞ்சாதியைப் பற்றி ‘பாவம் தான்; ஆனால் படுமோசம்’ என்று எழுதிவிட்டு நித்திரைக்குச் சென்றேன்.

நான் எதிர்பார்க்காதபோது ‘அது’ வந்தது. எல்லாரும் எதிர்பார்த்த சத்தப் பின்னணிகளோடு.

எல்லாரையும் இழுத்துக்கொண்டு தெருவெல்லாம் உயிர் தெறிக்க ஓடிக்கொண்டே மனம் வானத்தைப் பார்த்து வந்த கவிதையை கத்திப் பாடமாக்கியது.

“என்னப்பா, செல் வருதா?” என்றாள் இளையவள். பயம் கலந்த நக்கலாக இருந்தது.

அந்த வார்த்தையை விடாதே பிடிபிடி என்றது மனது. ஓடு ஓடு என்று கூடவே ஏதோ ஒத்துப் பாடியது.

“எங்கே போறியள்?” என்று பொத்துப்பொத்தென்று கிடங்கெல்லாம் விழுந்த சைக்கிளின் பதிவுகளை உள்வாங்கி பயந்து அதிர்ந்த பார்வையுடன் கேள்வியை என் பக்கம் வீசிவிட்டு “சைக்கிள இஞ்சால திருப்படா, கனகர் மாமா வீட்ட போவம்” என்று மூத்தவனைப் பார்த்துக் கத்தினாள் அவள்.

பதற்றத்தில் பயித்தியமாகிப்போன பல முகங்கள் அவள் மனப் பார்வைக்கு வந்திருக்குமோ –நான் என் செய்ய? இந்த உலகத்துக்காக உனக்கும் எனக்குமாக இந்த வார்த்தையை நினைவோடு அறைய வேண்டும்.

“அவயிப்ப அங்க இருக்கமாட்டினம். எல்லாரும் கோயிலுக்கு ஓடியிருப்பினம்” என்றாள் மூத்தவள்.

படிப்பகம்

www.padippakam.com



"சீச்சீ. அவைக்கு இன்னும் தெரியாம இருக்கும். சொல்லாட்டிச் சரியில்ல," என்று பதில் வந்தது.

"மாமாவுக்குத் தெரியாம இருக்காது. அங்க போய் போறதுக்குள்ள ஆமி வந்தாலும் வந்திருவான்," என்ற மகளை நிறுத்தி,

"சரி, நீங்க கோயில் பக்கம் ஓடுங்க. நான் போய்ச் சொல்லிப் போட்டு வாறன்" என்று சைக்கிளை மகளிடம் கொடுத்தேன். (நானும் இரு பெட்டைகளும் ஒரு சைக்கிளிலும் மகனும் தாயும் ஒன்றிலுமாக ஓடிக்கொண்டிருந்தோம்.)

"அவையள் இருந்தினமென்டா கூட்டியன்டு வாறன். நீங்க கெதியாப் போங்க" என்று அவளின் நம்பிக்கை அற்ற முதுகுக்கு நேரே கத்திவிட்டு கால்நடையாக ஓடினேன். சின்னவளை பாறில் வைத்து உழக்கியபடி "அப்பாவுக்கு நித்திரை தெளியேல்ல," என்று பெரியவள் தாயிடம் சொல்வது எனக்குக் கேட்டது.

எந்தச் சத்தங்களும் என் வரிகளைச் சாப்பிடக்கூடாது. என் தலைக்குமேல் எல்லாம் வந்து விழுந்து வெடிப்பதாகப்பட்ட உணர்வில் இருந்து விடுபடவும் வேகமாக ஓடினேன்.

"என்ன இந்த ஓட்டத்தில் வாற" என்று பதட்டப்பட்ட கனகருக்கு 'ஆ...ஆ...ஆமி வருது," என்று மூச்சு வாங்கினேன். அவர்களும் மூட்டை முடிச்சுகளுடன் தயாராகத்தான் இருந்தார்கள். ஆக, இளைப்பாற வழியற்றுப் போச்சு.

"தேர் கூட்டம் மாரிக் கிடக்கு. அதுசரி மாமி எங்க நிக்கிறன் என்டவ?" என்றான் பாபு.

–அடச்சீ. சொல்ல மறந்து போச்சு.

அப்படி இப்படித் தேடி முடியாமல் கொடிமரத்தடிக்கு வந்து சேருவதாகச் சொல்லிக்கொண்டு ஆளுக்கொரு பக்கமாய்த் தேடினோம். இல்லை. அவர்கள் வரவில்லை. சைக்கிள் பஞ்சரா?

"ஏன்டாப்பா. சின்ன பெட்டையளிட்ட சைக்கிளக் குடுத்தனி. விழுந்தடிச்சு கிழுந்தடிச்சுப் போட்டுதுகளோ தெரியேல்ல"- கனகம்மா விசாரித்தார்.

"வாறாண்டுதானே சொன்னதுகள். வருங்கள். ஒருத்தரும் தேடப்போக வேணாம். கண்டியளே... வெளியில கேட்கிற சத்தம் கேட்கேல்லயே" என்று உறுதிப்பாட்டு சன்னதத்தை குரலுக்கு

படிப்பகம்

www.padippakam.com



கொண்டுவந்து கத்தினார் ஏகாம்பரம். அங்கங்க நின்ற பொடிசுகள் இங்க வந்து வேடிக்கை பார்த்தது.

அகல அகல விரித்து அங்க இங்க பார்த்தாலும் கண்ணீர் உறங்க மறுத்தது.

"ஏகாம்பரமண்ணே, சத்தம் கொஞ்சம் ஓயுதுபோல கிடக்கு. முந்திமாதிரி வந்த ஆமி திரும்பிப் போட்டான்கள் போலக்கிடக்கு. நான் ஒருக்கா... போய்..."

முடிக்க முடியாது நின்ற என்னை நிதானத்தை வரவழைத்துப் பார்த்து "பொறுடாப்பா" என்றார்.

"பொடியள் நிப்பாட்டிப் போட்டான்கள் போலக் கிடக்கு. அவையள் பின்னேற பண்ணிட்டினம்" என்று பலமணிநேரத்தின் பின்பு தகவல் வந்தது.

வதந்தியா இல்லையா என்று ஆராய்ந்து முடிக்க மேலும் நேரம் பறந்தது.

ஏகாம்பரத்தார் நானும் வாறன் எண்டு கூடப் புறப்பட்டார்.

சைக்கிள்கள் பார் உடைந்து முன்சில்லு பின்சில்லாய் கிடக்க என் பிள்ளைகளின் தலை எங்கே, கால் எங்கே என்று நான் தேடினேன்.

ஏகாம்பரத்தார் தலையை உயர்த்தி என்னையோ, மெதுவாக அசைந்துகொண்டிருந்த மரங்களையோ பார்க்க முடியாது, மண்ணில் தலையைப் பலமுறை குத்தினார்.

இம்முறை நான் கண்ணீரை இழுத்துப் பிடிக்கவில்லை. நான் பார்த்தறியாத வேதனை வழிந்தது. அதற்கு அப்பாற்போய் நெஞ்சம் விறைத்தது.

"உனக்கு இருக்கிறதே ஒரு பொடியன். அவனையும் வெளியில அனுப்பாம வச்சிருக்கிற," என அன்று கதிர்காமர் பொஞ்சாதி திட்டியது நினைப்புக்கு வந்தது.

ஓ! நினைவில் இருந்ததும் போய்விட்டது. பொத்திப்பொத்தி வச்சிருந்தேன். கவிதை பறந்து போச்சு. எனக்கு முன்னிருந்த உலகு முன் தலை குனிந்துகொண்டேன்.

"அட மடையா, அழாதை. வா வாடா" என்று தழுதழுப்போடு இழுத்து என்னை நெஞ்சோடு போர்த்திக்கொண்டு யாரோ நடந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



"எல்லாம் போச்சு, எல்லாம் போச்சு" என்று குமுறியபடி அதிர்ந்த அவர் உடல் என்னோடு விட்டுவிட்டு மோதியது. கண்ணிற் கண்டவர்கள் எல்லாம் ஒப்பாரி வைத்தார்கள்.

கோயிலுக்குள் கால் வைத்தபோது மூச்சிரைத்தது. இரப்பை எரிஞ்ச எரிப்பை எழுதவா? இல்ல, காணாது. எவன் மாதிரியும் இல்லாம புதுசா எழுதோணும். காத்திருப்பம். எல்லாம் மறுபடி வரும். ●

---

பிரச்சினை பேசும் சிறுகதை

# ஆண்டாள் அக்கா

## மு. ராஜசேகரன்

அரைமணி நேரம் காத்திருந்து... ரயில் ஸ்டேஷனுக்குள் நுழைந்ததும் நான் அங்கிருந்து வெளியேறி விட்டேன். நானும் ஆண்டாள் அக்காவும் பேசுவதை யாரும் பார்த்துவிடக் கூடாதே! விறுவிறுவென நடந்து நேரே ஊத்தம்பட்டிப் பாதையிலிருந்த புளிய மரத்தடியில் போய் நின்றுகொண்டேன்.

நிலவு பிரகாசமாய் ஒளிர்ந்து கொண்டிருந்ததால், ரயிலில் வந்த கொட்டகுளத்துக்காரர்களெல்லாம் வரிசையாய்ச் சைக்கிளில் போவதை அங்கிருந்தே பார்க்க முடிந்தது. வரிசையாய் எல்லோருமே 'பெல்' அடித்துக் கொண்டு போனார்கள். (கொட்டகுளத்துச் சித்தப்பா மூன்றாவது சைக்கிள்காரர். டைனமோ எரிந்தது.) பள்ளத்தில் இறங்கினார்கள். சத்தம் போட்டு யாரோ யாரையோ இன்னொருத்தருக்குச் சொல்லிக்கொண்டு போன சப்தம் அவர்கள் பள்ளத்தில் இறங்க இறங்கத் தேய்ந்துகொண்டே போனது. எல்

படிப்பகம்

www.padippakam.com



லோரும் காளிகோயில் முக்கில் திரும்பி மறைவதற்காகக் காத்திருந்தேன். மறைந்ததும் சட்டென மீண்டும் ஸ்டேஷன் நோக்கிக் கிளம்பினேன். ஆனால் அதற்குள் பாதி தூரத்துக்கு வந்துவிட்டாள் ஆண்டாள் அக்கா.

''ஏன் அழுகிறிய? நீங்க அழுக அழுக எனக்கு மேக்கொண்டு மேக்கொண்டு கஷ்டமாயிருக்கு.''

''.........''

ஏதும் சொல்லாமல் மூக்குறிஞ்சி அழுகையைத் தொடர்ந்தாள். அதற்குள் 'சோட்டானிக்' கண்மாய்' வந்துவிட்டிருந்தது. நான் சட்டென அவள் இடது தோள் பற்றி நடையை நிறுத்தினேன். சற்று நகர்ந்து, தாடை தொட்டு முகம் திருப்பிப் பார்த்தேன். அவள் கீழே தரை பார்த்துக் குனிந்தாள். நான் மறுபடியும் முக வாய் பிடித்துச் சற்று மேலே தூக்கினேன். ஒரு கணம் மட்டும் என்னைப் பார்த்தாள். மறுபடியும் முகம் கவிழ்த்துக்கொண்டாள். அதற்குள், கண்ணுக்கருகில் மூக்குமேட்டில் கண்ணீரின் ஈரம் ஒரு முறை பளபளத்ததைக் கவனித்தேன். மறுபடி மறுபடி மூக்குறிஞ்சினாள். நான் கன்னத்தில் தட்டினேன்.

''ஹேய்- என்ன- இப்படி பண்ணா எப்படி? எனக்கு மட்டும் போக ஆசையா என்ன?''

மீண்டும் ஒருமுறை மூக்குறிஞ்சினாள். நான் முழுசாக முன் பக்கம் போய் நின்றேன். நெருங்கினேன். உடம்பில் உடம்பு படுமளவுக்கு நெருங்கி, முதுகு தடவி ஒருமுறை இருக்கிக் கட்டினேன். நெஞ்சோடு அவள் பிடித்திருந்த 'டிபன் பாக்ஸ் ஐ' என் நெஞ்சில் முட்டியது.

அவள் என்னமோ முனகியபடி ஆவேசமாய் அங்குமிங்கும் முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தாள். ''என்ன''? என்றேன். ''ம்?'' ''ம்?'' என்று மட்டும் சொல்லிக்கொண்டு முத்தமிட்டுக் கொண்டும் அங்குமிங்கும் கடித்துக்கொண்டுமாய் இருந்தாள். அப்போது எங்கள் உடம்பில் ஒரு பொட்டுத் துணியில்லை. எல்லாம் அவிழ்த்து கழுங்கடியில் முள் மரங்களுக்குள் இருந்த குகைக்குள் விரித்துப் படுத்திருந்தோம். அதுவரை அதுமாதிரி நிறையத் தடவைகள் படுத்திருக்கிறோம். ஆனால் ஒருமுறைகூட, பகலிலேயே அங்குபோக எல்லோரும் பயப்படுகிற மாதிரி, பாம்போ, பூச்சி கொட்டையோ... எதுவும் எங்களைத் தொந்தரவு செய்ததில்லை. ஒருவேளை நான் ஒரு முதிர்கன்னிக்கு உதவுகிறேனென்டதை மனிதர்களுக்குப் பதிலாக அவை புரிந்துகொண்டனவோ, என்னவோ?

படிப்பகம்

www.padippakam.com



அவள் அப்பாவுக்குக் கல்யாணமாகும்போது வயசு நாற்பத்து மூன்று. அம்மாவுக்கு முப்பத்தெட்டு. 'லேட் மேரீட்' லிஸ்ட். ஆனால் புத்தியில்லை இவ்வளவு வயசுக்கப்புறம் பிள்ளை பெற்றால் பாதுகாத்து வளர்க்க முடியுமா என்ற ஐயமெழுமளவுக்கு வைதீஸ்வரன் ஐயருக்குப் புத்தியில்லை. அம்மாவும் தடை பண்ண நினைக்கவில்லை. இருவரும் சேர்ந்து இரண்டு வருடம் முயன்றார்கள்: "கொள்ளிக்கு பிள்ளை வேணும். கொள்ளிக்குப் பிள்ளை வேணும்."

"பொறந்தது ஆம்புளப் புள்ளயா, பொம்புளப் புள்ளையா?" என்றவர்களில் சிலருக்கு "சனிப்பிள்ளை" என்று பதிலிறுத்தார் ஐயர். பெண்பிள்ளை பிறந்திருந்தது. பார்க்கவே அசிங்கமாய், கருப்பாய்...

ஆண்டாளுக்கு இரண்டு வயதாகும்போதே மரணப்படுக்கையில் விழுந்துவிட்ட ஐயர் கடைசி கணங்களில் சொன்னார்:

"என்னடி, வர்றவா எல்லாம் மூக்க மூக்கத் தொட்டுப் பார்க்கறா? போகப் போறேனா? காலன் வந்தாச்சா? ஹ்ம் ஹ்ம்–சரி. நீ ஒன்னுங் கவலப்படாதே. அன்னிக்கே கண்ணப்பச் செட்டியார் வந்தப்ப எல்லாஞ் சொல்லீட்டேன். 'பாத்துக்கறேன்'னுட்டார். பாத்துக்குவார், வாக்கு தவறாத மனுஷன். வருஷா வருஷம் அரிசியும் பருப்பும் புளியும் மொளகாயும் வந்துடும். நான் நாப்பது வருஷமா அவா கோயில்ல ஒழைச்சதுக்கு நன்றிக்கடன் செய்வார். நிம்மதியாய் பொங்கித் தின்னு, நிம்மதியாய்த் தூங்கி எழு. 'அங்க இங்க'னு பத்துப் பாத்திரமெல்லாம் தேய்க்கப் போகாதே."

குழந்தை அம்மாவின் தோளைப் பிடித்துக்கொண்டு அப்பா பேசுவது புரியாமல் வெறுமே முழித்துப் பார்த்துக் கொண்டுமட்டும் நின்றிருந்தது.

கண்ணப்பச்செட்டியாரும் நான்கைந்து ஆண்டுகளில் இறந்துவிட 'யாரும் தப்பா எடுத்துக்குனுறாதியத்தா. நாங்க என்ன ஒங்க குடுப்பத்துக்கு மட்டுமா செய்ய வேண்டியிருக்கு! சுத்துக் கிராமத்துலயும் நாப்பது குடும்பத்துக்குச் செய்ய வேண்டியிருக்கு! என்னமோ, அவரு இருந்த மட்டுக்கும் அள்ளியள்ளிக் குடுத்த 'லெட்சுமி'யும் இப்பம் பாத்து கையெ மூடிக்குணிட்டா. என்ன செய்யிறது? தயவுபண்ணி யாரும் தப்பா எடுத்துக்குனுறாதிய" என்று வீட்டுக்கார ஆச்சி சொல்லிவிட, ஆண்டாளின் அம்மா வேலைக்குப் போனாள். ஆனால் அவளுக்கும் எல்லாம் விழுந்துவிட, ஆண்டாள் வேலைக்குப் போனாள்.

படிப்பகம்

www.padippakam.com



பன்னிரண்டு வயதிலேயே ஆண்டாள் வேலைக்குப் போனாள். சீனிச் செட்டியார் வீட்டில் வேலை. குழந்தை பார்த்துக் கொள்கிற வேலை. குழந்தை வேகமாக வளர்ந்துவிட்டது. அப்புறம் பக்கத்து வீடுகளில் பத்துப் பாத்திரம். அப்புறம் பதினைந்து வயதில் பக்கத்து டவுனில் 'ஐவுளி'யில் துணி எடுத்துப் போடுகிற வேலை. அதுவே கடைசி வேலையாயிற்று.

கடைக்காரர் தேவர் ரொம்ப இரக்கப்பட்டு...ரயிலில் 'பாஸ்' அவர்தான் எடுத்துத் தருவார். வருடா வருடம் அவளுக்கும் அம்மாவுக்கும் துணி கொடுப்பார். கிராமத்தில் புளி உலுட்டும்போது புளி தருவார். அறுவடையின்போது நெல் தருவார். தேவர் ரொம்ப உதவினார். அவர்கள் பிழைப்பு ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால் பிழைப்பு மட்டுமே ஓடிக்கொண்டிருந்தது. அவளுக்குக் கல்யாணம் கில்யாணம்...

அன்று ரயிலில் வரும்போதே மழை கொட்டத் தொடங்கிவிட்டது. அப்போது நானும் அதே ரயிலில்தான் வந்துகொண்டிருந்தேன். அப்போது டவுனில் 'காலேஜ்' படித்துக்கொண்டிருந்தேன். ரயில் நின்றபோது இறங்கமுடியவில்லை. அப்படி அடித்தது மழை. என்றாலும் வேறு வழி? வேப்பமரத்துக்குக் கீழே 'ஓட்ரே ஓட்டம்.' ஸ்டேஷனின் கூடத்துக்குள் போய்விட்டேன்.

மழை நின்றதும் கொட்டகுளத்துச் சித்தப்பா, "எப்புடிப்பா போகப்போற? கொடை தரவா?" என்றார். ஃபார்மாலிட்டி! என்றாலும் என்ன செய்ய? பதில் சொல்லியே ஆகணுமே, "இல்ல. வேணாம். போயிருவேன்" என்று வானத்தை எட்டிப்பார்த்துவிட்டுச் சொன்னேன். "சரி. அப்ப வாரேன்" என்று விட்டு அவர் கிளம்ப, பின்னாலேயே மொத்த கொட்டகுளத்துப் படையும் போயிற்று. நானும் கிளம்பினேன். பின்னாலேயே அவளும் கிளம்பினாள்.

'சோட்டானிக் கண்மா'யைச் சமீபித்துக் கொண்டிருந்தோம். மழை தூரத் தொடங்கிற்று. நான் நடையில் வேகம் பிடித்தேன். ஆனால் பத்தடிக்குள்ளேயே கனமாயின துளிகள். 'ஓடுவது வீணோ?' என்ற கேள்வியோடு ஓடத்தொடங்கினேன். திடீரெனத் திகைத்தேன்; 'துளிகளில் மண் கலந்து இருக்கிறதோ?' என்றொரு கேள்வி ஆச்சர்யமாக எழுந்தது. 'இல்லை. துளிகள் வேகமாக விழத் தொடங்கியிருக்கின்றன.' உள்ளெழுந்த பதிலைக் கேட்டுக் கொண்டே முகத்தில் கூடுமானவரை மழை படாமல் திருப்பிக் கொண்டே ஓடினேன். கழுங்கு வந்தது. உடனே குகையின் ஞாபகம்.

படிப்பகம்

www.padippakam.com



நேரே குகைக்கு ஓடினேன். ஓடி உள்ளே போய்த் திரும்பிப் பார்த்தால் திடுக்கெனத் தூக்கிப்போட்டது. வெளியே மழையிலொரு கருப்பு உருவம்! 'ச்சீ. ஆண்டாள் அக்கா!' என்றது மனசு. "உள்ள வாங்க. பரவால்ல. யாரு பாக்கப் போறா இந்த மழையில!" உள்ளே வந்தாள். பக்கத்தில் நின்றாள். இடவசதியும் அங்கு அப்படித்தானிருந்தது. சற்றுத் தள்ளி நிற்க எத்தனித்தால்கூட மேலே தலை இடிக்கும். உட்கார்வதற்கு வேண்டுமானால் தள்ளித்தள்ளி உட்கார முடியும்.

புயலின் உறுமல் வலுக்கத் தொடங்கிற்று. "உ ஊ...ஊ...ஊ."

இடியும், மின்னலும், "தடகடாக்- ப்ளிம்"

துளிகளோ இன்னும் அடர்த்தியாயின. எதிர்ப்பக்கமிருந்த மரங்கள் மறைந்தன.

நனைந்த எனக்கு குளிரில் உடல் நடுங்கிற்று. அவளைப் பார்த்தேன். அவளும் 'வெடவெடா.'

அடர்ந்து பெய்த மழையில் எங்கள் இருப்பிடம் தீவாயிற்று. உலகத்திடமிருந்து பிரிந்துவிட்ட தீவு. உலகத்தார் யாரும் பார்க்க முடியாத் தீவு. மழைத் திரையிட்ட தீவு. 'கும்'மென்று இருண்ட தீவு. அந்தச் சூழ்நிலையில் 'அந்த' 'மூடு' தான் எழும்.

"சரியான மனநிலையோடு சரியான இடத்திலிருக்கும்போது நெருங்கு. எந்தப் பெண்ணும் கிடைப்பாள்" என்று லேடீஸ் சைக்காலஜி சொல்வதாக நண்பரொருவர் சொல்லியிருக்கிறார். ஆனால் "ஒருத்தி சரியான மனநிலையோடு சரியான இடத்திலிருக்கும்போது நாம் பக்கத்திலிருந்தாலே போதும். அவளே, சுயமாய்-தானாகவே முயன்று நம்மை..." என்று அன்றிலிருந்து நான் அந்த சைக்காலாஜியின் கூற்றை மாற்றிக்கொண்டேன். ஏனெனில் அன்று அப்படித்தான் நடந்தது. மழையின் பக்கமாகத் திரும்பி நின்றுகொண்டிருந்தவள் திடீரெனத் திரும்பி, நெருங்கி... பாவம். அந்த முதிர்கன்னியின் ஆரம்ப வார்த்தைகளை எழுத எனக்கு விருப்பமில்லை. மீண்டும் நினைத்தாலே நெஞ்சு துடிக்கிறது. யார் காரணம்? இதற்கெல்லாம் யார் காரணம்? ஆனால், அன்றைய மழை அவளுக்கு சரியான மனநிலையைத் தந்திருந்தது; குகை 'சரியான' இடமாகிவிட்டது.

ஒருமுறை புணர்ந்துவிட்டாலே போதும். அதற்குப் பிறகு நமக்கும் அவர்களுக்குமிடையே அதுகாறும் இருந்துவந்த ஒரு பெரிய கூச்சத்தின் திரை கிழிந்துவிடுவதை நாம் 'நன்கு' உணர

படிப்பகம்

www.padippakam.com



முடியும். பிறகு பெண்கள் ஏகப்பட்ட 'ரகஸ்யங்களை' நம்மிடம் அவிழ்த்துக் கொட்டுவார்கள். அவளும் கொட்டினாள்.

...புருஷ ஏக்கமும், பெருமூச்சும், கண்ணீரும், மூக்குறிஞ்சலும் செறிந்த அந்தப் பேச்சுகள்... பாவம்! எத்தனையோ இரவுகளில் மங்கின வெள்ளையாய் நீண்டு கிடக்கும் எங்கள் ஊர் ஒற்றையடிப்பாதையில் அவளைக் கட்டிப்பிடித்து, முத்தமாய்க்கொடுத்து தலை வருடி ஆசுவாசப்படுத்தியிருக்கிறேன்.

அரசியல்வாதிகளின் பேச்சு, அல்லது ஆன்மீகவாதிகளின் பேச்சு, அல்லது தத்துவவாதிகளின் பேச்சுக்கு மட்டும் நேரமொதுக்கினால் இவ்வுலகை நாம் சொர்க்கமாக்கிவிட முடியாது. விதவைகளின் பேச்சு, முதிர் கன்னியரின் பேச்சு, வாழாவெட்டிகளின் பேச்சுக்கும் செவிகொடுக்க வேண்டும். அவர்கட்கும் உதவவேண்டும். அப்போதுதான் நாம் இவ்வுலகின் கண்ணீர்த் தொகுதியின் கனம் குறைக்க முடியும். அதற்குப் பிறகுதான் அமைதியும் அன்பும் நிறைந்த பெண்களை நாம் காணமுடியும். ஏனெனில், 'அந்த' உணர்வு அவர்களை எவ்வளவு படுத்துகிறதென்று, ஒருமுறை புணர்ந்துகொண்டிருந்தபோது அவள் சொன்ன ஒரு பதில் மூலம் அறிந்தேன்:

''நான் என் மனைவியிடம் முதல்முறையாகப் போகும்போது 'தப்பு' பண்ணிவிட்டுப் போனவன் ஆவேனோ?''

''இல்லை. உதவி செய்துவிட்டுப் போனவனாவாய். உயர்ந்த உதவி.''

அவள் கண்ணில் அப்போது நீர் துளிம்பிற்று.

மல்லாந்து படுத்திருந்தேன். என் இடது பக்கம் அவளும் மல்லாந்து படுத்திருந்தாள்.

கண்ணீரெல்லாம் காய்ந்து, கன்னங்களிலிருந்த 'அழுக்குவரை'கள்தான் அப்போது அழுகைக்கு அடையாளம். நான் மறுபடியும் நேரமாகிவிட்டதைச் சொன்னேன். ஆனால் இம்முறை 'சொன்னவுடன்' போனமுறைபோல் ஆவேசமாய்க் கட்டி இறுக்காமல், அமைதியாய் எழுந்து உட்கார்ந்தாள். முதன்முதலாய் அவள் உள்பாவாடையை எடுத்து அணிய... கிளம்பினோம்.

முக்கு திரும்பினதும் கிராமம் தெரியத் தொடங்கிற்று. இரவில் அங்கிருந்து பார்த்தபோது போஸ் சித்தப்பா வீட்டு முட்டை லைட்டும், ஊருக்குள் இருந்த மூன்று 'போஸ்ட் லைட்'டுகளும் மட்டும் வழக்கம்போல் தெரிந்தன. அதற்குமேல் ஊரைச்சுற்றி வேலி

படிப்பகம்

www.padippakam.com



காத்தான் மரங்கள் மண்டியிருந்ததால் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் நிலவமத்ததால் சுற்றிலும் எங்கும் வெளிச்சமாயிருந்தது. எங்கள் ஒற்றையடிப்பாதை மெல்ல அடிஅடியாய் பின்னால் சுருண்டு கொண்டுருந்தது. கேட்டேன்:

"போதுமுல்ல?"

"ம்?"

"போதுமுல்ல'ன்னேன்."

"... ... ..."

"பதில் சொல்லாட்டா எப்பிடி?"

"... ... ..."

"ஒங்களத்தான். இனிமே எப்ப வரப்போறனோ."

"ப்ச். மறுபடி மறுபடி அதையே சொல்லாத பாலு." மறுபடி அழுதாள். தோள் தொட்டு இறுக்கினேன். என் சட்டையின் தோளிலேயே கடைசியில் கண்களை ஒற்றி கண்ணீர் துடைத்துக் கொண்டாள். 'முன்றானையைவிட என் சட்டையின் தோளில் துடைப்பது இதமாய்ச் சந்தோஷமாய் இருந்திருக்குமோ?'

மலைராசன் வீட்டு மாமரம் வந்ததும் பிரிய ஆயத்தமாகிவிட்டோம். அதுதான் எங்கள் பிரியுமிடம். ஊருக்குப் பக்கத்தில் இருந்தது அது. எனவே, அதற்குமேலும் நாங்களிருவரும் ஒன்றாய் போவதில்லை. போனால் யாராவது பார்த்துவிட்டால்? நின்று கொண்டோம்.

"சரி. அப்ப பொய்ட்டு வாரியளா?"

சிறிது நேரம் குனிந்தபடி நின்று கொண்டிருந்தாள். மார்போடு டிபன் பாக்ஸ் பையை அணைத்துப் பிடித்திருந்தாள். திடீரென ஒரு நீளமூச்சு உள்ளிழுத்து, அதை வெளிவிட்டபோதே "ஹ்ம்" எனத் தலையாட்டிவிட்டுக் கிளம்பினாள். ஆனால் பத்தடி தூரம்தானிருக்கும் மறுபடி நின்று தயக்சமாய்த் திரும்பினாள்.

"போனவொடன மறக்காம லெட்டு போட்டு பாலு." குரல் நடுங்கிற்று. திடீரென எனக்குள் எச்சரிக்கை முளைத்தது. 'ஐயோ யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்.' நான் சட்டெனச் சொன்னேன். "சரி, போடறேன் போங்க." அதற்கும் தலையாட்டிவிட்டுத் திரும்பி நடந்தாள்.

நான் மாமரத்தின் கீழே நின்று கொண்டிருந்தேன். குறைந்தது அவளிடமிருந்து ஒரு 'பர்லாங்கு' தூரமாவது தள்ளித்தான் அப்புறம்தான் நான் போகவேண்டும். இல்லையென்றால் பிரச்னை வரும் என்பதால் சிறிது காத்திருந்தேன் அவளைப் பார்த்தபடி.

அவள் ஊர் நோக்கிக் கருப்பாகப் போய்க்கொண்டிருந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# மயிலை சீனி வேங்கடசாமியின் வாழ்வும் முன்மாதிரி ஆய்வும்

கோ. தேவராசன்

தனித்தமிழ்த் தந்தை என்றால், மறைமலை அடிகளைத்தான் குறிக்கும். தமிழ்ப்பெரியார் என்றால் திரு.வி.க.வைத்தான் குறிக்கும். மொழி ஞாயிறு என்றால் பாவாணரைத்தான் குறிக்கும். அதுபோல் ஆராய்ச்சி அறிஞர் என்றால் அது மயிலை சீனி வேங்கடசாமியைத்தான் குறிக்கும். அவர் ஆய்வுலகின் முன்னோடி, ஆய்வு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்தவர். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன் கருதாது ஆய்வுப் பணியினைத் தமது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்.

மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் சென்னையில் உள்ள மயிலாப்பூரில் 16-12-1900இல் பிறந்தார்.

தந்தையார் சீனிவாச நாயக்கர் பரம்பரை சித்த மருத்துவர். தமிழ் ஆர்வலர். அவர் இல்லத்தில் ஏராளமான ஓலைச்சுவடிகளும் அச்சிட்ட புத்தகங்களும் நிறைந்திருக்கும்.

மயிலை சீனி வேங்கடசாமியின் தமையனார் சீனி கோவிந்தராசனார் பெரும் புலவர். தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றிய க. நமச்சிவாயர் என்பவரும், சீனி கோவிந்தராசனாரும் ஒரு சாலை மாணவர்கள். இருவரும் மயிலை மகா வித்துவான் சண்முகம் பிள்ளையிடம் தமிழ் கற்றவர்கள். மகாவித்துவான் சண்முகம் பிள்ளை முதன் முதல் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையை ஏட்டுச் சுவடியிலிருந்து அச்சிற் பதித்தவர். அவரிடம் தமிழ் கற்ற சீனி. கோவிந்தராசனார், 1920இல், திருக்குறள் காமத்துப்பாலை நாடகமாக எழுதி புகழ் பெற்றார். இப்பெரும் புலவரின் மேற்பார்வையிலும் வழிகாட்டுதலிலும் நல்ல தமிழ்ச் சூழலில் மயிலை சீனி வேங்கடசாமி வளர்ந்தார். தொடக்கத்தில் தமையனாரிடம் தமிழ்க் கல்வி கற்றார். புனித தோமையர் பள்ளியில் பத்தாம் வகுப்புவரை படித்தார். பின்னர், சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய திரு ச. த. சற்குணர் அவர்களிடம் தமிழும் ஆங்கிலமும் பழுதறக் கற்றார். ஓவியப் பள்ளியில் சேர்ந்து ஓராண்டு ஓவியமும் பயின்றார்.

படிப்பகம்

www.padippakam.com



வேங்கடசாமி தம் 22ஆம் வயதில் தமையனை இழந்தார். எனவே அவர் மீது குடும்பச்சுமை விழுந்தது. அதனால் மோட்டார் வண்டிச் சாமான்கள் விற்கும் ஒரு கடையில் எழுத்தர் வேலை பார்த்தார். பின்னர் நீதிக்கட்சியினர் நடத்திய 'திராவிடன்' இதழில் ஆசிரியர் குழுவில் ஒருவராய்ச் சேர்ந்து பணியாற்றினார். பின்னர் ஆசிரியர் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயின்று மயிலைப் பகுதியில் இருந்த ஒரு நகராண்மைக் கழகப் பள்ளியில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக வேலைக்கு அமர்ந்தார். வாழ்நாள் முழுவதும் தொடக்கப் பள்ளி ஆசிரியராகவே பணியாற்றி ஓய்வு பெற்றார். தமிழ்ப் பணிக்காக இல்வாழ்க்கையைத் துறந்தவர் எனினும் தமிழைத் துறவாத் துறவியாகப் பெருவாழ்வு வாழ்ந்தவர்.

மயிலை சீனி ஒரு தமிழ்த் தேனீ. அவரது கால்கள் நூலகங்களைத் தேடித்தேடி அலைந்தன. கைகள் எப்பொழுதும் ஏடுகளைப் புரட்டிய வண்ணம் இருந்தன. கண்கள் கல்வெட்டுகளையும் சாசனங்களையும் பார்த்துப்பார்த்து பூத்தன. மனம் அழகுக் கலைகளில் படிந்துபடிந்து தோய்ந்தது. அறிவு சமய நுட்பங்களை ஆய்ந்து ஆய்ந்து நுண்மை அடைந்தது. மயிலையார் பன்னூற் பயிற்சியால் அறிவை விரிவு செய்தவர். அவருடைய அறிவெல்லைகள் விரிந்துகொண்டே சென்றன.

மயிலையார் ஓர் பல்கலை வாணர்; இலக்கியக்கடல்; இலக்கணச் செம்மல்; வரலாற்று அறிஞர்; மொழிநூல் அறிஞர்; சமய நூல் வித்தகர்; நுண்கலை வாணர்: வரிவடிவ வரலாற்று வல்லுநர்; சொல்லாய்வுச் செம்மல்; கல்வெட்டு, சாசனம், அகழ்வாய்த் துறையில் தனி முத்திரை பதித்தவர். பன்மொழிப் புலவர். இவ்வாறு பல்வேறு பரிமாணங்களின் பெட்டகம். தமிழுலகில் அவர் தொடாத துறை இல்லை. தொட்டுத் துலக்காத பகுதி எதுவும் இல்லை. மயிலையார் தொடக்கப்பள்ளி ஆசிரியர். எனினும் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தொடாத பகுதிகளை - தொடுவதற்கு அஞ்சும் பகுதிகளையெல்லாம் தேடித்தேடி எடுத்துத் துலக்கினார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மயிலையாரைப் பற்றி

"......அகல் வரலாறு அனைத்தும்
மிஞ்சுதல் இன்றி கற்றோன்
மேம்படும் நூலா ராய்ச்சி
கெஞ்சிடும் தனைத் துலக்க
கேண்மையோடு உயர்வு செய்வான்" எனப் பாடியுள்ளார்.

தமிழ் மொழி, இலக்கியம், வரலாற்றில் உள்ள இருண்ட பகுதிகளுக்கு எல்லாம் ஒளியூட்டிய பெருமை மயிலையாரையே சாரும்.

படிப்பகம்

www.padippakam.com



அவர் எழுதிய நூல்கள் 30க்கு மேற்பட்டவை. கட்டுரைகள் 200க்கு மேற்பட்டவை. அவற்றுள் 150க்கு மேற்பட்டவை நூல் வடிவம் பெறாதவை.

குடியரசு, திராவிடன், தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், செந்தமிழ், ஆராய்ச்சி, திருக்கோயில் நண்பன், இலட்சுமி, ஈழ கேசரி ஆகிய இதழ்களில் அவருடைய கட்டுரைகள் வெளிவந்தன.

மயிலை சீனி அவர்கள் தமிழ்மொழிக்கு அளித்த நன்கொடைகள் அளப்பரியன.

வரலாற்று ஆய்வு நூல்கள் எனும் வகையில் அவர் வழங்கிய நூல்கள் 12. அவை 1. சங்ககால வரலாற்றில் சில செய்திகள், 2. சங்ககாலத்துப் பிராமிக் கல்வெட்டுகள், 3. பழங்காலத் தமிழர் வாணிகம், 4. பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய புதிய செய்தி, 5. களப்பிரர் ஆட்சியில் தமிழகம், 6. சேரன் செங்குட்டுவன், 7. மகேந்திரவர்மன், 8. நரசிம்மவர்மன், 9. மூன்றாம் நந்திவர்மன், 10. கொங்குநாட்டு வரலாறு, 11. துளுநாட்டு வரலாறு, 12. சாசனச் செய்யுள் மஞ்சரி என்பன.

தமிழ் இலக்கிய ஆய்வுகள் எனும் வகையில் அவர் வழங்கிய நூல்கள் 7. அவை 1. தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள், 2. இறையனார் களவியல் ஆராய்ச்சி, 3. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், 4. மறைந்துபோன தமிழ் நூல்கள், 5. மனோன்மணீயம் – பதிப்பும் குறிப்புரையும், 6. அஞ்சிறைத் தும்பி, 7. மயிலை நேமிநாதர் பதிகம் என்பன.

சமய ஆய்வுக் களத்தில் நின்று தமிழ்ச் சமூகத்திற்கு அவர் வழங்கிய நூல்கள் 5. அவை 1. பௌத்தமும் தமிழும், 2 சமணமும் தமிழும் (2 பாகங்கள்), 3. கிறித்தவமும் தமிழும், 4. சமயங்கள் வளர்த்ததமிழ் என்பன.

தமிழர் பண்பாட்டு வரலாற்றை அறிந்துகொள்ளும் வகையில் அவர் எழுதிய கலையியல் ஆய்வு நூல்கள் 5. அவை 1. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், 2. நுண்கலைகள், 3. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், 4. மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள், 5. இசைவாணர் கதைகள் என்பன.

பௌத்த சமயம் பற்றி அவர் சிந்தனையில் முகிழ்த்து வெளிவந்த நூல்கள் 3. அவை 1. கௌதம புத்தர், 2. புத்தர் ஜாதகக் கதைகள், 3. பௌத்தக்கதைகள் என்பன.

படிப்பகம்

www.padippakam.com



உணவு நூல் என்றொரு நூலையும், மகேந்திரவர்மன் எழுதிய மத்த விலாசம் என்ற நூலின் மொழி பெயர்ப்பும் தமிழுலகிற்கு அவர் வழங்கிய நன்முத்துகள்.

அவரது ஆய்வு நூல்கள் அனைத்தும் முதல்தரமானவை. அன்றியும், தமிழுலகிற்கு முதன் முதலாக அவரால் வழங்கப்பட்டவை. அவருடைய தாக்கம் பெற்ற பின்னரே, பிறரும் இத்துறைகளில் நூல் எழுத முனைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்னொரு சிறப்பு பொதுமக்களுக்கும் விளங்கும் வகையில் முதன் முதலாக ஆய்வு நூல்கள் எழுதியவர் மயிலையார் அவர்களே.

அவர் எழுதி அச்சில் வராமல் கையெழுத்துப் பிரதியாகவே நின்றுவிட்ட சில நூல்கள் உள. அவை:

1. இந்து மதமும் தமிழும், 2. இஸ்லாமும் தமிழும், 3. சமணமும் தமிழும் பாகம்–2, 4. 18ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம், 5. யானைக் கோயில் வரலாறு, 6. தமிழ்நாட்டுச் சிற்பக் கலை என்பவை ஆகும். இந்நூற்கள் வெளிவந்திருப்பின் தமிழ்மொழி பல புதிய அணிகலன்களைப் பெற்றிருக்கும். தமிழருடைய வாய்ப்புக் கேடாக அவை நூல் வடிவம் பெறவில்லை. இனியேனும் அவை வெளிக்கொணரப்பட வேண்டும்.

மயிலையாருடைய 19 ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் ஓர் அரிய கலைக் களஞ்சியம்– தகவல் களஞ்சியம் எனலாம். அந்நூலில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 226 தமிழ்ப் புலவர்களைப் பற்றிய அரிய குறிப்புகள் உள்ளன. அந்நூற்றாண்டில் வெளிவந்த 625 நூல்களைப் பற்றிய பதிவுகள் உள்ளன. அந்நூற்றாண்டில் வெளிவந்த 113 இதழ்கள் பற்றிய பட்டியல் தரப்பட்டுள்ளது. அச்சுக்கலையின் வரலாறு, அச்சகங்களின் வரலாறு, வரிவடிவ வரலாறு எனப் பல்வேறு அரிய செய்திகள் தரப்பட்டுள்ளன. இந்நூல் தமிழிலக்கிய வரலாற்றை மேலும் ஆராய்வோருக்குப் பெரிதும் பயன்படக்கூடிய விலை மதிக்கமுடியாத அரிய கையேடாகும்.

"மறைந்து போன தமிழ் நூல்கள்" என்பது இன்னொரு அரிய படைப்பு. மயிலையாருடைய குடும்பத்தில் இளம் வயதில் இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டனர். அந்தத் துயரம் அவரால் தாங்க முடியவில்லை. அந்நிகழ்ச்சியின் விளைவு தமிழ் இலக்கிய குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இறந்துபோயின என்று கணக்கெடுக்க வைத்தது. அதன் விளைவுதான் "மறைந்து போன தமிழ் நூல்கள்." மறைந்துபோன தமிழ் நூல்களைப் பற்றிக் கிடைக்கும் குறிப்புகளையெல்லாம் ஒன்று விடாமல் தேடித் தொகுத்துத் தந்த பெருமை மயிலையாருக்கே உரியதாகும். இந்நூலில்

படிப்பகம்

www.padippakam.com



மறைந்துபோன 195 தமிழ் நூல்களைப் பற்றிய அரிய குறிப்புகளையும், இறந்தன போக எஞ்சி நின்ற செய்யுட் பகுதிகளையும் ஒருசேர தொகுத்துத் தந்துள்ளார். எத்தகைய அரிய படைப்பு! எத்தகைய அரிய உழைப்பு! என எண்ணும்போது மலைப்பு ஏற்படுகிறது. இந்நூல் 1959இல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து இத்துறையில் இன்னொரு நூல் இதுவரை வெளிவரவில்லை. எப்படி ஒரு தனி மனிதர் இவ்வளவு அரிய தகவல்களைத் திரட்ட முடிந்தது? கருவி நூல்கள் இல்லாத காலத்தில், தகவல்களைத் திரட்டும் வாய்ப்புகள் குறைவான காலத்தில், ஒரு பல்கலைக் கழகம்கூடச் செய்ய முடியாத பணியினைத் தன்னந்தனி மனிதராக இருந்து செய்திருக்கிறார் என்று எண்ணும்போது வியப்பின் எல்லையில் ஆழ்ந்து போகிறோம்.

காய்தல் உவத்தல் இன்றி, நடுநின்று செம்பொருள் கண்ட செம்மல் அவர். அவருடைய நூல் முன்னுரையில் அடிக்கடி 'வாழ்க்கைப் போராட்டத்தின் இடையே கிடைத்த சிறுசிறு நேரங்களைப் பயன்படுத்திக் கொண்டு, என்னால் இயன்ற வரையில் எனது சிற்றறிவுக்கு எட்டிய வரையில் இந்நூலைச் செய்திருக்கிறேன்' என்று குறிப்பிடுவது அவரது வழக்கம். 'சமணமும் தமிழும்' என்ற நூலிலும் அவர் இப்படித்தான் குறிப்பிடுகிறார். மேலும் அதே நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''ஒன்றைமட்டும் கூற விரும்புகிறேன். உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளிகளுக்குத் தமிழ்நாட்டிலே இடமில்லை என்பதே அது. ஆராய்ச்சியின் அருமை பெருமை அறிந்தவர்கள்கூட ஆராய்ச்சியாளரைப் போற்றுவதில்லை என்றால் இந்நூல்களை ஏன் எழுத வேண்டும்? ஏன் வெளிப்படுத்த வேண்டும்?'' இக்கேள்விக் கணைகள் தமிழ் உணர்வாளர் அனைவரது உள்ளத்திலும் தைத்தன. அந்தப் புண் இன்றளவும் ஆறவில்லை. மயிலையார் இவ்வண்ணம் சலிப்புற்ற நாட்கள் பல எனினும் அவர் தமது ஆராய்ச்சிப் பணியை என்றும் நிறுத்தியதில்லை.

மயிலையாரைப் பற்றி மூன்று செய்திகளை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். 1. அவர் ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியர். பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்காதவர். 2. திருமணம் செய்துகொள்ளாமலே வாழ்நாள் முழுவதும் தமிழ்த் தொண்டு செய்தவர். 3. அவர் தனித்தன்மை வாய்ந்த ஆராய்ச்சி அறிஞர். அவரைப் புரிந்துகொள்ள சற்று பின்நோக்கிப் பார்க்க வேண்டும்.

19ஆம் நூற்றாண்டின் மேன்மையான தமிழ்ப்பணி எதுவெனில் ஓலைச் சுவடியில் அடைபட்டுக் கிடந்த தமிழ் இலக்கிய – இலக்க

படிப்பகம்

www.padippakam.com



ணங்களை அச்சுப் புத்தகங்களாகக் கொண்டு வந்ததாகும். அப் பணி அந்நூற்றாண்டில் செம்மையாக நடைபெற்றது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மத்தியிலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், தமிழ் வரலாறு சார்ந்த திறனாய்வு நூல் களும் ஆய்வு நூல்களும் வெளிவரத் தொடங்கின.

தொல்பொருள் அகழ்வாய்வுத் துறையும், கல்வெட்டு; சாசனத் துறையும் 19ஆம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெறினும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் நிலைத்து நின்று ஆய்வுத் துறைக்குப் பெரிதும் பயன்படலாயின. கல்வெட்டுகளும் சாசனங் களும் தொகுக்கப்பட்டன. இந்தியப் பழமை ஆராய்ச்சி, இந்திய சாசனம், தென்னிந்திய சாசனங்கள், எனும் ஆங்கில வெளியீடு கள் வெளிவரலாயின. இதனால் தமிழ்நாட்டு வரலாறு, கலை, நாகரிகம், பண்பாடுகள் முதலியன அறிவதற்கு நல்வாய்ப்பு உண் டாயிற்று. 1916 இல் மறைமலை அடிகளார் தோற்றுவித்த தனித் தமிழ் இயக்கம், அதே ஆண்டில் சர். பிட்டி. தியாகராயர் தோற்று வித்த நீதிக்கட்சி – இலக்கிய உலகிலும் அரசியல் உலகிலும் பல புதிய பரிமாணங்களைக் கொண்டு வந்தன. 1920 இல் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு நீதிக் கட்சியின் 'திராவிடன்' இதழில் ஆசிரியர் குழுவில், மயிலை சீனி வேங்கட சாமி இணைந்து பணியாற்றினார் என்பது குறிப்படத்தக்கது.

1920இல் தொடங்கி 1970 வரை, மூன்றுவிதத் தமிழ் மரபுகள், தமிழ் இலக்கிய உலகிலும், தமிழ் வரலாற்று உலகிலும் தோன்றி யிருந்தன. அவை தமிழ் இலக்கிய உலகிலும், வரலாற்றுத் துறை யிலும் தோற்றுவித்த ஆராய்ச்சிக் களங்களும் இலக்கியப் போர்க ளும் மிகப் பலவாகும். அம்மரபுகளில் ஒன்று ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபு. இதன் தலைவராக திரு. வையாபுரிப்பிள்ளை செயல் பட்டார். இவருடன் சேர்ந்து செயல்பட்டவர்கள் திரு. நீலக்கண்ட சாத்திரியார், திரு. இராமச்சந்திர தீட்சிதர், மு. இராகவையங்கார் போன்றவர்கள். இவர்கள் தமிழின் தனித்தன்மையை ஏற்க மறுத் தவர்கள். தொல்காப்பியம், திருக்குறள் உள்ளிட்ட நூல்கள் அனைத்தும் வடமொழியாளர் அளித்த நன்கொடையே என்பது இவர்களின் அசைக்க முடியாத கருத்தோட்டமாக இருந்தது. தமி ழின் முதன்மைக்கும், தனித்தன்மைக்கும் மாற்றுக் கருத்துகளை வெளியிட்டு மாசு கற்பிப்பதே இவர்களின் ஆராய்ச்சிப்போக்காகும்.

இன்னொரு மரபு இந்திய தேசியம் சார்ந்த தமிழ் மரபாகும். பல்கலைச் செல்வர் திரு. தெ. பொ. மீ. அவர்கள் இந்த மரபினை முன்னெடுத்துச் சென்றார்கள். இந்த மரபினர் தமிழ் மொழிக்கு

படிப்பகம்

www.padippakam.com



ஆற்றிய தொண்டுகளை மறப்பதற்கில்லையெனினும், இவர்களின் மரபு இந்திய தேசியத்தை முதன்மைப்படுத்திய தமிழ் மரபாகும்.

மூன்றாவது மரபை திராவிட இயக்கம் சார்ந்த தமிழ் மரபு என லாம். இப்பொழுது அரசியல் உலகில் பயன்படுத்தப்படும் "திராவிட இயக்கம்" என்ற சொல்லுக்குரிய பொருளுடன் இணைத்து இந்த மரபினை அறிய முற்பட்டால் இந்த மரபினைச் சரியாகப் புரிந்து கொள்ளல் இயலாது. இந்த மரபின் அடித்தளம் தமிழின் தனித் தன்மையைப் போற்றுவதும், தமிழ், வரலாறு, கலை, பண்பாட்டுத் துறையில் அதன் பழமையைப் பேணிக் காப்பதும் ஆகும். ஆராய்ச்சி வாயிலாக அவைகளை உலகிற்கு வெளிப்படுத்துவதும் ஆகும். ஆரியம் சார்ந்த தமிழ் மரபினர் ஆராய்ச்சி என்ற போர் வையில் தமிழ் மொழி, வரலாறு, பண்பாட்டுத் துறையில் படிய விட்ட மாசுகளைக் களைந்தெறிவதும், அம்மரபினர் உருவாக்கிய தடைகளைத் தகர்த்தெறிவதும், திராவிட இயக்கஞ் சார்ந்த தமிழ் மரபினர் பணியாக இருந்தது.

ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபினருக்கும் திராவிட இயக்கஞ் சார்ந்த தமிழ் மரபினருக்கும் இடையே நடந்த இலக்கியப் போர் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக நீடித்தது. இப்போரில் திராவிட இயக்கஞ் சார்ந்த தமிழ் மரபில் முன்னணி வீரராகத் திகழ்ந்தவர் மயிலை சீனி வேங்கடசாமி. மா.ராசமாணிக்கனார், இலக்குவனார், பாவாணர் போன்றவர்களும் இம்மரபினைச் சார்ந்தவர்களே.

மயிலை சீனி வேங்கடசாமி நீதிக்கட்சியுடன், தந்தை பெரியா ருடன், மறைமலை அடிகள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகி யோருடன் கொண்ட தொடர்பு அவருக்கு ஆழமான சிந்தனை வளத்தையும் உறுதியான அடித்தளத்தையும் அமைத்துக் கொடுத் தன. அவர் தொடக்கப்பள்ளி ஆசிரியர் என்றாலும், உறுதியான அடித்தளத்தின் மீது உறுதியாக காலூன்றி நின்று, தமது பரந்து விரிந்துபட்ட கல்விப் பரப்பின் காரணமாக ஆராய்ச்சி உலகின் கொடுமுடியைத் தொட்டார். பல்கலைக் கழகத் தூண்கள் என்று விளங்கிய எவரும் அவரது ஆராய்ச்சி முடிபுகளை அசைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

மயிலையாருடைய ஆய்வு நெறிகளை நான்கு வகையாகப் பகுக் கலாம். 1. புதிய செய்திகளைத் தருவது. 2. புதிய விளக்கங்க ளைத் தருவது. 3. இலக்கியம், வரலாறு ஆகிய துறைகளில் இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுவது. 4. இலக்கிய உலகில், வர லாற்று உலகில் தோன்றிய தவறான கருத்துகளை ஆராய்ச்சி வன்மையால் மறுத்து உண்மையை நிகலநாட்டுவது என்பதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



மயிலையார் எழுதிய 'பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய, புதிய செய்தி' என்றொரு நூல்.

சங்க காலத்தில் மூவேந்தர் கொடியில் பொறிக்கப்பட்டிருந்த சின்னங்கள் பற்றிய ஓர் ஆய்வு. சோழன் கொடியில் புலிச் சின்னம். சேரன் கொடியில் வில் சின்னம். அதுபோன்றே பாண்டியர் கொடியில் மீன் சின்னம் (கயல் சின்னம்) பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒரேயொரு பாண்டியன்– பசும்பூண் பாண்டியன் என்பது அவன் பெயர்– கொடியில் மட்டும் யானைச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. இவ்வரிய செய்தியைச் சங்கப் பாடல் ஒன்றின் வழியாக விளக்குகிறார். ஏறத்தாழ 3000 பாடல்கள் கொண்ட சங்கச் செய்யுட்களில் ஒரே ஒரு பாட்டில், ஒரே ஒரு வரியில் இக்குறிப்பு வருகிறது. அகநானூற்றில் 162ஆம் செய்யுளில் பரணர் இக்குறிப்பைத் தருகிறார். இதை விளக்குவதுதான் இந்தச் சிறிய நூல். இதுபோல எத்தனையோ புதிய செய்திகளைத் தந்தவர் மயிலை சீனி வேங்கடசாமி.

மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள் என்றொரு நூல். மயிலையார் எழுதியது. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் அருச்சுனன் தவசு, அல்லது பகீரதன் தவசு என்பதை குறிப்பன என்று பலரும் எழுதி வந்தனர். மயிலையார் அவர்கள், மாமல்லபுரத்துச் சிற்பங்கள் அருச்சுனன் தவசையோ, பகீரதன் தவசையோ குறிப்பன அல்ல. து சைனரின் அஜீத நாதர் புராணத்தில் கூறப்படுகிற சகரசாகரர்களின் கதையென ஆராய்ந்து விளக்கினார். இது போன்று எத்தனையோ புதிய விளக்கங்கள் தந்தவர் மயிலையார்.

மயிலையார் தமிழக வரலாற்றின் இருண்ட பகுதிகளுக்கு எப்படி ஒளியூட்டுகிறார் என்பதை அறிய வேண்டுமானால் ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்றொரு நூல் போதுமானது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையுள்ள முன்னூறு ஆண்டு காலத்தை வரலாற்றாசிரியர்கள் 'இருண்ட காலம்' என்று ஒரு பக்கத்தில் எழுதி முடித்துவிட்டார்கள். அந்த இருண்ட காலத்திற்கு 69 அரிய நூல்களைச் சான்று காட்டி 175 பக்கங்கள் எழுதி ஒளியூட்டியவர் மயிலையார். களப்பிரர் காலம் யாருக்கு இருண்ட காலம்? சீவகசிந்தாமணியும் பெருங்கதையும் தோன்றிய காலம் இருண்ட காலமா? பதினெண் கீழ்க்கணக்கில் பதினான்கு நூல்கள் தோன்றிய காலம் இருண்ட காலமா? எண்ணற்ற இலக்கண நூல்கள் தோன்றிய காலம் இருண்ட காலமா? காரைக்கால் அம்மையாரின் பாசுரங்கள் பிறந்த காலம் இருண்ட காலமா? என்ற எண்ணற்ற வினாக்களை எழுப்பும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது. ''களப்பிரர் காலம்'' தமிழர்களுக்கு இருண்ட காலம் அன்று.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்ப் பகைவர்களுக்கு இருண்ட காலம் என்று நாம் முடிவுக்கு வரும் வகையில் பல செய்திகளை மயிலையார் தருகிறார். இது போன்ற எண்ணற்ற இருண்ட காலச் செய்திகளுக்கு ஒளியூட்டியவர் மயிலையார்.

திரு. வையாபுரிப் பிள்ளை "தமிழ் மொழி - தமிழ் இலக்கிய வரலாறு" என்றொரு ஆங்கில நூல் எழுதியிருக்கிறார். அதில் பக்கம் 110இல் ஒரு செய்தியைத் தருகிறார்; "சுந்தரமூர்த்தி தேவாரப் பாடல்களில் ஜைனர்களைப் பற்றி ஒரு குறிப்புகூட இல்லை," என்பதாக. மயிலையார் அதற்கு ஒரு மறுப்புக் கட்டுரை எழுதினார். "சுந்தரமூர்த்திகளின் தேவாரம்" என்பது அந்தக் கட்டுரையின் பெயர். அதில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில் ஜைனர்களைப் பற்றியும் பௌத்தர்களைப் பற்றியும் கூறிய குறிப்புகளையெல்லாம் அடுக்கிக் காட்டுவார். பின் வையாபுரிப்பிள்ளையைப் பற்றிச் சில குறிப்புகளைத் தருவார். மிகவும் அரிய குறிப்பு அது.

"பிள்ளையவர்கள் இவ்வாறு எழுதுவது உண்மைக்கு மாறானது. உண்மைக்கு மாறானது மட்டுமல்ல. உண்மையை மறைத்துக் கூறுகிறார். பிள்ளையவர்கள் சைவர் என்ற முறையில் சுந்தரர் தேவாரத்தைப் படித்திருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் என்கிற நிலையிலாவது சுந்தரர் தேவாரத்தைப் படித்திருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டாலும் சுந்தரர் தேவாரத்தைப் பற்றி எழுதுகிறபடியால் அந்தத் தேவாரத்தைப் படித்திருக்க வேண்டும். படித்தாரோ படிக்கவில்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் சுந்தரர் தேவாரத்தைப் பற்றி ஒரு தவறான செய்தியை உண்மைக்கு மாறாகக் கூறுகிறார். முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிறார்."

மேலும் எழுதுகிறார்: "வையாபுரிப்பிள்ளை சிறந்த பதிப்பாசிரியர். அவர் பதிப்பித்த நூல்கள் சிறந்த பதிப்புகள். அதற்காக அவருக்குத் தமிழுலகம் நன்றி செலுத்துகிறது. ஆனால் அவர் சொந்தமாக எழுதிய நூல்களைப் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும். அவர் எழுதிய நூல்களிலே குழிகளும் பள்ளங்களும் உள்ளன. தவறான முடிவுக்கு அழைத்துச் செல்லும் பல வழிகள் உள்ளன என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியிருக்கிறது."

தொல்காப்பியம் பற்றி வெளிவந்த பல தவறான கருத்துகளை வன்மையாக மறுத்தவர் மயிலையார்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"– என்றொரு நூற்பா

படிப்பகம்

www.padippakam.com



தொல்காப்பியத்தில் உள்ளது. மு. இராகவையங்கார் அவர்களும் பி. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்களும் பிறரும் ஐயர் என்ற சொல்லிற்கு ஆரியப் பார்ப்பனர் என்றே பொருள் கொண்டனர். தமிழர்களுக்குக் கற்புநெறி கிடையாது. அது ஆரியர்களால் தமிழர்களுக்குக் கற்பிக்கப்பட்டது என்று தொல்காப்பியச் சூத்திரத்திற்குப் பொருள் விளக்கம் கூறினர். மேலும் திரு வையாபுரிப்பிள்ளை, நீலகண்ட சாத்திரியார், மு. இராகவையங்கார், பி. எஸ். சீனிவாச சாஸ்திரி போன்றவர்கள், தொல்காப்பியம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய நூல் என்று வாதிட்டனர். தொல்காப்பியமே கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றால் திருக்குறளை, சிலப்பதிகாரத்தை, மணிமேகலையை எந்த நூற்றாண்டில் சேர்ப்பது? ஏன் அவ்வாறு எழுதினர்? அவர்கள் கூறும் காரணம் வருமாறு:

பரத நாட்டிய சாத்திரம் கி.பி. நாலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. பரத நாட்டிய சாத்திரச் சூத்திரங்களுடன் தொல்காப்பியருடைய மெய்ப்பாட்டியல் சூத்திரங்கள் ஒத்திருக்கின்றன. ஆகவே தொல்காப்பியம் கி. பி. நான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது. எனவே திருக்குறள் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறினர். தமிழ் இலக்கியம் எதுவாயினும் அவைகளுக்கு மூலம் வடமொழியே. சமஸ்கிருதத்திலிருந்துதான் தமிழ்மொழி எல்லாக் கருத்துகளையும் கடன் வாங்கியிருக்கிறது என்ற மூடநம்பிக்கை திரு. வையாபுரியார் உள்ளிட்ட ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபினருக்கு இருந்ததனால் அவ்வாறு எழுதினர். இவர்களோடு தமிழின் தனித்தன்மையைக் காப்பாற்ற தம் வாழ்நாள் முழுதும் கருத்துப்போர் நிகழ்த்தியவர் மயிலையார்.

"தொல்காப்பியம் ஆய்வுரை" என்பது ஒரு சிறுநூல். மயிலையார் அண்ணாமலைப் பல்கலையில் ஆற்றிய சொற்பொழிவு நூல். அந்நூலில் வையாபுரிப்பிள்ளை போன்ற பல்கலைக் கழகப் பேராசிரியரின் கருத்துகளை எல்லாம் வன்மையாக மறுத்தார். 61 பக்கமுள்ள இச்சிறுநூலில் நூற்றுக்கணக்கான சான்றுகளை அடுக்கிக் காட்டினார். தொல்காப்பியம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு நூல் அன்று. கி. மு. எட்டாம் நூற்றாண்டு நூல் என்று அசைக்க முடியாத சான்றுகளோடு நிறுவிக் காட்டினார். அவருடைய கல்விப் பரப்பை அந்நூலில் காணலாம். இவ்வாறு மயிலையார் நடத்திய போர்கள் பல.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தலைவராக விளங்கியவர் வையாபுரிப்பிள்ளை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக விளங்கியவர்கள் நீலகண்ட சாத்திரியும் இராமச்சந்திர தீட்சதரும். அண்ணாமலைப் பல்

படிப்பகம்

www.padippakam.com



கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கியவர் மு.இராகவையங்கார். இன்னும் பி.எஸ். சுப்பிரமணிய சாத்திரியார் போன்றவர்கள். இவர்களை மனதில் கொண்டுதான் புரட்சிக்கவிஞர்,

"பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்" என்று எழுதியுள்ளார்

என்று கருதவேண்டியுள்ளது.

மயிலையார் தாம் வாழ்ந்த காலத்தில் போற்றப்பட வேண்டிய அளவிற்குப் போற்றப்பட்டார் இல்லை. புரட்சிக் கவிஞர் உள்ளத்தில் இந்த ஏக்கம் மிகுதியாக இருந்திருக்கிறது. இதனைக் கீழ் வருமாறு வெளிப்படுத்துகிறார்:

"நன்றிகெட் டதிகாரத்தை
நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை" என்று.

ஆயினும் பாலைவனத்தில் பசுஞ்சோலை போன்று ஓரிரு சிறப்புகளைப் பெற்றிருக்கிறார். 1961இல் அவருக்கு மணிவிழா நடைபெற்றது. அவ்விழாவில் நீதியரசர் கணபதியாபிள்ளை அவருக்கு ஆராய்ச்சிப் பேரறிஞர் என்ற பட்டத்தை நல்கி மகிழ்ந்தார். 1962இல் தமிழ் எழுத்தாளர் சங்கம் இவரைப் பாராட்டிக் கேடயம் வழங்கியது. 1980இல் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் "பேரவைச்செம்மல்" எனும் விருது தந்து பொற்பதக்கம் அணிவித்தது. இப்படி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில சிறப்புகள் வந்தன.

கடல் போன்ற ஆழமான கல்வி, நிலவுலகம் போல் பரந்து விரிந்த அறிவு, வானம்போல் உயர்ந்த பண்புகள்- இம்மூன்றின் சங்கமம் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்.

மயிலையார் தமது இறுதிக்காலத்தில் மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையில் 8-5-1980ஆம் நாள் இரவு 8-30 மணியளவில் தமது மாபெரும் ஆராய்ச்சிப் பணியை நிறுத்திக்கொண்டு விட்டார். உண்மையில் அவர் மறையவில்லை. ஏனெனில் அவருக்கு மரணம் இல்லை. தமிழிலக்கிய வரலாற்று ஆய்வுலகில் என்றென்றும் ஒளியுடல் தாங்கியவண்ணம் உலா வருபவர் அவர். ●

படிப்பகம்

www.padippakam.com

இது ஒரு விமர்சனம் கோரும் சிறுகதை.

# இருள் வாசம்

அமிர்தம் சூர்யா

வெளிச்சம் ஊடுறுவ் மறுத்த அடர்கானகம் தொடர்ந்து இருட்டைப் புணர்ந்துகொண்டிருந்த காலங்களில் நாட்களை எண்ணியபடி அவ்வப்போது உச்சிக்கிளைகளைப் பார்த்துக்கொண்டிருந்தன இரு விழிகள். நிறமற்ற காலத்துளி கால்களில்லாமல் ஊர்ந்து கொண்டிருக்க... எதிர்பாரா ஒரு தருணத்தில் இலைகளைக் கழற்றி எறிய ஆரம்பித்தன- காட்டுக் கொடிகளைப் பின்னிக் கொண்ட பெயர் சூட்டிக்கொள்ளாப் பெருமரங்கள். நிச்சயமாய் அது இலையுதிர் காலமாய்த்தான் இருக்க வேண்டும். இதற்காகவே காத்திருந்ததாய், புதையல் கண்ட புலவனின் விழிகளைப்போல் மலர்ந்தன அந்தத் தீட்சண்யமான விழிகள்.

இருளின் முகம் மெல்ல வெளிறும்படி இலையுதிர் காலத்தால் வந்த இடைவெளிகளில், ஆதவனின் ஒளிக்கற்றை இறங்கி, புதர் மண்டிய அந்தக் கற்குகை வாசலில் நிரம்பித் ததும்ப ஆரம்பித்தது. விழிகளுக்குச் சொந்தமான விரல்களில் பரபரப்பு பரவியது. கற்குகையின் சுவர்களில் வெளிச்சம் சிதற, தான் தயார் என்று கர்வமிட்டு அழைப்பதாய்த் தெரிந்தது குகைச் சுவரின் தோற்றம்.

பொலியூர்- இவ்வனாந்திரத்தின் வடகிழக்குப் பகுதியில் வரிசையாய் இருக்கும் இருபத்தெட்டு கிராமங்களுள் ஒன்று. அழகும் ஆன்மீக வாழ்வும் கலந்து ஓதுவார்களின் செல்வாக்கு ஓங்கியிருந்த கிராமத்தில் பௌத்த பிக்குகளின் தொடர் பிரசாரத்தால் சகல அம்சத்திலும் மாற்றங்கள் வரத்துவங்கிவிட்டன என்பதை மறுக்க முடியாது என்பதற்கு அந்த நிகழ்ச்சியே ஆதாரமாய்ப்போனது. கிழியாத நிழலைத் தரையில் உலர வைத்துக் கொண்டிருந்த அந்த ஆலமரத்தின் அடிவாரத்தில் இளைப்பாற இரண்டு பேர் கூடினாலும் இன்னும் அந்தப் பேச்சு ஓய்வதாயில்லை.

“பத்து திங்களாகியும் எந்த சேதியும் தெரியவில்லையே.”

“உயிரோடிருக்க ஒருபோதும் வாய்ப்பில்லை.”

“ம்ம்.. சுற்றுவட்டாரத்துக் கிராமங்களிலெல்லாம் தேடியாயிற்று- கானகத்தைத் தவிர.”

படிப்பகம்

www.padippakam.com



"நினைவை மாற்றும் திசை மரிச்சான் பூண்டும், ஆட்கொல்லி சிலந்திகளும் அதிகமுள்ள கானகத்தில் துணிந்து தேடப் புறப்பட்டவர்களும், மூங்கில் புதர்களில் காட்டுத்தீ பரவ, தேடலை துவக்கத்திலேயே தேக்கிவிட்டது நமது துரதிர்ஷ்டம்தான்."

"இனியும் இதுமாதிரி சம்பவம் நடக்காமல் இருக்க கிராம சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும்."

"அது ஒருதலைபட்சத்தில் முடியும்."

"முறைமாமனாக இருந்தாலும் விருப்பமில்லாப் பெண்ணைத் திருமணத்திற்குக் கட்டாயப்படுத்தக் கூடாது."

"ஆன்மீக நாட்டம் பெண்டிற்கு அவசியமற்றது.. வேத விளக்கம் கேட்பதைக்கூடத் தடை செய்யவேண்டும்."

"இது அடிமைத்தனமாகாதா?"

"இல்லை. சுதந்திரத்திற்கும் சில எல்லைகள் வேண்டும்."

"எல்லைகள் அற்றதுதான் சுதந்திரம். பெண் துறவிகள் பெருகும் பௌதம் வளர்ந்து வருவதை மறந்துவிடக் கூடாது."

"பௌத்தர்களால் சமூக அமைப்பே கெட்டுவிடும்போல் உள்ளது."

இயலாமை தெறிக்கும் அவர்களுடைய பேச்சு ஒன்றிலிருந்து ஒன்று ஆரம்பித்து வேறொன்றில் முடிந்தாலும் ஒவ்வொன்றுக்கும் தொடர்பு இருப்பதை உணர்த்திக்கொண்டு இருந்தது.

இந்தத் தொடர்ச்சியான பேச்சே வாழ்க்கைச் சூழலில் மெல்ல அச்சம்பவத்தை மறைக்கலாயிற்று. ஆயினும் ஈரப்பட்டால் முளை விடக் காத்திருக்கும் விதையாய் அடங்கிப்போயிருந்தது அனைவரின் மனதிற்குள்ளும்.

★ ★ ★

வனக்குகையின் சுவர்கள் ஓவியக் கிறுக்கல்களை ஆடையாய்ப் போர்த்திக்கொள்ள ஆரம்பித்து விட்டன.

சுவரின் இடப்புறம்... தன் இரு கைகளையும் மேல் தூக்கி, தனது தும்பிக்கையைத் தானே தடவியபடி நின்றது கோபத்தில் ஒரு சிங்கம். ஆமாம். சிங்க முகத்தில் யானையின் துதிக்கை. சிங்கத்தின் கால் விரல்களில் கவிழ்ந்த பிறையாய் நகங்கள் தரை குத்தி பிடிப்பாய் நிற்க, சிங்கம் தன் எடையைத் தூக்கிப் பறக்க எத்தனித்துத் தன் இறக்கையை அடித்துக்கொள்ளும். கீழே

படிப்பகம்

www.padippakam.com



உதிர்ந்த சில சிறகுகள். குகையின் இன்னொரு புறத்தில் நிர்வாணமாய் பருவப்பெண் நின்றிருக்க, அவளின் தொப்புளிலிருந்து, வளர்ந்து நீண்டிருந்த தொப்புள்கொடி அவளின் கால்களையே பின்னிச் சுற்றிக்கொண்டிருந்தது. அழுகையா? சிரிப்பா? தெரியாதபடி தன் வாயைத் தன் இருகரங்களால் போத்தியிருந்தாள். எதிர்ப்புறத்தில் கண்மூடி தியானத்தில் உட்கார்த்திருந்த மழிக்கப்பட்ட தலையோடு இருந்த ஒரு பிக்குனி சிரித்துக் கொண்டிருந்தாள்.

இப்படியாய்ப் பலவாறு வரைந்துகொண்டிருந்த கரம் காய்ப்பு காய்த்திருந்தது. முதல் மூன்று விரல்கள் நிறம் மாறி ரேகை தேய்ந்திருந்தன. குகையின் தரையில் தேங்காய் சிரட்டைகளும் பட்டைகளும் பச்சிலைகளும் சிதறிக் கிடந்தன. எரிந்த மூங்கில் துண்டுகளும் கரிகளும் குகை மூலையில் கிடந்தன. வாழைப்பட்டையில் விளாங்காய்களும் பேரப்பும் பழங்களும் குறைவாக இருந்தாலும் அவற்றின் மணம் குகை முழுக்க நிரம்பி வழிந்தது.

தீட்சண்யமான கண்கள் மெல்ல மூடித் திறக்கையில் ஒரு பெருமூச்சு வந்து போனதில் இலைகளால் மூடப்பட்டிருந்த அந்த மார்பகம் ஏறி இறங்கியது. குகைச் சுவரின் வெறுமையாயிருந்த சில பகுதிகளைப் பார்த்தபடி உதடுகள் மெல்ல முணுமுணுத்தன ஏதோ தீர்மானமாய்.

அந்நியம் என்று தெரிந்துவிட்டதோ, கரிச்சான் குஞ்சு மேலே பறந்துகொண்டிருந்தது. உழவுத் தொழிலுக்குப் போனவர்கள் மெல்லத் திரும்பிக்கொண்டிருந்தனர். கால்நடைகள் தம்தம் இடங்களுக்கு அசைபோட்டபடி நகர்ந்துகொண்டிருந்தன. பூக்களைக் கட்டியபடி தூரத்தில் பெண்கள் சிலர் உட்கார்ந்திருந்தனர். பட்டும் படாதவாறு சற்றுத் தொலைவில் சில முதியோர் வேடிக்கை பார்த்தபடி இருக்க, அருகில் சில சத்திரியர்கள் உட்கார்ந்து இருந்தனர். விநோதமாய் விளையாட்டை விட்டுவிட்டு சிறுவர்கள் சூழ்மியிருந்தனர். முகத்தைத் திருப்பியபடியும், சிலர் கடுகடுவென்ற முகத்தோடு முனங்கியபடியும், ஒதுவார்கள் சிலர் வந்துசென்றும் போய்க்கொண்டும் இருந்தனர். யாரோ ஒருவன் வேண்டுமென்றே யாரையோ அழைப்பதுபோல் சில பெயர்களைச் சொல்லி சப்தமாய்க் கூவிக்கொண்டிருந்தான். எதைப் பற்றியும் கவலைப்படாத பிக்குகளைப் போல மண்ணைத் தொட்டுவிட வேண்டும் என்பதிலேயே குறியாய் இருப்பதாய் அந்த ஆலமரத்தின் விழுதுகள் தரையை நோக்கியபடி மெல்ல காற்றில் ஆடியபடி இருந்தன. ஆலமரத்தின் அடிவாரத்தில் நான்கு பிக்குகள் சீவர (மஞ்சள்) ஆடை அணிந்து, தலை மழித்து, ஏளனப்படுத்த முடியாதபடியும் ஏற்றுக்கொள்ள முடியாதபடியுமான ஒரு தோற்றத்தில் இருந்தனர். எல்லோரு

படிப்பகம்

www.padippakam.com



டைய பார்வையும் வியப்போடு அந்தக் கும்பலில் இருந்த பெண் பிக்குனி மீதே இருந்தது. பெண், துறவி ஆன்தை அந்தக் கண்களால் நம்பமுடியாததாய் இருந்தது. புத்த பகவானை வணங்கி தம்ம பதத்திலிருந்து வாழ்வு குறித்து சில விளக்கங்களைச் சொல்லலானாள் அந்தப் பிக்குனி.

"கோ து ஹாஸோ கிமானந்தோ
நிச்சங் பஜ்ஜலிதே ஸதி
அந்த காரேன ஓனத்தா
பதீபங் ந கவெஸ்ஸத"– சமஸ்கிருதத்தோடு தெலுங்கு கலந்தது போன்று சப்தம் தரும் பாலி மொழியில் ஆண் பிக்கு சொல்லி முடித்ததும் தேவதை போல் இருந்த பெண் துறவி விளக்கம் சொன்னாள். "அன்பர்களே உலகம் பற்றி எரிகிற போது களிப்பும் சிரிப்பும் என்ன வேண்டியிருக்கிறது. இருளினால் சூழப்பட்டிருக்கிற நீ ஏன் வெளிச்சத்தை நாடக்கூடாது."

கேட்டுக் கொண்டிருக்கும்போதே எங்கிருந்தோ ஒரு கல் கூட்டத்தில் வந்து விழ, பார்வையாளனாயிருந்த எவனோ ஒருவன் 'ஓ'வென அலற, கூட்டத்தில் மிரட்சியும் பயமும் கலந்து மக்கள் ஓட ஆரம்பித்தனர். பிக்குகள் சலனமற்று எப்போதும் போல் நின்றிருக்க, தூரத்தில் இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவளைப் பார்த்து கேட்டான் –"இன்னும் இங்கு ஏன் நிற்கிறாய்? போ உள்ளே." அவனின் திரண்ட தோள்களில் வீரமும், நெற்றியிலிருந்து திருநீற்றின் மணமும் பளிச்சென வெளித்தெரிந்தன.

"ஓ! அந்தப் பிக்குகளின் மீது கல்லெறிந்தது உன் வேலைதானோ?" என்று கேட்டபடி எரித்துவிடுவதுபோல விழிகளை உருட்டினாள் அவள். நேருக்கு நேர் அவள் பார்வையைச் சந்தித்தபடி சொன்னான்: "சிலகாலமாய் உன் நடவடிக்கை சரியாயில்லை."

"சாரம் அற்றவைகளை சாரம் உள்ளவை என்றும், சாரம் உள்ளவைகளை சாரம் அற்றவை என்றும் கொண்டிருப்பவர் சரியான சாரத்தை அடைய மாட்டார்."

"என்ன உளறல் இது துறவியைப்போல. இந்தப் பிக்குகளைக் கிராமங்களுக்குள் விட்டது எவ்வளவு முட்டாள்தனம். சரி, சொல் என்னை ஏன் வெறுக்கிறாய்?"

"வெறுக்கும் மனம் எனக்கில்லை."

"அப்படியானால் திருமணத்தை ஏன் மறுக்கிறாய்?"

"கட்டுப்படுத்தும் எதையும் மறுக்கிறேன்."

படிப்பகம்

www.padippakam.com



"ஓ! துறவு மீது ஆசையோ?"

"ஆசையல்ல, தேடல். தெரிந்து செயல்படுவது ஆசை. தெரிய முயல்வது தேடல்."

"ஊரில் இது எப்போதும் சாத்தியமில்லை பெண்ணே."

"என் எண்ணம் வெளியைப் பற்றியது."

"உன்னால் காமத்தைக் கழற்ற முடியுமோ?"

"காமத்தில் கலந்து நடக்க முயல்வேன்."

"அதற்கும் நான் வேண்டும்."

"இச்சையைத் தூண்ட நீ எதற்கு? நான் போதும்."

"ஏய், நான் உன் தாய்மாமன்."

"உறவைச் சொல்வதில்கூட ஆணவமா?"

"உன் புத்தி இப்படியானதேன்?"

"கண்டு பிடித்துவிடுவேன் அதற்கும்- காரணத்தை."

"கண்டாலும் அதை அம்பலப்படுத்த முடியா தற்குறி நீ."

"நான் வரிகளை நம்புகிறவள் அல்ல. வண்ணங்களை நம்புகிறவள். கோடுகள்கூட என் கோஷத்தைக் கூவலாம்."

"நன்றாக வரைகிறாய் வாயில் வார்த்தையை."

"மௌனத்தின் சிறப்பை உணர்த்தியதற்கு நன்றி."

"உன்னை அடையாமல், அடக்காமல் விடமாட்டேன். வரும் திங்கள் உன் தோள் என் மாலையைச் சுமக்கும்."

"உன் சொல் என் தேடலைத் தீவிரமாக்கலாம். ஆனாலும் தீர்வு என்னிடமில்லை."

தொடர் வாதத்தில் தோல்வியுற்றவன் கோபம் கொப்பளித்தபடி காலைத் தரையில் ஓங்கி மிதித்துவிட்டு போனபிறகும் அத்திசையையே பார்த்துக்கொண்டிருந்தாள். அத்திசையில்தான் பொலியூரின் எல்லையில் அடர் கானகம் ஆரம்பிக்கிறது என்பதை அவள் அறிந்திருந்தாள். பெண் ஆன்மீகத்தை அறியலாம். ஐக்கியமாக முடியாது என்பதை அவளால் ஏற்க முடியவில்லை. தியானப், யோகம், புராணம், வேத விளக்கம் இவையெல்லாம் ஓதுவாரான தன் தந்தையிடம் கேட்டுத் தெரிந்து, தெளிந்தது மனத்தின்மையை ஏற்படுத்தி இருந்ததால் அவள் அந்த முடிவை எடுக்க வேண்டி அச்சப்படவில்லை. அவள் மனம் முழுக்க கேள்விகள் நிரம்பியபடி இருந்தன. அவை பதிலுக்காகத் துளைத்துக் கொண்டிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



★ ★ ★

கற்குகையில் சுவர்கள் ஓவியங்களால் நிறைந்து கொண்டிருந்தன. அந்த ஓவியங்கள் தன் முழுமை பற்றி கவலைப்படாது குறிப்புகளாய் தன் தத்துவ ரகசியத்தைச் சொல்வதில் குறியாயிருந்தன. குகைக்கு வெளியே பெண் துணையை அழைக்கும் காட்டுப்பூனையின் அழைப்பு சகிக்க முடியாதபடி குழந்தையின் அழுகையும் வலியின் கடுமையில் வரும் முனங்கலும் சேர்ந்த கலவைபோலிருந்தது. தூரத்தில் அணில்கள் புணர்ந்து கொண்டிருந்தன. இது இனப்பெருக்கக் காலமாயிருக்கலாம்.

''என்றுமில்லாமல் எனக்கேன் இந்த உடல் தினவு? உடல் என் உத்திரவைக் கேட்க மறுக்குமா? காமத்தைக் கடப்பதற்கும் அடக்குவதற்குமான இடைவெளியில் ஊடாடுகிறேனோ? ஐம்புலனை அடக்கினால் அனைத்தும் சித்தம். ஆம். சித்தம்.'' உதடுகள் முணுமுணுத்தபடியே...

குகை வாசலின் அருகே இருந்த பெருங்கல்லை, ஏற்கனவே எடுத்து வைத்திருந்த காய்ந்த சுவடு துணைகொண்டு நெம்பி நெம்பி, குகை வாயிலை மூடி, இலைகளால் கட்டியிருந்த மரவுரி ஆடையை அவிழ்த்தெறிந்து, தூய நிர்வாணமாகி, சவ ஆசனத்தில் கண் மூடி தியானிக்கத் துவங்கிவிட்டாள். இருளாலும் மவுனத்தாலும் சூழ்ந்த குகையில் சுவாசக் காற்றும் குறையலாயிற்று.

∴ ∴ ∴

''சில மாதங்களுக்கு முன் அபூர்வமாய் பூமிக்கடியில் கண்டறியப்பட்ட குகை ஓவியங்கள் குறித்து... தன் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்த முதல்வர் தமிழர்களின் ஓவியத் திறமைக்கு இது ஒரு சான்று என்றும் இவ்வோவியத்தை ஒரு பெண் வரைந்திருப்பது உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளதால் தமிழ்ப் பெண்ணின் பெருமையை உணர்த்தும் வகையில் ஆதி ஓவியா என்ற பெயரில் சிலை நிறுவப்படும்,'' என அறிவித்துள்ளார்.

தொலைக்காட்சி அரசின் அறிவிப்பை அறிவித்தது. நிறசேர்க்கை எனும் காலாண்டிதழ் சென்னை L.L.A. பில்டிங்கில் ஒரு கூட்டு விவாத கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. இன்று மாலை அறிவு ஜீவிகளின் இலக்கியக் கூட்டம். முன்னதாகச் சென்றுவிட்டேன். ஜீன்ஸ், ஜோல்னா, பைஜாமா, ஜிப்பா– பல தரப்பட்டவர்களும் இவ்வாடைக்கு மாறியிருந்தனர். பலர் தாடி வைத்திருந்தனர். வேட்டி கட்டியவர்களைக் காணோம். கூட்டு விவாதம் துவங்கியது. குறிப்பெடுக்கத் தயாரானேன்.

படிப்பகம்

www.padippakam.com



"ஒரு சித்தாந்தத்தை மேஜிக்கல் ரியலிசத்தில் அதாவது ஜால யதார்த்தத்தில் இவ்வளவு தெளிவாக யாரும் சொல்ல முடியாது. ஆகவே தமிழின் முதல் மேஜிக்கல் ரியலிச சித்தாந்தி ஒரு பெண் என்பதே என் முடிவு."

"அவள் தனித்து இருந்திருக்கிறாள். எனவே ஏதேனும் ஆதிக்க சமூகத்தின் கொடுமைக்கு ஆட்பட்டிருக்கலாம்."

"அவள் பழங்குடி இனத்தவளாக இருக்கக் கூடும்."

"கற்குகை மூடப்பட்ட நிலை என்பதால், அவள் கற்பழிக்கப் பட்டிருக்கலாம்."

"நீங்கள் தேவையில்லாமல் சாதிஅரசியலை நுழைக்கிறீர்கள்."

"எதில்தான் அரசியல் இல்லை?"

"குகை கிறுக்கல் பெண்ணினுடையது எனில் அவள் மனப் பிறழ்ச்சி நோயினால் ஆட்பட்டு இருக்கவேண்டும். அது மனதின் எதிரொலிப்பு."

"இதை ஏற்க முடியாது. இவர் ப்ராய்டின் உளவியல் ஆய்வை உள்வாங்கவில்லை போலும். அறிவாளிக்கும் பைத்தியத்திற்கும் நூலிழைதான் வித்யாசம். அவள் அறிவாளியாயும் இருக்கலாம்."

"அவள் முதல் பெண் ஓவியர் என்பதைப் பற்றிப் பேசாமல் இருப்பது ஆணாதிக்கப் போக்கைக் காட்டுகிறது."

"உங்கள் ஈகோவை சற்றுத் தள்ளிவைத்து விசாலமான மனதோடு, அந்தராத்மாவோடு அணுகிப் பார்த்தால் அவள் ஒரு பெண் சித்தராக இருக்கக்கூடும். ஆம். 19ஆவது சித்தர்."

"அன்பரே, உங்கள் R. S. S. புத்தியை நாவல்ல வைச்சிக்கிடுங்க. இதுல வேணாம். சிறுபான்மை எதிர்ப்புக்கு எதிரானது இவ்வமைப்பு."

"சரி விடுங்க. அது அவர் சொந்த அபிப்ராயம்."

"இந்த வண்ணக் கிறுக்கல்களால் அவள் சாய வியாபாரி மகள் என்றே தோன்றுகிறது."

"வியாபார புத்திடா."

"டாய், என்ன பேசற. மூஞ்சிய பாரு வியாபார் புத்தி யாருக்கு? சான்ஸ் கிடைச்சா எல்லாத்திலும் பேர மாத்தி எழுதற நீ தூய இலக்கியவாதியா?"

—

படிப்பகம்

www.padippakam.com



''அடடா, நிறுத்துங்கப்பா. இப்படி நமக்குள்ள மோதிக்கிட்டா எப்படி? ஆதிக்க சக்திக்கு அவல் கிடைச்ச மாதிரி ஆயிடும். கூட்டு விவாதம் பல கோணத்தில பல்நோக்கு விசாரணையை எழுப்பி இருக்கு. இத ஒழுங்கமைத்து ஒத்த கருத்தை இப்ப உருவாக்க முடியாது. எனவே உங்க ஆய்வை கட்டுரை வடிவில் சமர்ப்பித்தால் மலராக வெளியிட உத்தேசம்.''

''அடுத்த அமர்வில் மலராக்கம் பற்றிப் பேசலாம்.''

முணுமுணுப்புகளோடு இரவு சுவர்க்கோழியின் கூச்சல் மெல்ல நகலெடுத்து அறையில் நிரம்பலாயிற்று. ஆட்கள் படிக்கட்டுகளில் இறங்கிக்கொண்டிருந்தனர். ஒரு சிலர் விட்ட புகையில் அப்பிம்பம் மங்கலாயிருந்தது. குறிப்புகள் ஏதும் எடுக்க முடியாத என் வெள்ளைத்தாள் கங்காரு குட்டி போல் பத்திரமாய் உள்ளேயேயிருந்தது. காவலாளி அறையை மூட எதிர்த்திசையில் படிக்கட்டில் ஏறிக் கொண்டிருந்தான் இன்றைய பணி முடிக்க. ●

---

சந்திரனும் சூரியனும்
நட்சத்திரங்களும் மேகங்களும்
இடியும் மின்னலும்
நிறைந்தும்
அற்ற நீலமுமாய்
பரந்திருக்கிறது வானம்

கேள்விகளுக்கு
விடை தேடலாம்

சிக்கல்களுக்கு
தீர்வு கேட்கலாம்

விச்ராந்தியாய் கழிக்கலாம்
பொழுதையேனும்

அதன்
பிரம்மாண்டத்தில் ஐக்கியமாகி
புள்ளியாய்க் கரைந்துபோகலாம்

நிமிர்ந்து பார்க்க மட்டும்
நேரம் கிடைத்தால்

**—அருளமுது**

படிப்பகம்

www.padippakam.com

முன்இதழ்த் தொடர்ச்சி

# சங்கர நோக்கி II

கவிதாசரண்

## 1

சங்கரன் தன் புலன்களை நிகழ்களத்தில் ஒருங்கிணைத்தவராய், சாக்குப் படுதாவைக் கொஞ்சம்போல விலக்கி மழையினை ஊடுருவிப் பார்த்தார். வானம் தன் 'வெளி'யின் கனத்தை உருக்கி, அடர்மேகச் சல்லடையூடாகக் கொட்டிக் கவிழ்த்தாற்போல் நீர்ச்சரங்கள் பாய்ந்திறங்கின. அந்திப் பொழுதின் பொன்னிறக் கதிர்கள் பீர்க்கங் கொடிகளில் பூக்களாய்த் துளிர்த்த கணங்களில் 'காத்தும் கருப்பு'மாய் சடசடத்துக் கொட்டத் தொடங்கிய மழை, நிலம் தந்த அரவணைப்பில் தன் வசமிழந்தாற்போல இன்னும், இன்னுமாய் நெக்குருகிக் கொண்டிருந்தது.

மழை வருமுன் தன் வீட்டு முற்றத்துப் பந்தலில் ஆடிக்கொண்டிருந்த ஒற்றைப் பீர்க்கம் பூவை நினைவு கூர்ந்தார். பொன்னுக்கு மஞ்சள் பூசினாற் போன்ற அதன் பூரித்த நிறத்தில் மனம் கிடந்து தவித்தது. மலத்தில் உயிர்க்கும் ஆசைக் கனவை நிறத்தில் கிளர்த்திச் சிரிக்கும் பிள்ளை முகமாய் அதன் இதழ்கள் பூரித்து விளங்கின. என்ன ஆசைக் கனவு? ''நான் எப்பவும் ஒங்க பேச்சா இருக்கணும் மாமா'' என்பதா?

'என்ன செய்ய?' என்பதாகத் தன் தலையைச் சிலுப்பிக்கொண்டவரின் நினைவுப்பரப்பில் எங்கே தொட்டாலும் அந்தத் தொடுபுள்ளியே தான் உள்ளிழுக்கப்படுவதற்கான சுழலாய் விரியக் கண்டார். இரவும் மழையும் கூடி அவரை இதற்காகத்தான் முடக்கினாற் போல் பட்டது. இருள் அவிழ்க்காத துயரம் ஏது? இருப்பினும் நிகழின் இளைப்பாறலில் தன்னை நெகிழ்த்திக்கொள்ள முயன்றார்.

மண்ணோடு தண்ணீராய்ப் பொருந்தி வாழும் மக்கள், மப்பும் மந்தாரமுமான மழை நாட்களில் பீர்க்கம் பூவைப் பார்த்துத்தான் பொழுது சாயும் நேரத்தைக் கணிக்கும்படி

படிப்பகம்

www.padippakam.com



யாய் இருக்கும். அதை உறுதிப்படுத்திக்கொள்ளும் உடன்நிகழ் வாய் ஊர்ப் பிள்ளையார் கோயிலிலிருந்து சேகண்டி மணியோசை யுடன் சங்கு முழங்கும். பொழுதடங்குவதற்குள் வீட்டு வேலை களை அரக்கப்பரக்க ஒழுங்கு பண்ணுகிற பெண்கள் தங்கள் முற் றத்துப் பந்தலில் 'பொல்'லென்று பூத்துச் சிரிக்கும் பீர்க்கம்போது களைத் தற்செயலாகப் பார்க்க நேர்ந்ததும் "ஆத்தாடி! பொழுதே பூட்டதே. ஏன்டி அம்மாளு, புள்ளையாக் கோயிலு சங்கு வச் சாச்சா?" என்று ஒருவரையொருவர் கேட்டு உறுதிப்படுத்திக்கொள் வார்கள். பீர்க்கு பூத்த பின்னும் பொழுது கொஞ்சம் மீதமிருக்கும். பிள்ளையார் கோயில் சங்கு பொழுதடங்கியதை உறுதிப்படுத்தும்.

'அந்தச் சங்கு உண்மையில் பொழுதை அடக்கம் பண்ணுகிற சங்கா, அல்லது அடக்கத்தை அறிவிக்கிற சங்கா?' என்று சங்க ரன் சிறிது யோசித்தார். இரண்டும் ஒன்றாகுமா? அல்லது வேறு வேறுதானா? அடக்கம் பண்ணுகிற வெட்டியானும் அறிவிக்கிற பண்டாரமும் அடிப்படையில் ஒன்றுதான். ஆனால் நடைமுறை யில் வேறு. படிநிலை வேறுபாடு. இவ்வேறுபாட்டை இந்திய சமூகம் எத்தனை நுட்பமாய்ப் பேணி மகிழ்கிறது! இங்கே நுட் பம் என்பது வெறும் அற்பம்தான். ஆதிக்க மனத்தின் சான்றா தாரங்கள் அற்ற அற்பம். இந்திய மானுட ஞானம் ஈன்றெடுத்த இந்தத் துயர் மிகுந்த அற்பத்தின் வடிகால்கள் நுங்கும் நுரையு மாய்ப் பெருகித் திளைப்பது இவ்வேறுபாட்டால்தான். பொதுப் புலத்தில் முதன்மையுறாத வேதமும் ஞானமும் வெளிப்பாயும் கங் கையும் யமுனையுமாகவும் வெகுமக்களைப் பெருநோயாய்த் தின்ற ழிக்கும் இந்த அற்பத் துயர் ஊற்றோ கரந்தோடும் சரஸ்வதியாகவும் கூடிக் கலந்து இம்மண்ணைப் புனிதப் படுத்துகிறதாம். புனிதம் என்பது அவரவர் நலனுக்கேற்பதான்; சாணியில் புழுக்கும் வண் டுக்கு மல உருண்டையே புனிதமாதல் போல.

சங்கரன் தன் ஒவ்வொரு கணுவிலும் சருக்கிச் சருக்கித் தன்னை நிகழ்வில் பொருத்திக்கொண்டு நினைவுகளை வளர்த்தார்.

பிள்ளையார் கோயில் புரிசங்கு முழங்கியதும் வீடுகளில் விளக் குகள் பூக்கும்– 'சீமத் தண்ணி'யில் மினுக்கும் 'முட்டை விளக்கு கள்'தாம். சேரியிலுள்ள எல்லா வீடுகளிலும் காமாட்சி விளக்கோ, கல்விளக்கோ, அல்லது திரிமூக்கு அகல் விளக்கோ இருக்கும்- 'நல் லது பொல்லது'க்கு ஏற்றி வைக்க. ஆனால் ஏட்டுச் சுரணையுள்ள மையக்கோயில் வீட்டுக்காரர்களின் இரண்டொரு வீடுகளில் மட்டும் 'நடுவீட்டுப் படையலு'க்குச் சுவரருகே கொலுவைக்கப்பட்டுள்ள குத்துவிளக்கோ, காமாட்சி விளக்கோ எல்லா நாட்களிலும் ஏற்றி வைக்கப்படும். அதற்கேற்ப அவ்வீடுகளில் படிக்கும் பருவத்தின

படிப்பகம்

www.padippakam.com



ரும் இருப்பர். 'சீமத்தண்ணி' விளக்கின் கரிப்புகை கண்ணைக் கெடுக்கும் என்பதால் விளக்கெண்ணெய்ச் சுடரில்தான் படிக்க அறிவுறுத்தப்படுவார்கள். எண்ணெய் விளக்கோடு அடுப்பங்கரைகளில் முட்டை விளக்கும் எரிவதால், அவ்வீடுகள் கொஞ்சம் கூடுதல் வெளிச்சமாயிருக்கும். எண்ணெய் விளக்குகளை அணைக்கும் போது திரியை எண்ணெயில் இழுத்துவிட்டு அதன் நுனியில் மினுங்கும் தீக்கங்கை அமர்த்துவார்கள். இல்லையேல் எலி அதை இழுத்துக்கொண்டுபோய் எரவானத்தில் சொருகிவிடக்கூடும். ஒரு முறை அப்படி நேர்ந்து, கூரை பற்றிக்கொண்ட அனுபவம் உண்டு.

வீட்டில் விளக்கு வைத்த பிறகு நெருப்பு கொடுக்கமாட்டார்கள். தீப்பெட்டிப் புழக்கம் வெகு அபூர்வமாய் இருந்த காலம். அந்தத் தருணங்களில் பெண்கள் தங்கள் விளக்குகளை எடுத்துச் சென்று பொருத்திக்கொண்டு, அது அணையாமல் இருக்க குடங்கையில் மறைத்தும் மாராப்புச் சேலையால் மூடியும் காற்றுக்குப் போக்கு காட்டியபடி மீண்டு வருவார்கள். இருண்ட தெருக்களினூடே நகரும் இந்த ஒளியில் அலைப்புறும் நிழல்களும் சேலைக் கிழிசல்களுடே சிந்தும் ஒளிப்பொட்டுகளும் உணக்கையுள்ள மனங்களின் அதிர்வூட்டும் சித்திரங்களாகும். மாட்டுத் தொழுவத்திலும் தாழ்வாரத் திறப்பிலும் அங்கங்கே காற்றிலாடியபடி தொங்கும் லந்தார வெளிச்சத்தில் அசைவுறும் நிழல் வடிவங்கள் ஓர் அமானுஷ்ய உலகத்தை அழித்தழித்து எழுதிக் காட்டும். ஒரு அசப்பில் யோசித்தால், இரவுப்போதின் எல்லா நிகழ்வுகளும் சங்கு தன் ஊங்காரத்தால் நூற்றுக்கொடுத்த அரூப இழைகளாலான படுதாச் சித்திரங்களோ என வியக்கத் தோன்றும்.

பிள்ளையார் கோயிலில் விடிகாலையும் சங்கு பிடிப்பதுண்டு. ஆனால் சேரியில், குறிப்பாகப் பெண்களிடையே அதற்கு எவ்விதத் தாக்கமும் இருப்பதில்லை. ஏனெனில் கருக்கல் பிரியுமுன்பே பலரும் தங்கள் காடுகரைகளுக்குச் சென்றுவிடுவார்கள். காலைக் கதிரவனின் செங்கண் வெளுக்கும்வரை தங்கள் துண்டு நிலங்களில் சோலி பார்த்துவிட்டு, பின்னர் வீட்டுக்கு ஓடிவந்து, கும்பி எரிச்சலைத் தணித்துக்கொள்வதற்காகக் கூழோ காடியோ குடித்துவிட்டு கூலிவேலைக்குக் கிளம்பிவிடுவார்கள். வேலை கிடைக்காத நாட்களில் கூட்டமாய்ச் சேர்ந்துகொண்டு விறகு பொறுக்கப் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி வரை போவார்கள்.

வாழ்வு அவர்களுக்கு வழங்கிய வஞ்சனைகளையும், அவர்களிடமிருந்து பறித்தெடுத்துக்கொண்ட தொப்புள்கொடி உறவுகளையும் நினைந்து நினைந்து உருகிக் கரைவதெல்லாம் இரவுப்போதில்

படிப்பகம்

www.padippakam.com



விழிப்பெடுத்து, துக்கம் திரண்டெழுந்து தூக்கம் தொலையும் போதுதான் அழுவது ஆறுதலுக்காக மட்டுமல்ல; அதனூடாக வாழ்வதற்கும்தான்.

வாழ்க்கை என்பது இந்த மக்களுக்கு இழப்பும் நினைப்பும் தவிர வேறென்னவாக இருந்துவிடப் போகிறது?

## 2

பிள்ளையார் கோயிலில் பூசை செய்கிறவர் ஒரு பண்டாரம். சதாசிவப் பண்டாரம். சங்கரனுக்குச் சமவயதுக்காரர்.

சரியாக 1900ஆம் ஆண்டு என்று சொல்லப்பட்டது நினைவிருக்கிறது: சதாசிவத்தின் தாயார் பூனாச்சி அம்மையும் தகப்பனார் சாம்பசிவப்பண்டாரமும் தாலிக்கயிறு பிரித்துக்கட்டாத புதுமணமக்களாய் இவ்வூருக்குக் குடிவந்தார்கள். சிதம்பரத்லையடுத்த கிழக்குக் கடற்கரையோரத்திலிருந்து பிழைப்பு தேடி வந்ததாகச் சொன்னார்கள். பூக்கட்டிப் பண்டாரப் பிழைப்பு. அம்மைக்கு தேவாரம், திருவாசகம் பாடாந்தரம். ஐயனுக்கு திருமந்திரம், வள்ளலார் திருமுறைகளில் கூடுதல் ஈடுபாடு. சைவத்திருமுறைகளைப் பண்ணோடு பாடுவதிலும் வழிபாட்டு நெறிமுறைகளைப் படிமானப்படுத்துவதிலும் அம்மையே அதிகம் நறுவிசாய்த் தெரிந்தார். ஐயனின் போக்கு 'அதுக்கென்ன இப்ப?' என்பதாய் இருந்தது. அவர் குழந்தையாய் இருந்தபோது இராமலிங்க அடிகளார் அவரைத் தொட்டுத் தூக்கியிருக்கிறார் என்பது கூடுதல் பெருமையாக வாய்த்திருந்தது. ஊர் அவர்களை இரு கை நீட்டி ஏற்றுக்கொண்டு பிள்ளையார் கோயில் சேவகத்தை வழங்கியது. அவர்கள் வந்த பிறகுதான் பிள்ளையாருக்கு முன் மண்டபத்தோடு கூடிய கோபுரம் எழுப்பப்பட்டது. சதாசிவம் பிறந்தது அதற்குப் பிறகுதான்.

சாம்பசிவப் பண்டாரம் சதாசிவப் பண்டாரத்தின் தந்தையார் என்பதோடு அதற்கு இணையாக சங்கரனையும் பாதித்தவர். சிறுவயதில் கூடிவந்த அனுபவம். இப்போதும் கூட அவர் நினைவில் தன்னை ஒரு சிறுவனாய்ப் பாவித்துக்கொள்வது சங்கரனுக்கு சுகமாகத்தான் இருந்தது, நாள்பட்ட துயரத்தை அழுது ஆற்றிக்கொள்ளும் சுகம்போல. ஒவ்வொரு முளைப்புக்கும் ஒரு விதை உண்டு எனில் சங்கரனின் தன்மானச் சிந்தனைக்கான விதை பற்றிய அறிதல் அவருக்கே அதிகம் இருந்திருக்கக் கூடும்.

படிப்பகம்

www.padippakam.com



முதன்முதல் அவரைப் பார்த்தபோது சங்கரனின் தந்தையைப் போலவே அவரும் பின் மண்டையில் கட்டுக்குடுமி வைத்திருந்ததும், குடுமியின் அமைப்பும் அளவும் அசப்பில் ஒன்று போலவே இருந்ததும் சங்கரன் அவர்பால் ஈர்ப்பு கொள்ளக் காரணமாயிருந்தது. அதைத் தொடர்ந்து அவரோடு பேசக் கிடைத்த தருணங்களைவிடவும், பேசாமல் அவரைப் பார்த்தும் நினைத்தும் கழித்த தருணங்கள் அந்த ஈர்ப்பை இணக்கமாக்கிய அர்த்தமுள்ள கணங்கள். பண்டாரம் 'அப்பாடா' என்று ஓய்ந்திருக்கும் தருணங்களில் அவரது பார்வையானது ஆழமும் அமைதியும் அறியவேவண்ணாப் பளிங்குநீர்த் தேக்கம் போலவும், அதனுள்ளே ஆடும் பம்பரம் ஒன்று 'ஆடாமல் அசையாமல்' தூங்கிக்கொண்டிருப்பதைப் போலவும் சங்கரனைக் கிறங்கவைக்கும். ஆனால் அதெல்லாம் வெறும் கற்பனைதானோ என்னும்படி மனிதக் கவனங்களூடே புழங்கும் தருணங்களில் அவர் முகத்தில் ஒரு பதற்றம் ததும்பிக் கொண்டிருக்கும். வேற்றிடத்து மனிதர்களைத் தன் வீட்டு முற்றத்திலோ கோயில் வளாகத்திலோ பார்க்க நேரும்போது அந்தப் பதற்றம் முகத்திலிருந்து வழித்தெடுக்கிறாற்போல் அடர்ந்துபோகும். வள்ளலாரின் 'தனித்திரு, விழித்திரு, பசித்திரு'வின் உருவாக்கமாகத் திரண்டு, தன்னாழம் தேடும் ஞானவானாகக் கனிந்திருக்க வேண்டியவர் தன் பண்டாரப் பிழைப்பால் மலினப்பட்டுக் கிடப்பதாகச் சங்கரனுக்குத் தோன்றியதுண்டு, அள்விட முடியாத ஆழப் பெருங்கடல் கரையில் புரளும் அலைகளாக மலினப்படுவது போல. கடல் என்றதும் அதன் ஆழம் கவனப்படுவது யாருக்கு? நீருக்குள் மூச்சுத் திணறி அவசமுறும் உயிர்களுக்குத்தாமே. ஆனால் ஆழ நீரில் வாழும் மீனுக்கு? கடல்தான் அதன் 'வெளி'. மீனாய்ப் பிறக்க வேண்டியவர் மனிதனாய் இருக்க நேர்ந்ததன் சீர்குலைவுக்கு ஆளானவர்.

ஒருநாள் அவர் ஊரை அடுத்த ஓடைக்கரையிலுள்ள ஒரு கிளுவைப் புதருக்கடியில் போய் உட்கார்ந்து கொண்டார். ஆளண்டா இடம் என்பது அவர் கணிப்பு. புதருக்கடியில் செழித்துப் படர்ந்திருந்த புல்மெத்தையில் சம்மணமிட்டு அமர்ந்தவராய் கண்களை மூடி, மனத்தை ஒருமுகப்படுத்தி, வள்ளலார் பாடல்களை மெல்லிய குரலில் வாய்விட்டுப் பாடிக்கொண்டிருந்தார். இறைவன் மேல் வள்ளலார் பாடிய பாடல்களையே வள்ளலார் மேல் அவர் வைக்கும் முறையீடுகளாக மாற்றிக்கொண்டதாகப் பட்டது. பாடலின் சில வரிகளை மறித்து மறித்துப் பாடிய அதிர்வில் அவரின் மூடிய கண்களிலிருந்து கண்ணீர் சுரந்தது.

தற்செயலாக ஓடை வழியே நீந்திக் கரையேறி, தன் இடுப்புத் துணியைப் பிழிந்து கட்டிக் கொண்டு, சற்றுத் தொலைவில் அடர்ந்த

படிப்பகம்

www.padippakam.com



புதர்களின் நடுவே வற்றாமல் சுரந்துகொண்டிருக்கும் ஊற்றுநீர்க் கேணியை நோக்கி குறுக்கு வழி தேடிப் போய்க்கொண்டிருந்த சங்கரன், பண்டாரத்தை அங்கே கண்டு திகைத்துப் போனார். பண்டாரத்தின் வாயிலிருந்து வரிகள் ஒழுகிக் கொண்டிருந்தன.

என்னைஒன்றும் அறியாத இளம்பருவந்தனிலே
என் உளத்தே அமர்ந்தருளி யான் மயங்குந் தோறும்
அன்னை எனப் பரிந்தருளி அப்போதைக் கப்போ(து)
அப்பன் எனத் தெளிவித்தே அறிவுறுத்தி நின்றாய்
நின்னை எனக் கென் என்பேன் என்உயிர்என் பேனோ?
நீடிய என் உயிர்த்துணையாம் நேயமதென் பேனோ
இன்னல் அறுத் தருள்கின்ற என் குருவென் பேனோ
என் என்பேன் என்னுடைய இன்பமதென் பேனே.

வரிவரியாய் உருகி உருகிப் பாடப் பாட, அவரே ஓடை நீரில் கரைந்தோடிக் கொண்டிருப்பதாக எண்ணி, சங்கரனுக்கு உடல் பொடித்தது. அவரை அந்தவிதமே விட்டுச் சென்றால் அதுதான் அவரைப் பார்க்கும் கடைசித் தருணம்போலத் துணுக்குற்றவராய், அப்படி ஆகிவிடக் கூடாது என்னும் வேண்டுதலோடு அவர் எதிரே சென்று கைபெட்டும்படியாய் அமர்ந்து கைகூப்பி கண்ணிமக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். நெஞ்சு தொண்டைக்குள் வந்து 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது.

சிறிது நேரத்திற்குப் பிறகு பாட்டு நின்று, மௌனம் விலகி, அபராகத் தன்னைத் தேற்றிக்கொண்டு கண் விழித்தபோது, சங்கரனை எதிரே கண்டு திகைப்புற்றார். ஆனால் அதையும் மீறி புத்துயிர்ப்பு வந்தாற்போல் முகம் வெளிச்சமாகி, தன் இரு கைகளையும் சங்கரனின் சின்னத் தோள்களில் அமர்த்தி, "என்னடா சதாசிவம்?'' என்றார்.

"நான் சங்கரன், சாமி,'' என்று மறுதளித்து, அவர் கைகளைத் தவிர்க்கும் பொருட்டு சற்றுத் தள்ளி நகர்ந்தார்.

"அவ்வளவுதானே? நான் ஒன்னும் பேதலிச்சுப் போகலடா. சங்கரன்னா என்ன, சதாசிவம்னா என்ன? ஒருத்தன்தானேடா.''

"நான் பறப்புள்ள, சாமி.''

சட்டென அவர் முகத்தில் அந்தப் பதற்றம் வந்து ஒட்டிக் கொண்டது.

"சரிசரி. எதுக்குக் கூச்சமில்லாம அதைச் சொல்ற?''

படிப்பகம்

www.padippakam.com



"கூச்சமா? இதுதான் சாமியோட கவலையா?"

பாம்பின் படத்தில் அடிபட்டாற்போல ஒருகணம் சொல்லற்றுத் தவித்தார். ஆனால் அடுத்த நிமிஷமே தன்னை மீறிய வெடிப்போடு, "ஆமான்டா. அதுதான் என் கவலை. ஏன் தெரியுமா? ஒன்னுன்னு சொல்லிக்கவும் உறவுன்னு சாஞ்சிக்கவும் மண்ணத்துப் போனவன் நான். அதான்டா," என்றவர், சங்கரனின் மிரண்ட விழிகளைப் பார்த்ததும் சட்டென்று நிதானத்துக்கு வந்தவராய்த் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டார்.

சிறிது பொறுத்து, மெல்ல நகைத்தவராய், "பயந்திட்டியாடா குழந்தே?" என்றார்.

"இல்லிங்கய்யா."

"பின்னே எதுக்கு அழறே? எனக்காகவா?" என்றவர், சற்று முன்நகர்ந்து சங்கரனின் கண்களைத் துடைத்துவிட்டார். சற்று நேரம் உள்முகத் தேடலாய் மௌனம் காத்தார்.

பிறகு சொன்னார்:

"இந்த ஊருக்கு நான் வந்து இருபது வருஷத்துக்கு மேல ஆச்சு. எவ்வளவு காலம் ஆனா என்ன? இந்த மண்ணுல எனக்கு அடையாளம் இல்ல. எனக்கு நானே வேத்தாளாயிட்டேன். ஆனா சதாசிவம் அப்படியில்ல. இந்த மண்ணுல பொறந்தவன். உன்னைப் போலவே இந்த ஊருக்குச் சொந்தக்காரன். ஒத்தப்பட்டு நிக்கிறவனை ஊர்க்காரனா ஊனவச்சவன் நீ. உன் கண்ணுவழியா இந்த மண்ணைப் பார்க்கக் கத்துக்கிட்டவன் அவன். கொண்டாடத் தெரிஞ்சா இதைவிடப் பெரிசா என்ன சொந்தம் வந்துடப் போவுது? கொண்டாடுவியா?"

"சொந்தம்னு பாத்தா எங்களுக்கு மரமும் மனுசாளும் ஒன்னுதாங்கய்யா."

"நீ நல்ல புத்திசாலி. நீ சொல்றதுதாய்யா ஒசந்த ஞானம். ஐயறிவும் கூடிவர ஆறறியும் ஞானம். ஒன்னோட சொந்தக்காரனும் அந்த ஞானத்துக்கு உகந்தவனா இருப்பான்டா குழந்தே."

சாம்பசிவப் பண்டாரத்தை, பிறந்த சில நாட்களில் தொப்புள் கொடிகூடக் காயாத பச்சை மண்ணாகக் கொண்டு போய் வள்ளலார் காலடியில் கிடத்தினாராம் அவர் தந்தை. வள்ளலார் தமது மடிமீது இருத்தி, வாழ்த்தி வைத்த பெயர்தானாம் சாம்பசிவன்.

படிப்பகம்

www.padippakam.com



"இப்படியொரு பெறமுடியாத பேறு வேற யாருக்குக் கெடைக்கும், சொல்லு. இவருக்குக் கெடச்சது. இவரை ஏத்துக்கிறதுக்கு இது ஒன்னே போதும், மற்றதெல்லாம் தூசுன்னு எனக்குத் தோனிடுச்சு. 'இவன் மேலோனா வாழுவான் போ'ன்னாராம் இராமலிங்க சுவாமிகள். அந்த மகானோட வாக்கு பலிக்கத்தான் நான் இவர் கையைப் புடிச்சுக்கிட்டேன்," என்று பூனாச்சியம்மை ஒரு முறை சங்கரனிடம் சொன்னார்.

"அப்போ ஐயனா வந்து அம்மையோட கையைப் புடிச்சுக்கலியா?" என்று பகடியாகக் கேட்டார் சங்கரன். ஆனால் அந்த அம்மாள் அதைப் பகடியாக எடுத்துக்கொள்ளவில்லை. அதற்கு அர்த்தம் கற்பித்தார். "புத்திசாலியாத்தான் பேசறே. நுணுக்கமா பாக்கறியே. சரி, இதைச் சொல்லு. இப்ப நாங்க உன்னைக் கொண்டாடுறது பெரிசா? இல்ல, நீ எங்களைக் கொண்டாடுறது பெரிசா?"

"அம்மை ஐயனைப் புடிச்சிக்கிட்டதுதான் பெரிசு," என்று சொல்லி, அடுத்த பேச்சுக்கு இடம் வைக்காமல் எழுந்துகொண்டார்.

அந்த அம்மை அன்பாகத்தான் இருந்தார். ஆயினும் அவரின் ஏதோ ஒரு அம்சம் சங்கரனுக்கு அந்நியமாய்ப் பட்டது. ஓர் அர்த்தம் சொல்லாக்கப்படாமலே உள்வாங்கப்பட்டு அவருடைய பிள்ளை மனத்தைப் பின்னப்படுத்திவிட்டது.

அது முதல் அவர்களை நாடிப் போவதை சங்கரன் குறைத்துக்கொண்டார். குறைத்துக்கொள்வதுதான் அழகு என்பதற்கான முகாந்திரங்கள் அவ்வப்போது வெளிப்படத்தான் செய்தன.

பண்டாரத்திற்கு கோயிலை ஒட்டினாற்போலுள்ள தோட்டத்தில் வேலி அடைத்து சிறியதாக ஓட்டு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது. சுற்றெல்லையில் சில மரங்கள் இருந்தன: வாதநாரயணமரங்கள். வயலில் பயிர் வைக்கிற நாட்களில் அவை மொட்டையடிக்கப்பட்டு தழைகள் வயலுக்கு உரமாக்கப்பட்டன. வீட்டைச் சுற்றிலும் தோட்டம் பேரட்டுக்கொள்ளும்படியாக நிலப் இருந்தது. குடியானவக் குடியிருப்பின் எல்லைக்குள்தான் எனினும், வேண்டுதலுக்காக எண்ணெய் கொடுக்கவும், குறிப்பு எழுதவும் யாரேனும் தேடிவந்தாலன்றி வீடு ஒதுக்கமானதுதான். அப்படியும் பேச்சு வரத்தான் செய்தது.

"என்ன, பய இங்கேயே கெடக்கான், பண்ணையாளாட்டம்."

"பண்ணைக்கு நாங்க எங்க போவோம்."

படிப்பகம்

www.padippakam.com



"பின்ன என்ன பண்றானாம்?"

"வீட்டைச் சுத்திக் கரம்பா கெடந்தது. கொத்தித் திருத்தித் தோட்டம் போட்டிருக்கான். பூந்தோட்டம், காய்கறித் தோட்டம். திருநீற்றுப்பச்சைக்குப் பாத்திகட்டித் தரச்சொன்னம். தந்தான். அப்பப்ப வந்து பாத்துக்குறான். நல்ல புள்ளையா இருக்கான்."

"இருக்கட்டும் இருக்கட்டும். நல்ல புள்ளன்னா என்ன? பறப் புள்ளயாத்தானே இருக்கான்? அப்படியே இருக்கட்டும். அததும் அத்து மீறாம இருந்துக்கிட்டா சரி."

சங்கரனுடைய தந்தையும் சொன்னார்:

"அவுங்க பொழைக்க வந்தவுங்க. மேட்டுல காலனிக்கிட்டவுங்க. நாம ஊழியம் செய்யிறவுங்க. ஒத்தாசை பண்ணலாம். உதவிக்கு ஓடலாம். ஆனா ஒட்டிக்கிறதல்லாம் சரிப்பட்டு வராது. இதுல இன்னொன்னையும் பாக்கணும். 'நீ எங்க புள்ளமாதிரி'ன்னு பண்டாரம் சொன்னா, அது ஒனக்குக் கிரீடம் வச்சாப்ல. ஆனா 'நீங்க என் ஐயன் மாதிரி'ன்னு நீ சொன்னா அது அவுங்களை செருப்பால அடிச்சாப்ல. சொல்லு ஒன்னுதான். வாய்தான் வேற. பாத்து நடந்துக்க."

ஏற்கனவே பூனாச்சியம்மை சொன்னதுதான்.

ஆகவே, ஒதுங்கிக்கொண்டார். தன்னால் பண்டாரத்துக்கு எந்தவிதமான இக்கட்டும் வந்துவிடக் கூடாது என்னும் வேண்டுதலே இதன் அடிநாதமாக இருந்தது. பார்க்காமல் தீராது என்னும்போது தேடிப்போய்ப் பார்த்துத்தான் தீரவேண்டி இருந்தது. இந்தத் தீராத தாபம்தான் கடைசிவரை உயிர்நாடியாகத் துடித்துக்கொண்டிருந்தது.

கால ஓட்டத்தில் அந்தக் குடும்பம் அமைதியும் தெளிவும் கொண்டு நிறை வாழ்வில் திளைத்திருக்க வேண்டும். ஆனால் அது கைகூடவில்லை. வயது ஏறஏற பூனாட்சியம்மை மீட்சியற்ற மனக் கோணலுக்கு ஆட்பட்டு மெல்லமெல்லத் தன் உள்ளத்தை முள்ளம் பன்றியாகச் சிலுப்பிக்கொண்டுவிட்டார். பண்டாரத்துடன் தான் வாழ நேர்ந்ததை சகிக்கமுடியாத இழுக்காகக் கருதத்தொடங்கிவிட்டார். மறுபரிசீலனைக்குட்படாத மௌடிகங்களை விழுமியங்களாகப் போற்றும் சமூக நியதியின் அலைக்கழிப்பால் தன்னுணர்வற்ற ஆழ்மனப் பீறலாய் வெளிச் சிதறின அவரது சொற்கள். பண்டாரம் சகித்துக் கொண்டார். உளவியல் ரீதியான ஆளுமைச் சிதறலுக்காட்பட்ட தன் துணையை இப்போதுதான் அதிக அனுசர

படிப்பகம்

www.padippakam.com



னையோடு நடத்த வேண்டும் என்ற புரிதலில் அவர் தன்னை நொறுங்கிப் போகாமல் காத்துக்கொண்டார். அத்துடன் சதாசிவம் முற்ற முழுக்க அப்பா பிள்ளையாக வளர்ந்து அவரைத் தாங்கிக் கொண்டார்.

அம்மையின் நிஷ்டூரங்களைச் சகித்தேற்றுக்கொள்வதென்று தந்தையும் மகனும் தீர்மானித்தனர். ஆனால் எந்த நேரத்தில் என்னவிதமாய்த் தாக்குவார் எனத் தெரியாமையால் தங்களை எந்நேரமும் மரக்கட்டைகளாக நீட்டித்துக் கொண்டிருப்பதில் சிரமப்பட்டனர்.

ஒரு விடியற்காலையில் அம்மை தன் படுக்கையிலிருந்து திடுதிப்பென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு, ''உம்மைப் போல பாவியை இராமலிங்க சுவாமிகள் தன் மடியில எப்படி வாங்கி போட்டுனுட்டார்? அதனாலதானே அவரோட சத்திய தர்மசாலையே சண்டைக்களமா ஆயிடுச்சு,'' என்றார்.

''இன்னிக்கு அமாவாசை, தாயே. இருட்டோட எழுந்து தலைக்கு ஊத்திக்காம இந்த நாள் உனக்கு விடியக் கூடாதே?''

''ஆமா. மறந்துட்டேன்.''

வள்ளலாரின் தர்மசாலை பற்றி சதாசிவம்தான் சங்கரனுக்குச் சொன்னார்: வள்ளலார் தன்னை வந்தடைகிறவர்கள் அனைவரும் சாதி சமயங் கடந்த 'சமரச சுத்த சன்மார்க்கிகள்' என்பதின் சான்றாளர்களாய் இருக்கவேண்டும் என்று விரும்பினார். அது சாத்தியமில்லை என்பது அவரைப் போன்ற ஞானிகளுக்கு விளங்காமல் போனது ஒன்றும் வியப்பில்லை. தர்மசாலைக்கு நிலம் வழங்கியவர்கள், அதை நிர்மானிக்க உழைப்பு நல்கியவர்கள் பெரும்பாலோரும் அப்பகுதியில் நிலம் வைத்திருந்த பாமரப் படையாச்சிகளும் சாமானிய உழைப்பாளிகளும்தான். அவர்களை விலக்கிவிட்டால் மனம் திறம்பாத அடியார் கூட்டம் வேறில்லை. ஏடறிந்தோரும் பெருந்தனக்காரர்களும் பக்கத்துணையாகலாம். அவர்களும்கூட அடியார் கூட்டத்தை முன்படையாக வைத்துதான் களமிறங்குவார்கள். தர்மசாலையைச் சேர்ந்தவர்கள் வள்ளலாரை நம்பியவர்கள். தாங்கள் வள்ளலாராய் ஆகிவிட முடியாது என்பதையும் சேர்த்து நம்பியவர்கள். உலக நடப்பிலும் வழக்கிலும் ஊறிப்போனவர்கள். ஒருவரோடொருவர் முரண்படுவதும், பெருங்குரலெடுத்து தர்க்கம் செய்வதும், பகை பாராட்டிக் கட்சியாடுவதும், புறம் பேசுவதும், முகமன் மறுப்பதும் என்பதெல்லாம்கூடக் கூடி வாழ்தலின் நடைமுறை அம்சங்கள்தாம் என்பதாய்ப் புழங்

படிப்பகம்

www.padippakam.com



கிக் கொண்டிருப்பவர்கள். சாதி கடத்தல், சமயம் கடத்தல், சமரசம் பேணுதல் என்பதிலெல்லாம் அவர்கள் சச்சரவிட்டுத்தான் பக்குவம் பெறக்கூடிய சாமானிய மக்கள். வள்ளலார் சாமிகள் இதுபோன்ற சலசலப்புகளால் சலிப்படைந்திருந்த நேரம்.

"அப்பதான் தாத்தா ஐயாவைத் தூக்கிக் கொண்டு போய் அவர் காலடியில் போட்டது. தாத்தா நல்ல கல்விமான். சோதிடக் கலையில் வல்லவர். சித்த மருத்துவர். எல்லாத்துக்கும் மேலா சாமிகளோட பரம பக்தர். அவருக்கொரு பேச்சு வரச் சகியாதவர். அதனால அரைஞான் கயிறுகூடப் போடாமத்தான் ஐயாவைக் கொண்டுபோய் அவர் முன்னால கிடத்தினார். வள்ளலார் தான் அவனைரத் தூக்கி மடிமேல வச்சுக்கிட்டார்."

"தொப்புள்கொடி காயிறதுக்கு முன்ன அரணாக்கயிறு போடக் கூடாதா?" என்று கேட்டார் சங்கரன்.

சதாசிவம் சிரித்தார். ஆனால் அவருடைய முழு உருவமும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கல் மாதிரி கனத்துவிட்டாற் போல் இருந்தது.

"நீயும் நானும் ஒன்னுன்னு ஐயா சொன்னது உலகம் பூராவுக்குமான மானுட தர்மத்தைச் சுட்டிக்காட்ட மட்டுமில்ல சங்கரா, ரத்தமும் சதையுமான உண்மையைச் சுட்டவும்தான்," என்றவர் சற்று பொறுத்து, "அம்மைக்கு மனச்சிதைவு ஏற்பட்டதுக்கு முக்கிய காரணம் என்னன்னு நெனைக்கிற? நான் அம்மா பிள்ளையா இல்லாம முழுக்க முழுக்க அப்பா பிள்ளையா திரண்டுட்டதுதான்," என்றார்.

எரிக்கும் வெயிலில் சுண்டச் சுண்டக் காயப்போட்டால் வெங்காயம் வெறும் சருகுதான் என்பதாயிருந்தது.

சதாசிவம் மீண்டும் சிரித்தவராய், "உனக்கு திகம்பர சாமியார்களைத் தெரியுமில்லியா?" என்று கேட்டார்.

"ஏன் தெரியாம. அம்மணமா அலையிறவுங்கதானே?"

"அவுங்க ஏன் அப்படி ஆனாங்க?"

"ஆரு கண்டா. ஒருவேளை துணி கட்டுற சொரணையக் கூடத் துறந்துட்டாதான் சீவனை சிவனோட சேர்க்க முடியும்னு இருக்கலாம்."

"ஆனா ஜைன சாமிகளுக்கு அது நோக்கமா இருக்கமுடியாது. அதோட, பசிக்கு சோறும் தாகத்துக்கு நீரும் தேடுறவங்க மலசலம்

படிப்பகம்

www.padippakam.com



கழிக்கிற சொரணையை விட்டுட்டேன்னா எப்படி? துணியைக் கட்டிக்கிட்டிருந்தவன் விலக்கிட்டான்னா அதுகூட ஒரு சொரணையுள்ள காரியந்தான். எனக்கென்னவோ அதுக்கு வேற அர்த்தம் இருக்கும்னு படுது.''

''என்னான்னு?''

'''இதோ தீட்டை விலக்கிட்டேன்'னு காட்டத்தான் துணியை விலக்கிட்டாங்கன்னு நெனைக்கிறேன்'' என்றார். கொஞ்சம் இடைவெளி விட்டு, ''ஆனா நவீன திகம்பரசாமிகள் வெள்ளியாலும் தங்கத்தாலும் பூண்போட்ட தங்களோட பிறப்புறுப்பை பொம்மனாட்டி பக்தர்கள் உருவி கும்புடறதுக்காகவே திறந்து காட்டிக்கிட்டுத் திரிவாங்களாயிருக்கும். கங்கைக் கரையிலே இதை ஒரு சமய நெறியாவே கொண்டாடுறாங்களாம்,'' என்றார்.

சங்கரனுக்கு ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று கூட்ட கொஞ்சம் அவகாசம் தேவையாயிருந்தது. அதேசமயம் ஒன்றையும் ஒன்றையும் இரண்டாக்கிக் காட்ட யாரால் முடியுமென்றும் இருந்தது.

சதாசிவம் மேலும் பேசினார்:

''தருமசாலையை அலம்பல் பண்ணிக்கிட்டிருந்த நூறு பேச்சுல ஐயா மடியேறினதும் ஒரு பேச்சாக இருந்திருக்கலாம். ஆனா அம்மை சொல்ற மாதிரி அதுவே பேச்சாயிருந்ததுக்கு எந்த ஆதாரமும் இல்ல. வள்ளலாரைச் சுற்றி கல்விமான்களான முதலிகளும் செட்டிகளும் எழுத்து வாசனையுள்ள ஒன்னுரெண்டு படையாச்சிகளுமே சூழ்ந்திருந்தாங்க. அந்த வளையத்தை ஊடறுத்து தாத்தாவோட அணுக்கமோ தந்தையார் பெற்ற வாழ்த்தோ பதிவு பெறுவது அவ்வளவு எளிதா என்ன? அரசன் காலத்துல அவனுடைய அமைச்சன், படைத்தலைவன் வரைக்கும்தான் வரலாறு இறங்கி வரும். ஆன்மிகவாதிகள் வரலாற்றுல நிலக்கிழார்கள், தனவணிகர்கள், சாதிமான்கள் வரைக்கும்தான் பதிவுகள் இருக்கும். ஒரு கண்ணப்பனோ, சிறுத்தொண்டனோ, நந்தனோ பதியப்படுகிறான்னா, மறைக்க முடியாதபடி நடத்தப்பட்ட படுகொலையைப் புனிதப்படுத்தி, அடிநிலை மக்களைக் கடவுள் பேரால அமைதிப்படுத்தி அடக்கியாளத்தான். வள்ளலாரேகூட அதுக்கு விலக்கில்லாமதான போய்ச் சேர்ந்தாரு?''

ஒருநாள் அம்மை தன்னிலை மறந்தவராய், ''இப்ப நீ கற்பூரத் தட்டை ஏந்திக்கிட்டு சாமியோட சாமியா நின்னு ஊர் வணக்கம் வாங்கிக்கிறியே, அந்த கௌரவம் நான் போட்ட பிச்சை,''

படிப்பகம்

www.padippakam.com



என்று கத்தினார். பண்டாரம் எப்போதும் போலவே தாங்கிக் கொண்டார். ஆனால் சதாசிவம் வெடித்துவிட்டார்.

“சீ நிறுத்து. நீ இழுத்த இழுப்புக்கெல்லாம் ஐயா இறங்கிவந்தாரே, உனக்கு அது கௌரவமா இருக்கலாம். ஆனா அவருக்கு அது சாபம். உன்னோட பெருமைக்காக அவர் சுமந்துகிட்ட பாரம். கட்டிக்கிட்ட வேடம். அவரை மீறி உனக்கென்ன கௌரவம்? உன்னைப் பத்தி நினைச்சுப் பாத்தியா? உன்னோட உசுரு அவரு போட்ட பிச்சை.”

“அடேய்!”

“மூடுன்னேன். இதுக்கு மேலயும் பேசினா, நான் ஒரு அவுசாரிக்குப் பொறந்தவனாவேன்.”

இடி மாதிரி இறங்கின சொற்கள்.

அன்று மூடியதுதான். முட்டவந்த மாட்டைக் கண்டுகூட ‘ஐயோ’ என்று வாய் திறக்கவில்லை. அதிர்ச்சியில் நாக்கு இழுத்துக்கொண்டுவிட்டதாகப் பேச்சு.

●

சங்கரன்: பெத்த புள்ளையே அம்மையை அவமதிச்சாச்சுல்ல. என்ன பெரிய அம்மை. புள்ளையோட பீ, மூத்திரத்துல உழலப் பொறந்த புழுக்கச் சென்மந்தானே. பொம்பளைச் சென்மம்னா அவ்வளவு எளக்காரம். ஆம்பளை இல்லியா? ‘சாண் பிள்ளைன்னாலும் ஆண்பிள்ளைடா’ன்னு சொல்லிச் சொல்லி நீவி வளர்த்து கொம்பு சீவிவுட்டதே அந்தப் புழுக்கச் சென்மந்தானே? அதுக்காகவாவது அதைக் குத்திக் குடலை உருவ வேணாம்?

சதாசிவம்: சரிதான் சங்கரா. ஆணுக்குப் பெண் அடக்கந்தான்னு காலங்காலமா படிஞ்சு வந்திருக்கிற பழக்கத்துக்கு நாம எல்லாரும் அடிமைதான். மரபு ரீதியா பழகிவந்த ஒரு பிழையை அறிவு ரீதியா எவ்வளவுதான் களைய முற்பட்டாலும், பாதிக்கப் பட்டவுங்களே நிமிந்து எழுந்து, ‘எவன்டா மயிரான்? எதுலடா ஒசத்தி நீ? என் கடை மயிருக்குச் சமந்தான்டா எல்லாம்’னு எதுத்து நிக்கிற அறிவும் துணிவும் உண்டாகுற வரைக்குப், அந்தப் பிழையில ஒரு பொட்டாவது நம்மகிட்ட ஒட்டிகிட்டுதான் இருக்கும். இப்ப அதில்ல பேச்சு. என்னோட சொல்லுக்கு இன்னொரு நியாயம் இருக்குன்னு நீ புரிஞ்சுக்கணும்.

படிப்பகம்

www.padippakam.com



சங்கரன்: என்ன நியாயம்?

சதாசிவம்; அம்மை ஒரு சேரிப் பெண் இல்ல. சேரிப் பெண்கள் சாதிப் பெருமை பேசுறதில்ல. ஆனா குடிப்பெருமை பேசு வாங்க. உதாரணமா மையக்கோயில்வீட்டைச் சேர்ந்த முத் தரசன் குடும்பம், உன் குடும்பம்.

சங்கரன்: சிறக்க வாழ்ந்த எந்தக் குடும்பத்துக்கும் இந்தக் குடிப் பெருமை கூட வர்றதுதான். இது எல்லா சாதிக்கும் பொருந் தும். சாதிப் பெருமைங்கிறது ஆண்டான் – அடிமை விவகா ரம். குடிப்பெருமைங்கிறது மதிப்பு, மரியாதை சம்பந்தப்பட் டது. ஆனா, எது ஒன்னும் கேள்வியில்லாம சடங்காகிப் போனா, அது கேடாத்தான் முடியும். குடிப்பெருமையே நாலாவட்டத்துல சடங்காச்சாரமா படிமானப்பட்டுட்டா அது இன்னொரு சாதி பேதமாத்தான் மறு உற்பத்தியாகும்.

சாதசிவம்: ஒவ்வொரு புள்ளியிலயும் பரந்து விரியிற அளவுக்கு நீ யோசிக்கிற, சங்கரா. உன் சிந்தனையோட சேமிப்பே பட் டறிவா உனக்குப் பயன்படுது. இங்க நான் சொல்ல வந்தது, பெருமை பேணுற எல்லார்கிட்டயும் பளிச்சின்னு தெரியிறது அவுங்களோட சொல்நேர்த்தி. 'ஊத்தைவாயர்கள்'னு பேரெ டுக்க ஒருப்படாத சொல்நேர்த்தி, அது சார்ந்த நாகரிகம்.

சங்கரன்: இருக்கலாம். அதுக்கென்ன இப்ப?

சதாசிவம்: குடிப்பெருமை பேசக்கூட வக்கத்துப் போன ஒரு சாதாரண பொம்பளகிட்ட அந்தச் சொல்லை ஒருத்தன் சொல் லியிருந்தா என்ன நடந்திருக்கும்? 'ஆமாண்டா. நான் அவு சாரிதான். ஊரு மேயிறவதான். கண்டகண்டவனுக்கும் முந்தி விரிச்சவதான். ஒன்னை நான் ஒருத்தனுக்குப் பெக்குல தான்டா. இப்ப அதுக்கு என்னாங்கிற? நாண்டுக்கப்போறியா? மவராசனாப் போ'ன்னு அதே வேகத்தில சொன்னவனை திருப்பித் தாக்கியிருப்பா. சொல்நேர்த்தியும் அது சார்ந்த நாகரிகமும் அவளுக்கு சிக்கு புடிச்ச சமாச்சாரம். அவுசா ரின்னு சொன்னவனுக்குத் தன்னோட ஒழுக்கத்தை உரசிக் காட்டுறது அநாவசியம்னு தீர்மானிக்கிற சூடும் சொரணையும் உள்ளவ அவ. தன்னோட ஒழுக்கம், நாணயம், நேர்மை, தூய்மை எல்லாத்தையும் சொல்லலங்காரத்தில கவசமிட்டுப் போலித்தனமா சோடிச்சிப் பார்க்க நினைக்காதவ. மனுச அடையாளத்துக்கான குறைந்தபட்ச ஒளிவு மறைவுகளோடும் தேவைகளோடும் பாசாங்கில்லாம வாழப் பழகினவ. குளிச்

படிப்பகம்

www.padippakam.com



சுத் துடைக்க வேண்டிய அழுக்கைப் புனுகு பூசி மணக்க வைக்கத் தெரியாத சொந்தவாசம் கொண்டவ. 'நெருப்புன்னதும் வாய் வெந்துடாது'ங்கிற எதார்த்தத்துல தன்னை இருக்கிக்கிட்டவ. நம்புனவுங்களுக்கு உயிரக் குடுக்கிறதுதான் நாகரிகம்னு இன்னமும் நம்பிக்கிட்டிருக்கிறவ. சொல்நேர்த்திங்கிற பாசாங்குல தன்னை ஒட்டுமொத்தமா குலைச்சுப் பார்த்துக்காத ரத்தமும் சதையுமான மனுசி அவ. ஆனா அம்மை அந்த வகை மனுசியும் இல்ல; தன்னை என்னமா புதுப்பிச்சுக்கணும்கிற அறிவார்ந்த விழிப்பும் இல்ல. அம்மை சார்ந்த கும்பலுக்கு குடிப் பெருமைங்கிறதெல்லாம் வெறுமன சாதிப் பெருமையோட மறுவார்ப்புதான். சொல்நேர்த்தின்னா அது சொற்களை மந்திரங்களா கற்பிதம் பண்ணி உருவேத்திக்கிறதுதான்; வாழ்க்கையை நெறிப்படுத்துறதுன்னா சடங்குகளின் புனிதம் காக்கிறதுதான்னு அர்த்தப்படுத்திக்கிறவுங்க. புருசனைவிட அவன் கட்டிய தாலியைப் புனிதமாக்குறவுங்க. ஒரு வகையில மனம் ஒப்பி அவுசாரிப் போனாலும் சம்சாரியா பீத்திக்கிறதுக்கு வழி தேடுற கும்பல்.

சங்கரன்: அப்படின்னா என்ன அர்த்தம்?

சதாசிவம்: வெளிப்படையான அர்த்தம்தான். அடிப்படையில அவுசாரிங்கிறது ஒரு சம்சாரியை ஈடுகட்டுகிற சொல்தான். அந்த வகையில எனக்குத் தெரிஞ்சு இந்த ஊர்ல பதிமூனு ஈட்டுக்காரிகள் தேர்றாங்க. இதில ஒன்னே ஒன்னுதான் சேரியில வாசம். மத்ததெல்லாம் மேட்டுக்குடிப் பசுமாடுகள்தான்.

சங்கரன்: சேரியில யாரு?

சதாசிவம்: உனக்குத் தெரியும் சங்கரா. இதுமட்டும் நீ சொல்லித்தான் எனக்கும் தெரியும். நீ அதை மனசுக்குகந்த சித்திரம்போலத் தீட்டுனதக் கேட்டு, அது ஒரு அனுபவம் போல எனக்குள் பதிஞ்சு போச்சு.

சங்கரன்: பிடிபடல. எங்க நான் இருக்கன்னு தெரியில.

சதாசிவம்; ரொம்பவும் தணிவானவ. அவளோட இறைஞ்சும் விழிகளைப் பார்த்து, மனம் கரைஞ்சு, சேரியே ஒருமனப்பட்டு, 'நீ உத்தமிடி. உனக்கு ஒரு குறைவும் வராது. கருப்பு துணையிருப்பார்'னு மௌனமா வாழ்த்துற மாதிரிதான் இருக்குது. ஒரு துக்கிரி நாக்குகூட அவளைப் பாத்து 'தூ'ன்னு சொல்லல. அவ நடத்தையைப் பத்தி பேச்சு வந்தா, 'எழுதுனவன்

படிப்பகம்

www.padippakam.com



அப்புடி எழுதிப்புட்டான். அவ என்ன பண்ணுவா. அடப் போயேன். அவ பாந்தமும் பதிவிசும் யாருக்கு வரும்? ஊர்ல முள்ளம்பன்னியாட்டம் பத்தினிங்களுக்கா பஞ்சம்? சிலுப்பிக் கிட்டு ஆடற சம்சாரியைவிட ஊர்மெச்சிக் கொண்டாடுற அவு சாரியே உத்தமி போ'ன்னு ஒருமிக்கப் பேச்செடுத்தவ.

சங்கரன்: சரிசரி. தலையாரிக்கு பொண்டாட்டியா வாய்ச்சு தவு தாயப் படுறா. பாவம். மாமன், கொழுந்தன்னு சொல்லிக் கிட்டு அவளுக்காக ஏக்கப் பெருமூச்சு விடுறவனும் நாலு பேரு இருப்பான். ஒருவேள 'மசியமாட்டா'ன்னு நம்புறதுலதான் சொகமோ என்னமோ. அதுகூட அவளுக்குக் கெடைக்கிற கௌரவம்தான். அது சரி, கோவில் பூசாரிக்கு இந்தக் கணக் கெடுப்பெல்லாம் எப்படி?

சதாசிவம்: பூசாரிங்கிறவன் அடிப்படையில ஒரு தரகன்தான், இல்லியா? நல்ல தரகனுக்கு அழகு விரல் நுனியில விவரங் களை சேகரிச்சு வச்சுக்கறதுதான். பார்வையும் கணிப்பும் கூர்மையாயிருந்தா, இப்படிப்பட்ட ஈட்டுக்கார சம்சாரிகளைக் கணக்கெடுக்க கோயில் நடைதான் சரியான இடமாயிருக்கும். ஏன்னா கோயிலுக்கு வர யாருக்கு நேரமில்லன்னாலும் இவுங்க மாத்திரம் தவறாம வருவாங்க. காரணம் இறையச்சமா, இல்ல தொழில் தூண்டுதலான்னு தெரியில. பூசாரியாயிருக்கிறவன் கொஞ்சம் வாய் பார்க்கிறவனா இருந்துட்டா போதும், இந்தப் பக்தர்கள் அவனை நல்ல மாமாவாவே தேத்திடுவாங்க. ஆளு கொஞ்சம் வாளிப்பா இருந்துட்டான்னா, அவனே கதாநாயக னாக வேடம் தரிக்கவும் யோகமிருக்கு. . என்ன சிரிக்கிற? சிரிக்கிறாப்ல நான் ஒன்னும் சொல்லலியே?

சங்கரன்: போன வாரம் கண்ட கனவு நெனவுக்கு வந்துச்சு.

சதாசிவம்: அப்படியென்ன சிரிப்பானியா கனவு கண்டே?

சங்கரன்: சிரிப்பானியா இல்ல. கொஞ்சம் திடுக்குன்னுதான் இருந் தது. பண்டாரம் சம்பந்தப்பட்ட கனவு.

சதாசிவம்: கனவுலகூட நானா? சொல்லேன் கேட்போம்.

சங்கரன: ஒரு சின்னப் புள்ள. பண்டாரத்தோட காலக் கட்டிக் கிட்டு, 'தூக்கிக்கப்பா, தூக்கிக்கப்பா'ன்னு சிணுங்குறான். ஒரு பொம்மனாட்டி. கிளுகிளுப்பை குலுங்குற உடம்பை மாராப்பு சீலையால நல்லா இழுத்து மூடிக்கிட்டு, அடிவானத்து மின்ன லைக் கண்ணுல புடிச்சு வச்சாப்ல சிமிட்டிக்கிட்டு, 'இது உன்

படிப்பகம்

www.padippakam.com



அப்பன் இல்லடா. கோயில் காளை. என்னைத் தொட்டுத் திருமாங்கல்யம் பூட்டுன உன் அப்பன் வூட்டுல இருக்கார். வா காட்டுறன்'னு சொன்னவ, தானும் நகராம, புள்ளையையும் நகர்த்தாம நின்ன இடத்துலயே நின்னு நொடிக்கிறா. புள்ள திக்கத்தவனாட்டம் விக்கிச்சு நிக்கிறான். நான் முழுச்சிக் கிட்டேன்.

சதாசிவம்: முழுச்சிக்கிட்டியா? நல்லதாப்போச்சு. இல்லன்னா கனவுன்னு சொல்ல ஆதாரம் தேடும்படியாயிடும். ஆனா ஈட்டுக்காரிகளைப் பத்தி நான் இப்பத்தான் பேசுறேன். நீ போன வாரமே கனவு கண்டிருக்கே. எப்படி?

சங்கரன்: எப்ப பேசுனா என்ன? ஈட்டுக்காரிங்கிற பேருதானே புதுசு? மத்தபடி கோயிலைக் கட்டி, அதுல அர்ச்சகரைக் குடி வச்ச நாள்ல இருந்து அவுங்க இருந்துக்கிட்டுதான இருக்காங்க?

சதாசிவம்: இருக்கலாம். கனவுலகூட நான் கண்காணிக்கப் படணுமா? சரி, இந்தக் கனவைப் பத்தி என்ன நினைக்கிற?

சங்கரன்: கனவுன்னுதான்.

சதாசிவம்: கனவும் வாழ்க்கையில ஒரு அம்சம்தானே?

சங்கரன்: ஒரு அம்சமா இருக்கிறது தப்பில்ல. வாழ்க்கையாவே இருந்துடக் கூடாதுங்கிறதுதான்.

சதாசிவம்: சங்கரா, நீ என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடமாட்டேங்கிற. ஏன்னு தெரியில. என்னைக் குறிக்கிறதுக்கு உங்கிட்ட ஒரு சுட்டுச்சொல்கூட இல்ல. உன்வரைக்கும் நான் பண்டாரம்னு படர்க்கையாகவே நின்னுட்டேன். எப்பவும் என்னை உங்கிட்ட இருந்து ஒரு அடி தள்ளியே நிறுத்திக்கிற. ஒருத்தரையொருத்தர் தொட்டுப் பழகுற உயிர்த்துடிப்பான நட்புக்கு நான் கொடுத்து வைக்கில. ஒவ்வொன்னுலையும் எனக்குத் தனிமைதான்; ஏமாத்தம்தான். ஆனாலும் எனக்கு விவரம் தெரிஞ்ச நாள் முதலா இன்னமும் உன் சுண்டு விரலப் புடிச்சிக்கிட்டுதான் நான் நடக்கும்படியாயிருக்கு. ஏன் இப்படி? எனக்கு சுதந்திரமே கிடையாதா!

சங்கரன்: இதே கேள்விதான் எல்லார்க்கிட்டயும், முடிவில்லாத சாபம் மாதிரி. தீட்டு விளையிற பூமி இது. இங்க சுதந்திரமா செய்யக் கூடியது அடிமையா இருக்கிறதுதான். என்ன செய்ய. எனக்குக் கெடச்சது என் சுண்டுவிரலு என்னுது இல்லன்னு விட்டுட்ட சந்தோஷந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



சதாசிவம்: எனக்கும் சந்தோஷந்தான். சங்கரா. தாமரை இலை தண்ணிக்கு ஒட்டாம உருண்டு தவிக்கிறதுதான் சந்தோஷம் இல்லியா? குளம் முழுக்க நீர். இலை மேல விழுந்த துளிநீர் மாத்திரம் தனி. வெப்பம் உறிஞ்ச உறிஞ்ச, சிறுத்து சிறுத்து உருண்டு விளையாடுற சந்தோஷம். இது எனக்கு மட்டுமில்ல. ஐயாவுக்கு, தாத்தாவுக்கு, பாட்டிக்கு, அம்மைக்குப் பாலூட்டிய அன்னைக்கு- திக்கத்து கலைஞ்சுபோன ஒரு பரம்பரையோட சந்தோஷம். நீ கனவுல கண்ட பயகூட பாரு, எம் மாதிரியே திக்கத்து நிக்கிறான் இந்த சந்தோஷத்தோட வலியைத்தான் அம்மைக்கு நான் ஞாபகப்படுத்தினேன்.

சங்கரன்: நடக்கிற வழியெல்லாம் திகைப்பூண்டா முளைச்சிக் கெடக்குது. பதிக்கிற சுவடெல்லாம் கொண்டுகூட்டுப் பொருள்களா பெருகிச் சிதறுது. தெளிஞ்சு, தேறி, கரை சேரத்தான் இந்தப்பாடு. மலைப்பாத்தான் இருக்குது கரை சேருவமான்னு. ஏன்னா, இந்த தேசத்தை மனரீதியா எந்த மாத்தத்தையும் ஏத்துக்கத் தயாராயில்லாத புண்ணிய பூமியா பாடம் பண்ணி வச்சிருக்காங்களே.

சதாசிவம்: முதல்ல புண்ணிய பூமின்னு சொல்றவுங்களுக்கு கொஞ்சம்கூடக் கூச்சமே இல்லங்கிறது பெரிய ஆச்சரியம். யாரையும், எதையும் இயல்பா இருக்க விடாத ஒரு தேசம் எப்படி புண்ணிய பூமியா இருக்க முடியும்? எதைச் செய்தாலும், எதைப் பேசினாலும், எதை நினைச்சாலும், 'இது பாவமா, புண்ணியமா'ன்னு பட்டியல் போடுற நாடு. இது ஒவ்வாமையால் சபிக்கப்பட்ட சுதந்திர நாடுன்னோ, பாவங்களால ஆளப்படுற புண்ணிய பூமின்னோ சொன்னா, சொன்னவனுக்குக் கொஞ்சமாவது நேர்மை இருக்கும். ஆனா, அந்த நேர்மை இருந்திருந்தா, எப்படி சாதி மொளச்சிருக்கும்? இந்த மண்ணோட பாவச் சுமையை இரட்டிப்பாக்குறதே இந்தச் சாதி வேற்றுமைதானே.

சங்கரன்: இதுபத்தி நான் கொஞ்சம் சொல்லணும். என் கருத்தை சரிபார்த்துக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

சதாசிவம்: சொல்லு சங்கரா. கேட்டுக்குறேன்.

சங்கரன்: எனக்குத் தோன்றினதை எளிமையா இப்படி தொகுக்கலாம். சாதிங்கிறது அடிப்படையில ஒரு சாதாரண வகைப்பாடு. தரவாரியா கூறுகட்டி வைக்கிற பொருள்கள் மாதிரி- கூறுகளை எத்திவுட்டா எல்லாம் கலைஞ்சு கலந்து போயிடுற

படிப்பகம்

www.padippakam.com



மாதிரி ஒரு மேம்போக்கான வகைப்பாடு. ஏன்னா, காலத் தாலகூட மாத்த முடியாத உடல்ரீதியான உயிரினப் பாகுபாடு மாதிரி உருவானதில்லை அது. ஆனா இன்னிக்கு அது உயிரினப் பாகுபாட்டைவிடவும் உறுதியானதா, பொதுமைப்படுத் தப்பட்ட சமூகப் பிறழ்ச்சியா, மன ரீதியிலான எல்லாவகை ஒவ்வாமைகளோடும், இடம், தொழில், காட்சி, மொழி, பண் பாடு, கண்ணோட்டம், எதிர்கொள்ளல்னு எல்லாப் பாகுபாடுக ளோடும் நிரந்தரப்படுத்தப்பட்டிருக்கு. சாதியை வளர்த்த நோக்கம் தாழ்த்தப்பட்டவுங்களை ஈனப்பிறவிகளா சிறுமைப் படுத்தி எட்ட நிறுத்துறதுதான். அதனால, அவுங்க அசிங் கமானவுங்க, அழுக்கானவுங்க, ஒழுக்கமில்லாதவுங்க, மனித வடிவம் தாங்கிய மலப்பிண்டங்கள்னு அழுத்தமான மனத் தயா ரிப்பை உண்டாக்கியாச்சு. இது அக ஒதுக்கல். இதனோட புற வடிவம்தான் தீண்டாமை. அவுங்க அழுக்கானவுங்க; ஆகவே தீண்டத் தகாதவுங்கன்னு இரண்டையும் முடிச்சுப் போட்டு வச்சிருந்தாங்க. இப்ப, அரசுக்கான அரசியல் போக்கா, தீண்டாமை அனுசரித்தல் குற்றம்னு சட்டத்துல ஒரு வரி சேர்த்து, அந்த முடிச்சை அவுத்துவுட்டாச்சு. சட் டத்தை நடைமுறைப்படுத்துறவனுக்கேத்தபடி தீண்டாமை இப்பவோ, பொறவோ ஒழியும்னு வச்சுக்கலாம். ஆனா அந்த அக ஒதுக்கல்? அது ஒழியிறது அவ்வளவு லேசில்ல. அக ஒதுக்கலுக்கான மனத்தயாரிப்பு ரொம்ப ஆழமானது; அழுத் தமானது– பேய் அச்சம் மாதிரி. பேயப் பார்த்தவர் இல்ல. 'இல்லவே இல்ல'ன்னு வீராவேசமா பேசுறவன்கிட்டயும் இர வும் தனிமையும் சேர்ந்தா, பேய் அச்சம் ஊறத்தான் செய் யிது. மனசு ஒரு கேணப்பய மாதிரி. வேணாங்கிறதத்தான் வெறட்டி வெறட்டிப் புடிக்கும். மயிலே மயிலேன்னா எறகு போடாது. மசுராச்சுன்னு தன் போக்குலயே போகும். வள் ளுவர் ஒரு படம் காட்டுறாரு. எச்சிக் கையைக் கழுவுனா ஈரக்கையில என்ன இருக்கப்போவுது? சரியா கழுவுலன்னா இண்டு இடுக்குல சோத்துத் துணுக்கு ஒட்டிக்கிட்டிருக்கும். கையை உதறி, அந்தத் துணுக்கு யாருக்காவது கெடச்சிருச் சுன்னா எவ்வளவு பெரிய நட்டம்! அதனால ஈரக்கையைக் கூட ஒதறமாட்டானாம் கயவன். அவனை ஒரு முட்டுச் சந் துல நிறுத்தி, 'ஒன் மொகரையைப் பேக்குறன் பார்'னு முட் டிய ஒசத்து. மடியை அவுத்துக் கொட்டிப்புட்டு மன்னாப்பு கேப்பான். மொகரக் கட்டையைப் பேக்கவே வேணாம். 'பேத்துருவேன்'னு ஒங்கு, போதும். இது வன்முறைதான். ஆகக் குறைந்த வன்முறை. ஆனா அரசுக்கு வன்முறை புடிக் காது. ஏன்னா, வன்முறைன்னா என்னன்னே அதுக்குத்

www.padippakam.com



தெரியாது, பாவம். சரி, பாதிப்புக்குள்ளானவன் இந்த உத்தியைக் கையிலெடுத்தா? அரசு அவன் மொகரக் கட்டையைப் பேத்து, தான் யாருன்னு காட்டும். ஆக, தாழ்த்தப்பட்டவனோட விடுதலைக்கு 'விதிப்படி' நடக்கிற அரசுதான் முதல் முட்டுக்கட்டை; முதல் எதிரி. அப்புறம்தான் பாதிப்பை உண்டாக்குகிறவன். அக ஒதுக்கலுக்கான கற்பிதங்களை வேரறுக்கிறவரைக்கும் அரசே சாதி இழிவுக்கு ஏதாவது ஒருவகையில துணையிருக்கும்னு நம்பலாம். சாதி இழிவுக்குன்னு சொல்றதுக்குப் பதிலா சாதி மேம்பாட்டுக்குன்னு அது சொல்லிக்கக் கூடும்.

சதாசிவம்: அக ஒதுக்கல்னு சொன்னியே- அந்த மனப்பாங்கை நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பார்த்து மலச்சிருக்கேன், சங்கரா. நீ கனவுலே கண்டியே, அவ, அல்லது அவ மாதிரி ஒரு ஈட்டுக்காரி ஒருநாள், “இந்தப் பறப் பன்னாடை இருக்காள்களே - பீடைங்க, அவள்களுக்கு முறைதலைன்னு ஒரு எழவும் கிடையாது. கல்யாணம், குடும்பங்கிறதெல்லாம் ஒரு ஒப்புக்குத்தான். அண்ணன் தம்பி, அப்பன் மகன்னு வரம்பத்த ஜென்மங்கள்”னு சொன்னா. “சன்னதியில நின்னு இப்படி அபாண்டமா பேசவேணாம். 'எந்த வரம்புல இந்தப் புள்ளயப் பெத்தோம்'னு யோசிச்சுப் பேசணும்”னேன். எனக்கொரு மீட்சி. இது மாதிரி அபாண்டங்கள எப்படி நம்புறோம்கிற சுரணையே இல்லாத கூட்டத்துல அம்மையும் அடக்கம். அவரை அவரோட மொழியிலேயே மீட்டெடுக்கத்தான் அப்படியொரு பேச்சு. அதனால அவமதிப்பு அம்மைக்கில்ல; எனக்குத்தான்.

●

அதிர்ச்சி மிகுந்த அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அம்மை ஆறு ஆண்டுகள் வாழ்ந்திருந்தார்- பார்வையே பேச்சாக. ஊரார் கண்களுக்கு 'ஒன்றுமில்லை' என்பதாகத்தான் தோன்றினார். ஆனால் உள்ளூர அவர் உடைந்துவிட்டார். அவருடைய மனச்சிதைவு முற்றிலுமாகக் குணமடைந்துவிட்டது. அதுவரை தான் புதையுண்டு கிடந்த வார்த்தை உலகிலிருந்து மீண்டு, அர்த்த உலகில் புகுந்து கொண்டாற்போல் அவர் கண்களில் தன் கணவருக்காக எப்போதும் ஓர் இறைஞ்சுதல் சுரந்து கொண்டிருந்தது. இதில் அதிகமும் திக்கற்றுப் போனவர் பண்டாரம்தான். 'என் கூடுள்ளவரை இவளே என் உயிருக்குப் பற்றுக்கோடு' என்னும் வேண்டுதலோடு அம்மை

படிப்பகம்

www.padippakam.com



யைத் தன் ஆருயிர்த் தோழியாகச் சீராட்டி மீட்டெடுக்க முயன்றார். அது அவருக்கு தானற்றுப் போன சேவைக் காலமாகக் கழிந்தது. சதாசிவத்துக்கோ அது மன்னிப்பு கோரும் காலம். ஒரு கட்டத்தில் அவர்தான் பெற்றவர்களால் கண்டுகொள்ளப் படாதவராகத் திக்கு திசை தெரியாது திகைத்து நின்றார். "நாம ஒன்னுன்னுதான ஐயா சொன்னாங்க? அப்புறம் எதுக்கு இந்தத் தவுதாயம்?'' என்று சங்கரன்தான் தேற்ற வேண்டியதாயிற்று.

அம்மைக்கு ஒரு அவலமான வரலாறு உண்டு. சதாசிவம் அதைத் தக்கநேரத்தில் ஞாபகப்படுத்திவிட்டார். அம்மை, "பொறந்ததும் பெத்தவள முழுங்கிப்புட்ட மவராசி,'' என்னும் பெரும் பெயரோடு பூமுகம் பார்த்தவர். மனைவியை இழந்த துயரத்தில் தந்தை. என்ன செய்வதென்று தெரியாத இரண்டுங்கெட்டான் வயதில் ஒரு அண்ணன். வீட்டைப் பராமரிக்க வேறு பெண் துணையற்ற ஒற்றைப் பண்டாரக் குடும்பம். சாவுக்கு வந்தவர்கள் கலைந்ததும் குழந்தை திக்கற்றுக் கிடந்தது. உறவென்றும் நட்பென்றும் சொல்லிக்கொண்ட ஒருவரும் உதவிக்கு வரவில்லை. பெற்ற தந்தைக்கு அந்தப் 'பீடை' அழுது சாவதே உசிதமாயிருந்தது. ஆனால் அண்ணன்காரனுக்கு அதன் இருப்பு ஓர் இன்றியாமையை உணர்த்தியது. அது பசிக் குரலெடுத்துக் கத்தும் போதெல்லாம் கூடவே, "ஏன்டா பெரியவனே, சின்னவளுக்கு என்ன வேணும்னு கேளு,'' என்றொரு கட்டளையும் தாயின் குரலில் உள் அதிர்வாய் அவனை முடுக்குவதாகப்படும். 'சின்னவள்' 'பெரியவன்' எனும் சொற்களைத் தன் தாய் எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தியதாக அவனுக்கு நினைவில்லை என்றாலும், இப்போது அவை தனக்கு மிகவும் பழக்கப்பட்டவையாக ஒலித்தன. அச்சொற்கள் கட்டமைக்கும் உறவுதான் அவன் பற்றிப் படர்வதற்கான கொழுகொம்பாய்த் தெரிந்தது. ஆகவே தங்கையைப் பேணுவது தன்னைப் பேணிக்கொள்வதாக அவனுக்கு இனித்தது. பிறந்து ஒரு வாரத்துக்குள்ளாகவே குழந்தையைப் பிழைக்க வைப்பது பெரும்பாடாகியது. வெறும் இனிப்பு நீரையே சப்புக்கொட்டிக்கொண்டு உயிர் தரித்தது. மாட்டுப்பால் ஒத்துக்கொள்ளவில்லை. கழிசல் கண்டு பிறவிச் சவலையாகிவிடும்போல் மெலிந்து போனது.

அப்போது நாவறட்சிக்குக் கிடைத்த இளநீர் போல ஒரு பெண்மணி உதவிக்கு வந்தார். இன்றைய சாம்பசிவப் பண்டாரத்தின் இளவயது அத்தை அவர். கீழைத் தெருவில் வாழ்க்கைப்பட்டிருந்த ஏழைப் பெண்மணி. பெற்ற குழந்தையைப் பறிகொடுத்துவிட்ட ஆற்றாமையும் மாரில் பால் கட்டிக்கொண்ட அவஸ்தையுமாகப் பரிதவித்துக் கொண்டிருந்தவர். தங்கையைக் காக்கும் பொருட்டு

படிப்பகம்

www.padippakam.com



அலமோதித் தவித்துக் கொண்டிருந்த அண்ணன்காரன்தான் பிறந்தகத்திலிருந்து திரும்பியிருந்த அவரை அணுகினான். இச்சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்தாற்போல தன் முன்னால் உரித்துப் போட்ட குழந்தையை வாரியெடுத்து மடி நிறையப் போட்டு, முட்டமுட்டப் பால் கொடுத்தார். அவருக்கு பாரம் இறங்கிய நிம்மதி. குழந்தைக்கு பசியாறிய நிம்மதி. தொடக்கத்தில் சில காலம் குழந்தை அவர் அணைப்பிலேயே கிடக்கும்படியாயிற்று. "ஊட்டி வளக்க சாதிசனம் இருக்கம்ல" என்று சொல்லி எந்த நாதியும் முன்வரவில்லையாதலால், "அடுக்குமாடி இந்த அக்குறும்பு? மவராசி பெத்த புள்ள மாட்டுத்தொழுவத்துல பசியாறவா?" என்று எந்த வக்கிர விமர்சனமும் எழவில்லை. அதற்கும் மேலாக, வெடி வைத்துத்தான் தகர்க்கும்படியாகக் கெட்டி தட்டிப் போயுள்ள சமூகக் கட்டுப்பாட்டுப் பாறையூடே விரிசலாகவோ, விரிசலின் ஒட்டு வாயாகவோ ஓடும் பொன்னிழை போல 'முலைப்பாலுக்குக் குலப் பால் இல்லை' என்பதான அறம் ஒன்று மௌனமாய் விரவிக் கிடக்கும் போல. குழந்தை அழும்போதெல்லாம் அண்ணன்காரன் கொண்டுவந்து கிடத்திவிடுவான். அதன் அடுத்த பரிணாமமாக, உரிய நேரத்தில் குழந்தை வரவில்லையென்றால், அவரே தேடி வந்து ஊட்டும்படியாயிற்று. அதன்பிறகு அவர் கரு தரிக்கவில்லை. வெகுகாலம் பாலும் வற்றவில்லை. குழந்தையும் பால்குடி மறக்கவில்லை. பெற்றவளானால் முலைக்காம்பில் வேப்பிலை தடவி மறக்கடிப்பாள். ஆனால் இந்த செவிலியோ ஊருலகத்துக்குப் போக்கு காட்டிவிட்டு ஓடிவரும் குழந்தைக்கு உவந்துவந்து ஊட்டி மருகினார். நாள் செல்லச் செல்ல குழந்தையும் அவரும் பிரிந்திருக்கும் போதுகள் அவர்களைப் பிணைத்திருக்கும் மனத்தவிப்புகளாக வளரலாயின.

தொடக்கத்தில் பாராமுகமாய் இருந்த தந்தை பின்னர் தன்னிடம் தாவிவரும் குழந்தையோடு ஒட்டிக்கொண்டுவிட்டார். வளர்ச்சிப் பருவத்தில் திருமறைகளையும் வழிபாட்டு நியமங்களையும் மகளை முற்படுத்தியே போதித்து மகிழ்ந்தார். எல்லாவற்றையும் முறையாகக் கற்றுக்கொண்ட குழந்தை, செவிலியுடனான தன் உறவு கமுக்கமாகத்தான் இருக்க முடியும் என்பதையும் சேர்த்துக் கற்றுக் கொண்டுவிட்டது. ஒருதடவை, "என் செல்ல மவளே, உன்ன விட்டா எனக்கு வேற புள்ளகுட்டி இல்ல தாயி. என்னை மறந்துடுவியா?" என்று அவர் ஏங்கி நின்றது அழியாச்சித்திரமாகப் பதிந்துவிட்டது.

தமபனுக்குத் திருமணம் முடிந்த கையோடு தந்தையின் காலம் முடிந்துவிட்டது. அதன்பிறகு பூனாச்சியம்மையின் பாடு மீண்டும்

படிப்பகம்

www.padippakam.com



பரிதவிப்புக்குள்ளானது. அண்ணியாக வந்தவளுக்கு அம்மையைக் கண்டால் ஆகவில்லை. அவள் புரிந்த கொடுமைகளுக்குக் கணக்கு வழக்கில்லை. அவளை மீறி அண்ணனுக்கும் ஆளுமை இல்லை. ஒரு இக்கட்டான தருணத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் தன் செவிலியைத் தேடிச் சென்று அழுதார்.

''என் தங்க மவளே. உனக்கா இந்த கதி! கலங்காத தாயி. உசுருக்கு ஒன்னுன்னா ஓடியாந்துரு. உன் சாதி சனமெல்லாம் கைவுட்டாலும் நான் ஒன்னை வுட்டுற மாட்டன். ஒக்கார வச்சு ஆராத்தி எடுப்பன் கண்ணு. சின்னப் புள்ளையா நீ என் மாரைப் புடுச்சிக்கிட்டு மொச்சுமொச்சுன்னு பால் குடிச்சிட்டு, வயிறு மொதந் ததும் கடவாயில பாலு வழிய என் முகம் பாத்து சிரிப்பியே- இன்னம் என் கண்ணுலயே நிக்குதுடா ராசாத்தி. என்ன ஆனாலும் சரி. தெகிரியத்த மட்டும் வுட்டுறாத.''

கடைசியில் ஓடத்தான் நேர்ந்தது.

ஒருநாள் அண்ணிக்காரி ஊமத்தங்காயைப் பறித்து வந்து அரைத்து வைத்துக்கொண்டு, திட்டமிட்டு வம்புக்கிழுத்து, அம்மையின் வாயில் வலுக்கட்டாயமாக ஊற்றி விழுங்க வைத்துவிட்டாள். அம்மை தன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிச்சென்று தன் செவிலித்தாயின் முற்றத்தில் நுரைதள்ளி சுருண்டுவிழுந்தார். அப்போது அங்கே தன் தங்கை வீட்டுக்கு விருந்தினராய் வந்திருந்த சாம்பசிவத்தின் தந்தை பச்சிலை கொடுத்துக் காப்பாற்றிவிட்டார். அம்மை தன்னை அழைத்துப் போக வந்த அண்ணனுடன் போக மறுத்துவிட்டார். குற்றம் சுமத்திக் கூச்சலிட்ட அண்ணன்காரனிடம், ''ஒங்க ஆசாரம் கெடாம இந்தப் புள்ளையத் தனியாத்தான் வச்சிருக்கோம். தாராளமா கூட்டிக்கிட்டுப் போகலாம். உசுரக் காப்பாத்திவுட்ட பாவத்துக்கு எங்க மேலயே குத்தம் சொன்னா, கொலை பண்ணத் துணிஞ்ச ஒங்க சம்சாரத்த டாணாக்காரங்கிட்ட புடுச்சுக் குடுக்கிறதுதான் நியாயம்,'' என்றார் பெரியவர்.

அண்ணன்காரன் திரும்பிவிட்டான். ஆனால் திரும்புமுன் தன் தங்கையைத் தனியே அழைத்து, ''உன்னைக் காப்பாத்த ஒரு வழியும் தெரியில. ஒனக்குத்தான் அந்த சாம்பசிவத்தைத் தெரியுமே. நமக்குச் சமமா நறுவிசு பாக்கிறவன்னு சொன்னியே. பேசாம அவனக் கட்டிக்கிட்டு தூரதேசம் ஓடிப்போய் பொழச்சுக்க. நீ பொழச்சுக் கெடந்தா அதுவே எனக்குப் போதும். நான் துப்பு கெட்டுப் போயிட்டேன். ஊரு மெச்சிக்கத்தான் இந்தக் கூப்பாடெல்லாம். நீயாவது நல்லா இரு,'' என்று கண்சொரியச் சொல்லிச் சென்றான்.

படிப்பகம்

www.padippakam.com



"என்ன தாயே, இப்புடி பண்ணிட்டே? நாங்க உனக்கு என்ன வழி பண்ண முடியும்?" என்று திகைத்து நின்றார் பெரியவர்.

"எதுனாச்சும் பண்ணுண்ணா. எம் பாலு குடிச்சு வளந்த புள்ளண்ணா. நீதான் ராமலிங்க சாமியோட சீடப்புள்ளையாச்சே, சைவம்தானே. ஒங்கூடக் கூட்டிக்கிட்டுப் போ. ஓம் புள்ளயோட புள்ளயா பொத்திக் காப்பாத்துண்ணா," என்றார் அந்தத் தாய்.

"உங்க அண்ணன் மகனுக்கே என்னக் கட்டிவச்சிடு ஆத்தா," என்று பட்டென்று தீர்வு சொன்னார் பூனாச்சியம்மை.

அதிர்ந்தே போனார் பெரியவர். பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காத பிள்ளைப் பேச்சாக இருந்தது அவருக்கு. ஆயினும் வேறு வழி தெரியாததால், தன்னோடு அழைத்து வந்துவிட்டார். இது சாதிப் பிரச்சினையாக வெடிக்கும் என்பதால், தனக்கு நன்கு பழக்கமுள்ளவரும், தன்னை ஒரு பொருட்டாக மதிப்பவருமான வருவாய்த்துறை அதிகாரி ஆலன் துரையிடம் அழைத்துச் சென்று விவரத்தைக் கூறி, அவருடைய ஆலோசனையின்படி இருவருக்கும் திருமணம் செய்வித்து, அன்றே அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

"ஐயா, சாம்பசிவம். இந்தப் புள்ளயோட சொல்படிதான் உங்களை சேர்த்துவச்சேன். ஒன்னோட விருப்பத்தை நானறியேன். ஆனா நம்பள நம்பிவந்த புள்ளய உசுரக் குடுத்தாவது காத்துக் கரைசேர்க்கிறது நம்மளோட கடமைன்னு நெனைச்சேன். அதனாலதான் ஒன் கையில புடுச்சு குடுத்துட்டேன். காப்பாத்துப்பா. எங்களைப் பத்திக் கவலை வேணாம். துரை இருக்காரு. தெம்பிருக்குது. சமாளிச்சுக்குறோம்," என்ற பெரியவர் மேற்கொண்டு பேசமுடியாமல் தடுமாறினார். பிறகு சொன்னார்: "நம்ம வூட்டுக் கருப்பி நாலு குட்டி போட்டுச்சு. நாலும் நாலு திக்குல பிரிஞ்சு போயிடுச்சு. இப்ப நமக்கும் அதுதான்யா கதி. ஆகட்டும். மனசு இருக்குது; மனுசனா இருப்போம். நெனைப்பு இருக்குது; சிரிப்பும் அழுகையுமா மனசை நெறைச்சுக்குவோம். புடுச்ச கை பிரியாம பெருவாழ்வு வாழணும். போய் வாங்க."

அப்படி வந்தவர்கள்தாம் சாம்பசிவப் பண்டாரமும் பூனாச்சியம்மையும். அம்மைக்காக ஐயன் தன்னை அழித்தெழுதிக்கொண்டவர். அதையே சதாசிவம் தக்க சமயத்தில் நினைவு படுத்தினார்.

அம்மைக்கு நாக்கு ஒன்றும் இழுத்துக்கொண்டு விடவில்லை. அவர் தனக்குத்தானே விதித்துக்கொண்ட தண்டனை அது. தன் கணவனுக்குப் புரிந்த கொடுமைக்காக நேர்ந்துகொண்ட நோன்பு.

படிப்பகம்

www.padippakam.com



ஜைனமுனிகள் அன்னம்தண்ணீரின்றி உயிர் துறக்க நோன்பிருப்பார்கள். அம்மை எதையும் வெளிப்படையாகச் செய்யவில்லை என்றாலும், அவர் வேண்டலும் அதுவாகத்தான் இருந்தது. இதை அறியும் திறன் அவருடைய துணைவருக்கே இருந்திருக்கக் கூடும்.

அம்மை மெல்ல மெல்ல ஒடுங்கி, நிற்கவோ அமரவோகூட வலுவற்றுப்போன அந்தக் கடைசி நாட்களில் சங்கரன் சதாசிவத்துக்குத் துணையாயிருந்தார். நிலைப்படிக்கு உள்ளே சதாசிவமும் வெளியே சங்கரனும் இரவு முழுவதும் விடிவிளக்கை எரியவிட்டுக் கொண்டு அமர்ந்திருப்பார்கள்.

ஒரு இரவில் திடீரென்று சதாசிவத்தை அருகழைத்து அம்மை பேசினார். ஆறு ஆண்டுகளுக்குப்பின் அவர் பேசிய முதல் பேச்சு. ஆனால் ஆறு ஆண்டுகளும் அவர் அதைமட்டும்தான் பேசப் பழகிக்கொண்டிருந்தாரோ என்று பிரமிப்பாயிருந்தது.

''சதாசிவம். உனக்குக் கோடி நமஸ்காரம். பெத்த புள்ளையே குருவா வந்து என்னை நரகத்திலிருந்து விடுவிச்சியே அதுக்குத்தான். நீ எதுக்கு வருத்தப்படணும்? உம்மேல ஒரு குத்தமும் இல்ல. உத்தமியோட மகனா இருக்கணும்கிற ஆங்காரம் உன்னை அப்படிப் பேச வச்சுது. அது நீ எனக்குக் குடுத்த கௌரவம் தானே. நான் அதை காப்பாத்திக்கிட்டேம்பா,'' என்றார்.

அப்போது நிலைப்படிக்கு வெளியே நின்றிருந்த சங்கரனைப் பார்த்து உள்ளே வரச் சொன்னார். ஊர் அவசமுற்றுக் கிடந்தாலும் தயங்கியபடியே உள்ளே நுழைந்தவரின் கையை வாஞ்சையோடு பற்றிக்கொண்டு, "என் கோணப்புத்தியை மொதல்ல கண்டறிஞ்சவன் நீதானேடா குழந்தே? அதுனாலதானே இந்த அம்மையை தள்ளி வச்சிட்டே. உனக்குத் தெரிஞ்சுதுகூட எனக்கு உறைக்காமப் போயிடுச்சு பாத்தியா. நீ எனக்கு இன்னொரு குரு. ஐயன்தான்டா என் கையை புடுச்சிக்கிட்டார். அதுதான்டா கண்ணா எனக்குக் கௌரவம். இந்த ஜென்மத்துல மட்டுமில்ல, ஏழேழு ஜென்மத்துக்கும் புடிச்சபுடி தளராம என்னைக் காக்கணும்னு வேண்டிக்கிறம்பா,'' என்றார். சங்கரன் பதறிக் கலங்கியவராய் ஐயனைப் பார்த்தார். அவர் பேச்சை நிறுத்திப் பல யுகங்கள் ஆனாற்போல் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

மறுநாள் இரவு, மூன்றாம் சாமக் கோழியின் நீண்ட கூவலில் நிலைப்படிக்கு வெளியே அமர்ந்தபடியே தூங்கிவிட்ட சங்கரனுக்கு விழிப்பு தட்டியது. படிக்கு உள்ளே சதாசிவமும் அமர்ந்தபடி உறங்கிக் கொண்டிருந்தார். வீட்டில் விடிவிளக்கு பொருக்கு

படிப்பகம்

www.padippakam.com



திரண்டுபோய் மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. விளக்கருகே சுவரில் முதுகைச் சாய்த்து– அமர்ந்த நிலையில் ஐயனும், அவர் மடியில் தலைவைத்து– கிடந்த நிலையில் அண்ணாந்தபடி அம்மையும் காட்சியளித்தனர். இருவரது வாய்களும் ஏதோ பேசிக்கொண்டிருப்பதுபோல் திறந்திருந்தன. சங்கரனின் கண்ணும் காதும் சிலீரென்று கூர்மையடைந்தன. ஜிவ்வென்று உச்சந்தலையில் ரத்தம் பாய்ந்தது. அன்றொருநாள் கிளுவைப் புதருக்கடியில் அமர்ந்து ஐயன் கடைசியாகப் பாடிய அந்த அருட்பாவைப் பாடத்தொடங்கினார் கடைசி வரியில் அவர் குரல் உடைந்து கிரீச்சிட்ட சத்தம் கேட்டு சதாசிவமும் விழித்துக்கொண்டார்.

ஐயனும் அம்மையும் எப்போதோ அடங்கிவிட்டிருந்தனர்.

ஊரே அழுதது; அதிசயத்தது. வாழ்க்கைத் துணைவர்கள் ஒன்றாய் அடங்குவதென்பது உலகில் எப்போதோ நடக்கும் அபூர்வ நிகழ்வு. அந்தப் பெருமையை அவர்கள் பெற்றார்கள். அதற்காகவே அவர்கள் வெகுகாலம் நினைவுகூரப்படும் வரலாற்றை எழுதிக் கொண்டார்கள்.

சங்கரனுக்குத் தப்படிக்கத் தெரியாது. கற்றுக்கொள்ளவும் எண்ணியதில்லை. ஆனால் அந்த அபூர்வ இணையின் இறுதி ஊர்வலத்தில் தான் செலுத்தும் அஞ்சலியாக முதல் தடவையாகத் தப்படித்துக்கொண்டு சென்றார். அந்தக் கணங்களில் தன் பார்வை வட்டத்துக்குள்ளேயே சதாசிவத்தை அரவணைத்துத் துணையிருப்பதும் அவர் நோக்கமாயிருந்தது.

## 3

சதாசிவப் பண்டாரம்! சங்கரனைச் சலிப்படையச் செய்யாத சித்திரம்.

ஆள் நல்ல கருப்பு. ஒடிசலாகத் தெரிந்தாலும் உறுதியான உடலமைப்பு. நெடுநெடுவென்று தெரியும் வளர்த்தி. மரியாதைக்குரிய எளிய தோற்றம். பச்சரிசியில் எள்ளும் கருப்பட்டியும் அடரத் தூவியதைப் போன்ற நிறத்தில், எப்போதும் பத்துநாள் சணிக்கும்படியான ஒரே சீராய் நிரவி வளர்ந்த முள்தாடி. பல்வரிசையின் வெண்மையாலோ என்னவோ, சற்றுக் கூடுதலாகக் கருமை காட்டும் மீசைப்பகுதி. இடுப்பில் கணுக்கால் தெரியக் கட்டிய நாலுமுழ வேட்டி. அதன்மேல் இறுக்கிக் கட்டிய சிவப்பு ஈரிழைத்

படிப்பகம்

www.padippakam.com



துண்டு. எப்போது பார்த்தாலும் அப்போதுதான் குளித்தாற் போலொரு ஈரம் கசியும் வடிவம். நெற்றியிலும் மார்பிலும் மட்டு மல்லாது கைகளிரண்டிலும் மணிக்கட்டு, முழங்கை, தோளிறக்கம் ஆகிய இடங்களிலும் திருத்தமாய் இட்டுக்கொள்ளப்பட்ட திருநீற் றுப் பட்டை. காது இடுக்குகளில் உள்ளடங்கி மணக்கும் திருநீற் றுப் பச்சை.

சதாசிவப் பண்டாரத்தின் கோயில் வளாகச் சித்திரம் இது. அளக்கும் கண்களுக்கு மிகுந்த கவனத்தோடு ஒப்பனை செய்யப் பட்டாற் போலத் தெரியும் இயல்பாய் அமைந்த சித்திரம். தன் உள்ளம் சார்ந்த ஊடு பாய்ச்சல்களையெல்லாம் ஒருங்கே ஒளித் துக்கொள்ளும் நல்ல கவசமாகவே பிள்ளையார் கோயில் பூசாரி வேலை அவருக்குப் பொருந்தியிருந்ததாகப் பட்டது.

பொழுதடங்கும்போது கருவறை விளக்கில் மேலும் எண்ணெய் வார்த்து, திரியைத் தூண்டிச் சுடரைப் பெரிதாக்கி வைத்துவிட்டு, சேகண்டியையும் சங்கையும் எடுத்துக்கொண்டு முற்றத்தில் இறங்கி, வடக்கு நோக்கி நின்று வணங்கியவராய், இடது கைப் பெருவிரல் கவட்டையில் சேகண்டியைத் தொங்கவிட்டுக்கொண்டு, அதனோடு சேர்த்துக் கட்டித் தொங்கும் நுனி திரண்ட உருட்டுக் குச்சியை வலக் கையில் பிடித்து 'ணங்... ணங்... ணங்' என்று அடிப்பார். அதன் ஓசை காற்றில் பரவி ரீங்கரிக்கும்போதே இடக்கையின் ஐந்து விரல்களாலும் பற்றியுள்ள சங்கை உயர்த்தி வாயில் பொருத்தி காற்றை இழுத்துக் கதப்பில் நிரப்பி வெகு நேரம் மூச்சு கட்டி ஊது வார். சங்கு முழங்கும்போது சேகண்டி ஓசை தணிந்து ஒலிக்கும். ஊரின் சனிமூலையில் கோயில் அமைந்திருந்தாலும், சங்கொலியும் மணியோசையும் ஊரின் நாலாபுறமும் கேட்கும்படியாய் இருக்கும். ஊருக்குக் கிழக்கேயும் வடக்கேயும் சற்று உயர்ந்த மேட்டுத் தளத் தில் கற்சுவர் எழுப்பிக் கட்டப்பட்டிருந்த பிடாரியார் கோயில் கள் அவ்வோசைகளை உள்வாங்கி எதிரொலிப்பதாகத் தோன்றும். இதுபோல் மூன்றுமுறை சங்கூதிய பின்னர், அவற்றை உரிய இடத் தில் வைத்துவிட்டு, பிள்ளையாரை நீராலும் பூவாலும் சேவித்து விட்டு, திருநீற்றுத் தட்டை எடுத்து, அதன் நடுவே சூடம் கொளுத் திவைத்துப் பிள்ளையாருக்குக் காட்டிவிட்டு, தட்டோடு வெளிவரு வார். கோயிலின் முன் மண்டபத்தில் பிள்ளையாரைச் சேவித்து நிற்பவர்களுக்குச் சுடர் காட்டித் திருநீறு வழங்குவார். கோயிலை ஒட்டினாற்போல் தென்பக்கமாக விரிந்துகிடக்கும் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களும் இரண்டொரு சிறுமி களும்கூட ஓடிவந்து திருநீறு வாங்கிக்கொள்வார்கள். பண்டாரத் திடமிருந்து நீறும் திருநீற்றுப் பச்சையும் வாங்கிச் செல்வதற்

படிப்பகம்

www.padippakam.com



கென்றே சேரிக் குழந்தைகள் சிலரும் அவ்வப்போது வருவார்கள். பிள்ளையாருக்கு நேராக, மண்டபத்திலிருந்து சற்றுத் தள்ளி நின்றுகொண்டு கன்னத்தில் போட்டுக்கொள்வார்கள். கோயிலில் குழுமியுள்ள எல்லாருக்கும் திருநீறு கொடுத்துவிட்டு, யாரேனும் அவசரமாக ஓடிவருகிறார்களா என்று பார்த்துக் காத்திருந்து அவர்களுக்கும் வழங்கிவிட்டு, கடைசியாக சேரிக் குழந்தைகளை நோக்கி வருவார். அதற்குள் இருட்டு கையெழுத்தை மறைக்கும் படியாய் வளர்ந்துவிடும். பிள்ளைகளோடு பெரியவர்களும் நின்றிருந்தால் பண்டாரம் சற்று இடைவெளிவிட்டு நின்றபடி திருநீற்றை அவர்கள் கையில் தூக்கிப் போடுவார். சில சமயங்களில் அவர்களில் சிலர் திருநீற்றை வாங்கிக் கொண்டதும் வெகு அனிச்சையாக, "சாமி நல்லா இருக்கணும்," என்பார்கள். மனம் சஞ்சலப் பட்டுப் போகும் சில தருணங்களில் இப்படியொரு வாழ்த்துக்காகக் காத்திருந்து, அது கிடைத்தால் நல்ல சகுணம் என்று ஆறுதல் அடைவதும், கிடைக்காமல் போனால் அன்றிரவு இழப்பின் தவிப்பில் உடைந்து, முடிவில் தன் பெற்றோர்கள் ஒன்றாய்ப் பாடையேறிப் போன காட்சியில் கரைந்து போவதும் பண்டாரத்துக்கு நியதியாகியது. கோயில் முற்றத்தில் சேரிப் பிள்ளைகள் மாத்திரமே தென்படும் நாட்களில் அவர் மேலும் சற்று நெருங்கிச் சென்று திருநீற்றை அள்ளி அவர்கள் உள்ளங்கைகளில் போடுவார். கேட்கிறவர்களுக்குத் திருநீற்றுப்பச்சையும் கொடுப்பார். ஊரிலுள்ள எல்லா திருநீற்றுச் சம்புடங்களும் அவர் அளித்த திருநீற்றுப் பச்சையால் மணந்து கொண்டிருப்பவைதான். சேரிப் பிள்ளைகள் ஒருசேர நெருக்கியடித்துக் கொண்டு கை நீட்டுகையில், அவரது விரல்கள் உள்ளங்கைகளை மெத்தென்று தீண்டுவதுண்டு. அப்போதெல்லாம் சிறுவர்கள் உடலெங்கும் குதூகலம் சிலிர்த்தோடும்.

"ஏய், பண்டாரம் இன்னிக்கு என்னைத் தொட்டுட்டாருடா."

மிகுந்த ரகசியமாய் குரல் கசியும்.

"என்னக்கூடத்தான்டா. சத்தம் போட்டுச் சொல்லாதே "

"தீட்டு பட்டுருச்சுன்னு குளிச்சுக்குவாரா?

"தீட்டுப் பாக்கிறவருன்னா தெரிஞ்சே தொடுவாரா?"

"தெரிஞ்சேவா தொடுறாரு?"

"ஆமாம். நம்மளத் தொடுறது மச்சு வூட்டுச் சனங்களுக்குத் தெரியக்கூடாதுன்னுதான் கையெழுத்து மறையிறவரைக்கும் நம்மளக் காக்க வக்கிறாரு."

படிப்பகம்

www.padippakam.com



சேரி மக்களுக்குத் திருநீறு வழங்கியதை அறிந்த பிறகு மேல் சாதியினர் எவரும் வந்து அவரிடம் திருநீறு கோருவதில்லை. கோயில் வளாகத்தில் அப்படியொரு நுணுக்கமான கணக்கு வழக்கு நிலவுவதைப் பண்டாரம் தற்செயலாகத்தான் கண்டறிந்தார். அதன் பிறகு அவர் ஒரு புதுப்பழக்கத்தை மேற்கொண்டார். அதாவது, கருவறையில் நின்றபடியே திருநீற்றை முதல் கீற்றாகத் தன் நெற்றியில் இட்டுக்கொண்ட பின்னரே, வெளியே வந்து மற்றவர்களுக்கு வழங்குவதென்று வைத்துக்கொண்டார்.

ஒருநாள், சேரிப்பிள்ளைகளைத் தீண்டுவதுபற்றிக் குறிப்பிட்டு, "சும்மா கெடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டிம்பாங்க," என்றார் சங்கரன்.

"அந்த ஆண்டிப் பண்டாரம் நான்தான்: இப்பவாவது என்னோட அவதார மகிமை புரிஞ்சா சரி," என்றார் பண்டாரம்.

"எதுக்கு இந்த வில்லங்கமான வீண் வேல?"

"என் தீட்டைக் கழுவிக்கத்தான்."

"வேணாம்."

"எது வேணாம்?"

"எதுவும் வேணாம். ஏற்கனவே சேரிப்புள்ளங்க தெணறிக் கிட்டிருக்காங்க. அவுங்களுக்கு நெசம் பேச மட்டுந்தான் சத்து இருக்கு. கமுக்கமா வச்சுக்குற சுமை வேறயா? தாங்க மாட்டாங்க. இப்பகூட வயசிருக்கு. ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு..."

"நிறுத்து. சொத்துக்காக வாரிசு தேடுறவனும், சொர்க்கத்துக்காக கொள்ளி வாங்கிக்கிறவனும் செய்யிற வேலை. எனக்கு ரெண்டும் இல்லை. வேணவும் வேணாம். மனசத் தொடச்சு வச்சா, அக்கடான்னு கெடக்கலாம். நீ இளப்பாத்துவல்ல?"

தொடரும்......

---

## தொடர்பு முகவரி

ஆசிரியர்
கவிதாசரண்
31, டி.கே.எஸ். நகர்
சென்னை-600019
தொலைபேசி: 573 44 99

படிப்பகம்

www.padippakam.com



24ஆம் பக்கத் தொடர்ச்சி—

நினைவு கூர்ந்து பகிர்ந்துகொண்டார். இதில் எனக்கு இருவகையில் வியப்பு. ஒன்று, பள்ளித் தமிழாசிரியர் ஒருவர் அயல்மொழி இலக்கியங்களைத் தேடித்தேடிப் படித்திருக்கிறாரே என்பது. மற்றொன்று, அவ்வளவு நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளனவா என்பது. கூட்டிக் கழித்துப் பார்த்தால், தமிழில் எழுதப்பட்ட தரமான நவீன மூலப் படைப்புகளுக்கு இணையாகச் சில பத்தாண்டுகளுக்கு முன்வரை மொழிபெயர்ப்பு நூல்களும் வந்துள்ளன. இது ஏன் சரிவரக் கணக்கில் கொள்ளப்படாமலும் தொடரப்படாமலும் போயிற்று என்று தெரியவில்லை. ஒருவேளை எனக்குத்தான் தெரியவில்லையா, அல்லது உண்மையே அதுதானா என்பதையும் சரிபார்க்க வேண்டும்.

அண்மையில் நான் சந்தித்த ஒரு தமிழாசிரியரிடம் இந்த நூற்றாண்டு விழா பற்றிப் பகிர்ந்து கொள்ளும் எண்ணத்துடன் "சீனி வேங்கடசாமியைத் தெரியுமில்லையா?" என்று ஆரம்பித்தேன். அவர் உடனே, "தெரியுமே. சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய ந.மு.வேங்கடசாமி நாட்டார்தானே," என்றார். ஞாபகப் பிசகுதான். அந்தக் காலத்தில் ஆனானப்பட்ட பெரும் பேராசிரியர் ஒருவர் 'இளங்கோவடிகள் எழுதிய கம்பராமாயணம்' என்று ஒரு ஐந்து நிமிடம் மெய்மறந்து உரையாற்றியதாகக் கேள்விப்பட்டதுண்டு. ஞாபகப் பிசகல்லாமல் வேறென்ன? எனினும், இதில் ஒரு மெய்யும் இழையோடுகிறது. தமிழாசிரியர்களுக்கு, இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள் போன்றோர் பெயர்ப்பட்டியலோடு இருக்கும் அணுக்கம், ஆய்வாளர்கள் – படைப்பாளர்களோடு பெரும்பாலும் இருப்பதில்லை என்பதுதான். அதனால்தான் நண்பர் தேவராசனின் பரந்துபட்ட வாசக அனுபவம் என்னை வியக்க வைத்தது. தமிழுலகில் இது விதிவிலக்காய் இருந்துவிடக் கூடாதே என்பதுதான் நம் கவலை.

மயிலையாரின் வாழ்வும் ஆய்வும் பற்றிய ஓர் அரிச்சுவடியாக நண்பரின் கட்டுரையொன்று இவ்விதழில் வெளியாகியுள்ளது, மரபான தமிழ்க் கட்டுரையாக. அவரவரும் தனக்கான மொழியைக் கண்டடைவது என்பது தன் பிறவி ரகசியங்களோடு உரையாடிக் கொள்வதைப்போல. அது படைப்புலகம் சார்ந்த மொழி.

'தமிழ்ப்பேரவை'யின் இடைவிடா முயற்சியும் ஒரு காரணம் என்னும்படியாக, மயிலையாரின் எழுத்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. அரசு அவருக்குச் செய்த உயர்ந்த பட்ச மரியாதை.

இதில் நாம் ஒரு கருத்தை முன்வைக்க விழைகிறோம். அரசு ஒருவருடைய எழுத்தை நாட்டுடைமையாக்கும்போது, அச்சில்

படிப்பகம்

www.padippakam.com



வந்த, வராத, தேடுதற்கரிதான எல்லா எழுத்துகளையும் சேகரித்து முழுமையாக, முதல்தடவையாக வெளியிடும் பொறுப்பை அரசே ஏற்க வேண்டும். முழுத் தொகுதியின் மூலப்படியும் அரசின் வசம் இருக்க வேண்டும். நம் மயிலையார் ஓர் ஆய்வாளர். அவரது கட்டுரைகளில் இன்னும் சில வெளிவராமலே இருக்கலாம். மேலும் சில வெறும் குறிப்புரைகளாகவே நின்று போயிருக்கலாம். ஆய்வேடுகளை வெளியிட முன்வராத பதிப்பகங்களால் அவை யாவும் புதையுண்டு போகலாம். ஆகவே, சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்பு கொண்டு, அனைத்து எழுத்துகளையும் திரட்டிப் பட்டியலிடுவது மயிலையார் போன்றவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

மயிலையாருடைய ஆய்வுகளின் குவியம் பற்றித் தமிழகத்தின் மாற்றுச் சிந்தனையாளர்களிடையே ஒரு கருத்து உருக்கொண்டுள்ளது — அதாவது, தமிழ் வாழ்வின் அ-வைதிக மரபைத் துலக்கப்படுத்த அவை உதவியுள்ளதாக. இது எவ்வளவு தூரம் சரி என்பதில் நமக்குச் சில ஐயங்கள் உள்ளன. மேலும் மயிலையாரின் ஆய்வுகள் தமிழ் வாழ்வின் பரப்பையும் சிறப்பையும் வெளிக்கொணர்ந்தனவேயன்றி, அவ்வாழ்வின் கோட்பாட்டு ஆய்வாகவோ, அல்லது அ-வைதிக மரபுச் சிந்தனைப் போக்காகவோ கருதப்படுவதற்கு எவ்வித முகாந்திரமும் இருப்பதாகத் தெரியவில்லை.

வைதிக மரபு என்பதைப் பார்ப்பன மதம் பேசும் வேத அனுசரிப்பாகப் பார்ப்பதே நம் அடிப்படை புரிதலாகிறது. பார்ப்பன வேதத்தின் ஆதி சூத்திரம் ஒன்று மண்ணை உழுது பயிர் செய்வதைப் பாவம் என்று ஒதுக்குகிறது. பாவம் தவிர்க்க முடியாத போது அதுவே இழிவாகிவிடுகிறது என்பது இதன் சாரம். உழைத்தல், உணவைப் பெருக்குதல், பகிர்ந்துண்ணல், பல்லுயிர் ஓம்பல் என்பன பற்றி வேத சாரம் உவந்து பேசவில்லை. ஆசைகளைத் தெய்வங்களாகவும் பாவனைகளைப் புனிதங்களாகவும் புனைந்து உவக்கும் உலகம் பற்றியே அது பெரிதுபடுத்துகிறது. பார்ப்பன மேன்மையின் முட்டுக்கொம்புகளாகக் கடவுளர்களையும் கற்பிதங்களையுமே தூக்கிப்பிடிக்கிறது. மனிதர்களை உறவினத்தார், புறவினத்தார் என இரண்டுபடுத்துகிறது. புறவினத்தாரைப் பொசுக்கிவிடுவதே தர்மம் எனப் போதிக்கிறது. 'பகைவர்களை அழிக்க பலம் தா' என்பதே இறைஞ்சுதலாகிறது. உறவினம் தவிர்த்த உலகம் தனக்கு உணவளிக்கவும், ஊழியம் செய்யவுமே உண்டாக்கப்பட்டதாக நம்புகிறது. உறவின மேன்மையைப் புறவினத் தாழ்மையால் அளக்கிறது. ஆகவே, தாழ்மைப் படுத்தலை தர்மமாக்குகிறது. பண்புகளை எப்போதும் பருப் பொருள்களாகவே பாத்திரப் படுத்துகிறது அதாவது, 'தீண்டத்தகாதவர்களையே' 'தீட்டாக' வடிவமைக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



இதுதான் வைதிக மரபின் அடிநாதம்.

இதை மறுத்து எழுந்ததே அ-வைதிக மரபு; பௌத்தமும் ஜைனமும் கட்டியெழுப்பிய மரபு; பிராமண மேன்மையை நிராகரிக்கும் மரபு; வேள்வியின் பெயரால் உயிர்க்கொலை புரிதலை எதிர்த்து கொல்லாமையைப் போதித்த மரபு பிராமண ஆதிக்கத்தை கேள்விக்குள்ளாக்கிய அரசர்களும் வணிகர்களும் இம்மதங்களை ஆதரித்ததால் அவை இந்தியா முழுதும், அதற்கப்பாலும் விரைந்து பரவின. ஒரு கட்டத்தில் அவையே இந்தியாவின் பிரம்மாண்டங்களாயின. பிரமாண்டம் எப்போதும் அழிவின் சின்னம். காலப்போக்கில் இம் மதங்கள் பல நூறு பிரிவுகளாய் நுணுகிச் சிதறி, முடிவில் வைதிக மரபென்னும் அழுக்குறிஞ்சியால் உள்வாங்கப்பட்டுத் துடைக்கப்பட்டன. இன்று ஜைனர்களையும் பௌத்தர்களையும் அ-வைதிக மரபினர் என்று சொல்வது ஒரு அடையாளத்துக்காகத்தான். உண்மையில் வைதிகத்தின் ஆக மடிசஞ்சிகளே அவர்களும். சடங்குகளே வைதிக மரபின் புற இயக்கம் எனில், ஜைனர்களும் பௌத்தர்களும், பிராமணர்களையும் வேதங்களையும் விலக்கியவர்கள் என்பதைத் தவிர, மற்றபடி முற்றிய வைதிகர்களாகவே கெட்டிதட்டிப் போயுள்ளனர். இந்நிலையில் பிராமண-வேத நிராகரிப்பு மட்டுமே எவரையும் அ-வைதிக மரபினராக்கிவிடுவதற்கில்லை.

இங்கே வைதிக, அ-வைதிக மரபுகளின் பெயர்ப் பொருத்தம் பற்றிய ஒரு முரண் அம்சம் கவனத்துக்குரியதாகிறது. எது நேர் மரபாய் மனிதர்களிடையே சமத்துவம் கோருகிறதோ, அது எதிர் நீச்சல் போடவேண்டிய அ-வைதிக மரபாகவும், எது எதிர்மரபாக மனிதர்களைப் பிளவுபடுத்துகிறதோ, அது நீரோட்டத்தோடு உடன் போகும் தன்மையுள்ள வைதிக மரபாகவும் இடம் மாறிப் பெயர் கொண்டுவிட்டன.

மனிதப் பிறவியை மேன்மைப் படுத்தும் அறிவம்சமானது வேற்றுமைகளைக் கூர்மைப்படுத்தும் எதிர் அம்சமாகவே இயங்குகிறது. ஆனால் அதுதான் மனிதப் பயணத்தின் முற்போக்குப் பரிணாமமாகிறது. அதாவது, அறிவின் உச்சம் அழிவின் முற்று நிலை என்பதே வாழ்வில் கண்டடையும் சிவஞான போதம். பார்ப்பன மதம் இந்த அறிவம்சத்தையே அராஜகமாக அஸ்திவாரமாக்கிக் கொண்டுள்ளது. பிற உயிர்களிடமிருந்து மனிதனை மேம்படுத்திக் காட்டும் அறிவம்சத்தை, சமூகப் பெருபான்மை மக்களையே பிற உயிர்களாகக் கீழ்ப்படுத்துவதில் மையப்படுத்தியது தான் அதன் அராஜகம். பார்ப்பன மதத்தின் வெற்றி என்பது இந்த விலங்காண்டித்தனமே. உன்னதம் என்பது இந்தக் சழிசடைப் பண்பே. இந்திய வல்லமையின் மீட்டுருவாக்கம், அவைதிக

படிப்பகம்

www.padippakam.com



மரபின் இன்றியமையாமையை மைய நீரோட்டமாக்குவதிலேயே முழுமை பெறக்கூடும்.

ஒன்றை உண்டு என்று சொல்வதும், அதை இல்லை என்று மறுப்பதும் எதிரெதிரான இரு நிலைகள்– வைதிக, அ-வைதிக மரபுக் கூறுகள் போல. இவையன்றி மூன்றாவது நிலையும் உண்டு. உண்மையில் அதுதான் வரிசைப்படுத்தலில் முதலாவது நிலை. அது, உண்டென்றும் இல்லையென்றும் பேசப்படுவதைப் பெரும் பேச்சாகக் கற்பிக்காமலும் கண்டுகொள்ளாமலும் விடும் யதார்த்த நிலை. எதனையும் அதனதன் இயல்பில் வைத்து எதிர்கொள்ளும் நிலை. பௌராணிகமும் புனைவும் அற்று, வாழ்வை அதன் போக்கில் ஏற்கும் நிலை. வெகுகாலம் பண்படுத்தப்பட்ட பயன்பாட்டுச் செழுமையிலிருந்து தேற்றி எடுத்து நேர்த்தி செய்யப்பட்ட பட்டறிவு நிலை. எளிமையாய் இருப்பதே ஞானத்தின் திறவுகோல் என்னும் நெற்று நிலை. இதுவே வேதகாலத்துக்கும் முற்பட்ட தமிழ் மரபின் அடையாளம். வேத மரபையே தொடக்கத்தில் எதிர்ப் போக்காகவும், பின்னர் உடன்போக்காகவும் பாதித்த மரபு.

அ-வைதிக மரபின் பெரும்பாலான கூறுகள் தமிழ் மரபுக் கூறுகளோடு ஒத்துப் போகின்றன என்பதாலேயே தமிழர்கள் அ-வைதிக மரபினர் என்று சொல்லிவிடக்கூடாது. சொன்னால், வேத மரபே பாரதத்தின் மூல மரபு என்று நிலைப்படுத்த முயலும் புறக்கடை பார்ப்பன சூழ்ச்சிக்கு நாமும் துணை போகிறோம் என்றே பொருள். பாரதத்துள் தமிழகத்தையும் அடக்கித்தான் பேசப்படுகிறது. அ-வைதிக மரபின் எழுச்சியே வைதிக மரபின் வீழ்ச்சிக்கான மாற்றுதானே. தமிழ் மரபு இவற்றின் ஆக்கத்தில் பங்கேற்றது. தாக்கத்தால் பங்கமுற்றது. இவ்விரு நிலைகளையும் எதிர்கொள்ளும் தனித்துவமே தமிழ் மரபின் வாழ்வியல் போக்காக இருந்தது. உதாரணமாக இறையம்சம், வைதிக மரபில் பிராமணர்களின் ஆச்சார்யக் கவசம்; ஆகவே, அது 24 மணி நேர ஆடம்பரமாக அவர்களால் கொட்டி முழக்கப்படுகிறது. அவைதிக மரபில் அது பிராமணர்களுக்கெதிரான நிராகரிப்பு. ஆகவே, மௌனப்படுத்தப்பட்டது. தமிழ் வாழ்விலோ அது இயல்பாய் பொருந்தியிருக்கும் ஒரு குறியீடு. வெகு மக்களிடம் விழாக்கால அனுசரிப்பாகவும், கற்றவர்களிடம் பிரபஞ்சத்தத்துவமாகவும் அனுசரனையோடு கிடந்துறையும் ஒரு குறியீடு. அன்றாடப் பாடுகளில் ஒன்றியவர்களுக்கு அது அனிச்சையாக நினைவு கூரப்படும் ஒரு அசைச்சொல் மட்டுமே.

வேதங்கள் குறிக்கும் வெல்லற்கரிய அசுரர்கள் என்போர் ஆரியர் வருகைக்குமுன் இந்தியா முழுதும் அரசாதிக்கம் செலுத்தி வந்த திராவிடர்களாயறியப்பட்ட தமிழினத் தாயாதிகளின் மூதா

படிப்பகம்

www.padippakam.com



தையர்கள் என்பது ஆய்வாளர்களின் கணிப்பு. அந்த மக்கள் உழுதுப் பயிரிடுகிறவர்களாகவும் எழுதிப் பயில்கிறவர்களாகவும் இருந்தனர் என்பதனை வேதமே பதிவு செய்துள்ளது. ஆரியப் பரவலுக்கு அச்சுறுத்தலாயிருந்தவர்களின் வாழ்முறை என்பதால் உழுதலைப் பாவமாக்கும் கருதுகோள் வேதத்தில் ஏற்றப்பட்டிருக்கக் கூடும். மேலும், உஞ்சவிருத்தித்தனத்தை உபதேசித்தவர்களுக்கு உடல் வருத்தி உழைத்துண்ணுவது பாவப் பிழைப்புதான்.

தமிழ் மரபு அடிப்படையில் நிலம் சார்ந்தது. நிலத்தை ஐந்து வகையாகப் பகுத்தாலும், இங்கே பாலை இல்லையாதலால் பழந்தமிழகம் நானிலம் என்றே அழைக்கப்பட்டது. வாழ்வும் ஐவகைத் திணைகளாகப் பங்கீடு செய்யப்பட்டது. உழைத்து உண்ணலும், பகுத்துண்டு சுற்றம் புறத்தலும் அடிப்படை அறங்களாயின. காலை நேரத்தில் காக்கை கரைந்தால் விருந்து வரும் என்னும் நம்பிக்கை விருந்துக்கு உவந்து வாழ்ந்த சமூகத்தில்தான் சாத்தியப்படும். (விருந்து எனப்படுவோர் உற்றார் உறவினர் அல்லர்.) ஆரியவழி மரபினர் போல் ஆசைகளைத் தெய்வங்களாகச் சன்னதப்படுத்தி, அவற்றை ஆயிரம் பெயர்காளல் அர்ச்சித்து, எப்போதும் அப்பெயர்களையே உச்சரித்து உய்நிலை அடைய வேண்டும் என்பதற்காக அவற்றைத் தங்கள் வம்சக் கொழுந்துகளுக்கு இட்டு, பூசுர வாழ்வில் திளைத்தவர்கள் அல்லர் தமிழர்கள். மாறாக, தங்களுக்காக உயிர்துறந்தவர்களை வணக்கத்துக்குரியவர்களாகவும் குலதெய்வங்களாகவும் போற்றியவர்கள். தங்கள் குலக்கொழுந்துகளுக்கு குடிப்பெயர்களோடு காரணப் பெயர்களையும் பண்புப் பெயர்களையுமே இட்டு அழைத்தவர்கள். குறிஞ்சியிலிருந்து மருதம் வரை மக்களின் நிலப் பெயர்வை ஏற்று அமைதிப்படுத்தும் மரபு காத்தவர்கள். தொழில்நிலை மாறுபாடுகளைத் தகுதிநிலை வேறுபாடுகளாய் அயன்மைப் படுத்தாதவர்கள். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று கல்வியை அனைவர்க்கும் பொதுவாக்கியவர்கள். மருத நிலச் செழிப்பிலும் சிந்தனையிலும் பெருங்குடிச் சமய நெறியாள்கையாகப் புலால் உண்ணாமையைச் சாத்தியப் படுத்தியவர்கள். (பௌத்தம் கொல்லாமையை வற்புறுத்துகிறது. ஆனால் புலால் புசிப்பை அனுமதிக்கிறது. வெகுமக்கள் சங்கமாக விரிந்து செல்ல அந்தச் சமரசம் தேவைப்பட்டிருக்கக் கூடும்.)

பாரதம் முழுவதையும் வேத மரபுக்குட்படுத்துவதே, பழங்காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி, பார்ப்பனர்களின் பிறவிக் கடன். வேத மரபென்றால் என்ன? அதன் அடிப்படை பார்ப்பன மேலாண்மைதானே. உலகெங்கும் இறை நம்பிக்கைக்கு அடுத்த படியாக மக்களைப் பிடித்தாட்டுவது 'கெட்ட காத்து' நம்பிக்கைதான். அதற்கு இணையானதும் அதனினும் இறுக்கமானதுமான

படிப்பகம்

இந்திய நம்பிக்கை 'பாப்பான் ஒசந்தவன்' என்பதாகத்தான் இருக்கும். இது பார்ப்பனர்களின் சாதனை. ஈடிணையற்ற இச்சாதனையை எட்டுவதில் ஆரிய வர்த்தம் உருவான அந்தக் காலத்தில் முட்டுக்கட்டையாயிருந்தது தென்புலத்துத் தமிழ் மரபு. ஆனால் அது அந்தக் காலம். அதிதிகளாக, பணியாள்களாக, தோழர்களாக, தூதுவர்களாக, ஆலோசகர்களாக, அர்ச்சகர்களாக, ஆசீர்வதிக்கிறவர்களாகப் படிப்படியாய் ஊடுருவிக் களம் அமைத்து வென்றனடந்தார்கள். இதிலுள்ள வியப்பு என்னவென்றால், தமிழ் மரபு இன்னும் தன் அடையாளத்தை இழந்துவிடவில்லை. பார்ப்பனர்கள் அதைக் கலைத்துப்போட முயலாமல் அல்லது முடியாமல் (தங்களையும் அந்த மரபுக்கு ஆட்படுத்திக் கொண்டவர்களாய்) அதன் தலையில் 'பார்ப்பன மேலாண்மை' வெண்ணெய்யை வைத்து உருக்கிவிட்டதுதான். இன்று உடல் முழுதும் பிசுபிசப்பு ஏறிவிட்டது. மயிர்க்கால்கள் வழியே உள்ளேயும் ஊறிக் கசிந்திருக்கிறது. பெரியார் போலச் சிகைக்காய்த் தூள் போட்டு நொறுங்கத் தேய்த்துத் தலைக்கு ஊற்றுகிறவர்கள் தொடர்ந்து வந்தால் தேவலை. கூடவே தமிழ்ச் சுரணையை மூர்க்கப்படுத்தி, தமிழ் நாட்டைத் 'தமிழர் நாடா'க்கத் தம்மைத் தருபவர்களும்.

பார்ப்பன மேலாண்மைக்கு எந்நாளும் பங்கமில்லை என்றால், அதைச் சாதிக்கும் வழிமுறைகளில் விட்டுக்கொடுப்பதிலும் சமரசம் செய்துகொள்வதிலும் அவர்கள் எந்த எல்லைக்கும் செல்லக் கூடியவர்கள். அந்தக்காலத்து தமிழ்ப்புலத்தை ஊடுருவி வெல்வதிலும் அதைத்தான் செய்தார்கள். முதலில் தமிழர்களின் நாட்டுப்புறத் தெய்வங்கள் சிலவற்றை நல்லெண்ண அடையாளமாகப் பெருந்தெய்வப் பட்டியலுக்குள் கொண்டுவந்து தங்களுடையனவாக்கிக் கொண்டாரகள். அது ஒரு ரசாயன மாற்றம் போல. செய்வது அவர்களுக்கு எளிது. எந்தத் தெய்வத்துக்கும் ஒரு வடமொழிப் பெயர் சூட்டி, வடமொழி மந்திரத்தால் 'ஸ்நானம்' செய்வித்துவிட்டால் அது அசல் வேத மரபுத் தெய்வமாகி விடும். நம்மூர் காளியம்மாள், மாரியம்மாள்கள் அப்படி உயர்ந்தவர்கள் தாம். இங்கே வெகுமக்களிடையே சுடலையாண்டியாகவும், எழுத்தறிவர்களிடையே சிவலிங்க போதமாகவும் தொழப்பட்டவன், வேதக்கவசம் பூண்ட சர்வேஸ்வரனாக உயர்த்தப்பட்டான். பின்னாளில் ஒரு கோமாளி போலவும் தூர்த்தனாகவும் மலிவுச் சித்திரமான இந்திரனே ஆதி வேதமரபில் கடவுளர்க்கெல்லாம் கடவுள். அவன் வீட்டு வேலைக்காரனே ருத்திரன் என்றழைக்கப்பட்ட தமிழ்ச் சிவன். தமிழ் மரபை உள்வாங்கிக்கொண்டபின், முப்படைத் தளபதிகளுள் தரைப்படைத் தளபதியே முதன்மையாவதுபோல், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெரும் கடவுளருள் சிவனே பெருமானாக முதன்மைப்படுத்தப்பட்டான். தென்னாட்டு ருத்ரன்

www.padippakam.com



மைத் தெய்வமாகிய செவ்வேள் என்னும் முருகன் அந்த ஈசனின் ஆற்றல் மிக்க இளையமகனாக்கப்பட்டான். எதையும் சமஸ்கிருதத்தில் சுலோகப்படுத்திவிட்டால் அது தொன்மையானதாகவும் அழிவில்லாததாகவும் ஆகிவிடுகிறது! கூடவே பார்ப்பனர்களின் அறிவுசார் சொத்தாகவும் மாறிவிடுகிறது. தமிழ் வாழ்வின் சிறப்பம்சங்கள் பலவும் இவ்வாறே உள்வாங்கப்பட்டு, வேத மரபுச் செழுமைகளானதோடு, பின்னாளில் அவையே வேத மரபின் கொடைகளாக தமிழ் வாழ்வுக்குக் கையளிக்கப்பட்டன(!) சிற்ப- ஆகம சாஸ்திரங்கள் யாவும் சமஸ்கிருதத்திலேயே உள்ளன. வட இந்தியக் கோயில்களுக்கும் தென்னிந்தியக் கோயில்களுக்கும்தான் எவ்வளவு வேறுபாடு! இவற்றில் பார்ப்பனர்களின் பூர்வோத்திரம் என்ன? பரத சாஸ்திரமும் அப்படியே. எந்தப் பார்ப்பனர் முத்திரை முத்திரையாக அடவு செய்து அந்தத் 'தேவுடியா ஆட்டத்தை' வரைமுறை செய்திருப்பார்! கட்டையன் என்ற கிழவனுக்கு அவன் பெண்டாட்டி குள்ளச்சிக் கிழவி கடிதம் எழுதினாள். அவளுக்கு எழுத வராது என்பதனால் அடுத்த வீட்டு அங்கையற்கண்ணியை எழுதச் சொன்னாள். கடிதம் அங்கயற்கண்ணியால் எழுதப்பட்டதாலேயே அவள் கட்டையனின் மனைவியாகிவிடுவாளா என்ன? ஆனால் ஆகிவிடுகிறாள். அதுதான் சமஸ்கிருத தர்மம், தர்க்கம், எல்லாமும். உங்கள் தாத்தா கட்டிய கோயிலுக்கு ஒரு பார்ப்பானைவிட்டு சமஸ்கிருதத்தில் பெயர் வைக்கச் சொல்லி, அதன் ஸ்தல புராணத்தையும் எழுதச் சொல்லிவிட்டால், உடனே அது பார்ப்பனத் தெய்வமாகவும், தேவாசுரப்போரில் பங்கு பெற்ற தொல்புகழ் பெற்றதாகவும் ஆகிவிடும். சமஸ்கிருதத்தில் எதைச் சொன்னாலும், கூடவே ஒரு புராணமும் வளரந்துவிடும் அனுமார் வால் மாதிரி. தமிழர்கள் புராண மரபினர் அல்லர். ஆனால் சமஸ்கிருதப் பெயர்களோடும் புராணங்களோடும் தமிழமெங்கும் மலிந்து கிடக்கும் கோயில்களும் ஊர்களும்தான் எத்தனை! ஏதோ வேதமரபினர் நமக்களித்த கொடைகள் போல. அவைகளின் மூலப்பெயர்களைத் தேடி மாளவில்லை இன்றைய தமிழ்ச் சிகாமணிகளுக்கு.

இந்த ஊடுருவல்களால் வைதிகமரபு செழுமையும் சீர்மையும் பெற்றதென்னவோ உண்மை. அதுபோலவே தமிழ்மரபும் உவக்கலாம் என்றாலும், அது தன் சொந்தச் செழுமைகளையே வேத மரபிலிருந்து பெற்றதாகப் பாவிக்கும் சிறுமைக்கு ஆளாக்கப்படுகிறது. வேத மரபுத் தாக்கத்தால் பார்ப்பன மேலாண்மையும் வருணாசிரமக் கோட்பாடும் தமிழுக்குள் சேமிக்கப்பட்டுவிட்டன. பசுகோமாதாவாகிவிட்டது. வருணாசிரமக்கோட்பாட்டுத் தாக்கத்தால் தொழில் வேறுபாடுகள் சாதிப் பாகுபாடுகளாய்க் கெட்டிப்பட்டுப் போயின. அதுவரையும் நடைமுறையிலிருந்த ஒரு சீர்மை 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் வெறும் சொல்லலங்கார

படிப்பகம்

www.padippakam.com



மாய்ச் சிறுத்துப் போனது. வர்ணாசிரம தர்மத்திற்கு எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லாத தமிழகத்தில் அது வெறும் 'அந்தணன், அரசன், வணிகன், வெள்ளாளன்' என்னும் மொழி பெயர்ப்புகளாகவே நிலைத்தது. வெள்ளாளன் என்பவன் உழைக்கிறவன். வேளாண்மையே தமிழ் வாழ்வின் உழைப்புக்கான மூலத் தொழில். இதில் அந்தணன் என்பவன் பார்ப்பானாகவும் வெள்ளாளன் என்பவன் அடிநிலைப் பாட்டாளியாகவும் பின்னர் பரிணாமம் பெற்றுவிட்டனர். இந்தப் பரிணாமம் ஒரே காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும். வர்ணாசிரம தர்மத்தில் சூத்திரனுக்குக் கல்வி மறுக்கப்படுகிறது. தமிழகத்தை ஆண்ட மன்னன் ஒருவன் இந்த நால்வகைப் பாகுபாட்டை ஏற்கிறவனாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான். அதற்கு மேலும் அவன் தன் தமிழ் மரபை நிலைப்படுத்துகிறான். 'நால்வகையுள்ளும் கீழ் வகையைச் சேர்ந்தவன் கற்றவன் என்றால், அவன் மேல் வகை மனிதனாகவே ஏற்கப்படுவான்' என்கிறான். 'கல்வி, மனிதனாக்கும் கவசம்; அது அனைவர்க்கும் சொந்தம்' என்பது தமிழ் மரபு. இந்த மன்னன் காலத்தில் அந்தணன் பார்ப்பானாகவும், வெள்ளாளன் 'கீழ்ச்சாதி' யானாகவும் வளர்ந்துவிட்டார்களா எனத் தெரியவில்லை. அப்படியே வளர்ந்திருந்தாலும் இது அர்த்தமுள்ள வெளிப்பாடுதான். ஆனால் நடைமுறையில், வர்ணாஸ்சிரம சூத்திரனுக்கு மறுக்கப்பட்ட கல்வி, தமிழ்நாட்டுத் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மறுக்கப்பட்டது. அதாவது, தாழ்த்தப்பட்டவர்கள் சூத்திரர்களின் சூத்திரர்களாகக் கீழிறக்கப்பட்டனர்.

வைதிக மரபால் தமிழ் வாழ்வின் சீர்மை குலைக்கப்பட்டதை அடிநாட்களில் ஆளும் வர்க்கமும் மக்களும் ஏற்கவில்லை என்பதற்கான சான்றாக, அ-வைதிக மதங்களான ஜைனமும் பௌத்தமும் தென்புலத்தில் பெற்ற வரவேற்பைச் சொல்லலாம். அ-வைதிக மரபினர் எப்போதும் மக்கள் மொழியில் பேசுகிறவர்கள் என்பதும், அ-வைதிகக் கூறுகள் பல தமிழருடையவை என்பதும் அவை விரைந்து பரவக் காரணமாயிருந்தன. சமயக் கண்ணோட்டமில்லாத சங்க இலக்கியங்களைத் தவிர்த்துப் பார்த்தால், வாழ்வியல் ரீதியில் ஜைனமும் பௌத்தமும் தமிழுக்கு வழங்கிய கொடைகள், சைவமும் வைணவமும் வழங்கியவற்றுக்குச் சற்றுக் குறைந்ததல்ல என்று அடித்துச் சொல்லலாம்.

வேத மரபினர் எதனாலும் தளர்ந்துவிடுவதில்லை. மேலும் அவர்களுடைய ஏற்றத்தாழ்வுக் கோட்பாடுகள் மன வக்கிரங்களுக்கு உரமூட்டுபவை. ஆகவே, அவர்களின் இடைவிடாத தாக்குதலில் ஜைனமும் பௌத்தமும் முற்றாக முடக்கப்பட்டன. அவை பரவியிருந்த காலத்து வரலாறுகளும் திருத்தி எழுதப்பட்டன; அல்லது இருட்டடிப்பு செய்யப்பட்டன. அதிலொன்று களப்பிரர் வரலாறு.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாட்டை மூன்று நூற்றாண்டுகளாண்ட களப்பிரர் காலம் இருண்ட காலம் என்று ஒதுக்கப்படுகிறது. அவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் ஒன்றும் கிடைக்கவில்லை என்று இருட்டடிப்புச் செய்யப்பட்டது நல்லவேளை நமது மயிலையார் அவ்வரலாற்றை வெளிக்கொணர்ந்தார். அதிலும்கூட களப்பிரர் காலத் தமிழ்ப்பணியே அவரது ஆய்வுப் பொருளாகிறது.

களப்பிரர்கள் தமிழர்களல்லர். என்ன அதனால்? வேத மரபு இச்சமூகத்தை நச்சு வனமாய் மாற்றிவிட்ட பிறகு, இழிவு செய்யப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட வெகு மக்கள், 'இனம், மதம், மொழி' அடிப்படையில் எந்த அரசை 'நம் அரசு' என்று உரிமை கொண்டாட முடிந்தது? உண்மையில் 'அந்நியர் அரசுகள்'தாம் அவர்களைச் சிறிதளவேனும் மனிதாபிமானத்தோடு நடத்த முயன்றன. 'நம் அரசுகள்' அவர்களுக்கு நயவஞ்சக அரசுகளே இன்றளவும்.

களப்பிரர்கள் அ-வைதிக மரபைச் சார்ந்தவர்கள். 'பிரம்ம தேயம்' என்ற பெயரில் பார்ப்பனர்களுக்குத் தானமாய் வழங்கப்பட்ட சொத்துகளைப் பறித்து– அவை யாரிடமிருந்து பறிக்கப்பட்டதோ, அதே அடிநிலை மக்களுக்குத் திருப்பியளித்தவர்கள். தமிழுக்கு வளம் சேர்த்தவர்கள். பின்னாளில் தங்களைச் சோழர்களாகவே அடையாளப்படுத்திக் கொண்டவர்கள். அவர்கள் செய்த பிழையெல்லாம் பார்ப்பனர்களையும் செல்வந்தர்களையும் முற்றாகப் புறக்கணித்ததுதான். அதுவே அவர்கள் முடிவை எழுதியது. அவர்கள் காலத்துக்குப் பின்னர் வந்த தமிழ் மன்னன் அடிநிலை மக்களிடமிருந்து அவர்கள் நிலத்தை மீண்டும் பறித்து பார்ப்பனர்களுக்கு பிரம்ம தேயமாக வழங்கினான்.

களப்பிரர் மறைவைத் தொடர்ந்து சமய மறுமலர்ச்சி என்னும் பெயரில் அவைதிக மதக் கல்விமான்களும் சிந்தனையாளர்களும் பல்லாயிரக்கணக்கில் கழுவேற்றப்பட்டனர். இந்தியாவில் இதுவரை நிகழ்ந்த அனைத்துப் போர்களிலும் கொல்லப்பட்டவர்களை விட வேத மரபினரால் கொல்லப்பட்டவர்கள் பன்மடங்கு அதிகம் என்பது ஆய்வுக் கணிப்பு. சைவ சமயக் குரவர்களும், வைணவ சமய ஆழ்வார்களும் தமிழில் வேதங்கள் யாத்தனர். வேறென்ன? ஆவுரித்துத் தின்றுழலும் புலையர்களைப் புறக்கடைப்படுத்தும் துதிகள் தாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்வரைகூட தெய்வங்களுக்கான போற்றிப் பாடல்களே இல்லை என்னும்படியாய் வாழ்வியல் மரபை முன்னெடுத்த சமூகம் இது. ஒரு சமூகம் இருண்டுபோகத் தெய்வங்களே காரணமாகக்கூடுமோ? கூடும் என்றுதான் தோன்றுகிறது.

பழந்தமிழ்ச் சமூகத்தின் தெய்வம் பற்றிய கண்ணோட்டத்தை மீட்டெடுக்க முடியுமா? "புடிச்சு வச்சா புள்ளையாரு; வழிச்செறிஞ்சா சாண எரு" என்று எதார்த்தமாய் வாழ்கிறவர்களால் ஒருவேளை முடியக்கூடும். ஆனால் அந்த எளிமை கரையேற்றுமா?

படிப்பகம்

www.padippakam.com

முறைகளில் நவீனத்துவம் பெற்ற சில மாறுபாடுகளைக் கொண்டிருக்கலாம். ஆனால், சமூக வகைப்பட்ட நாடகங்கள் மட்டும் காலத்துக்குக்காலம் வடிவம், உள்ளடக்கம், உத்தி ஆகியவைகளில் பல மாறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. இச்சமூக நாடகங்கள் சமூகத்தின் பண்பாடு, அரசியல், பொருளியல் போன்ற தேவைகளுக்கேற்ப தன்னை பண்பளவில் மாற்றிக் கொண்டிருக்கின்றன. அவ்வகையான மாற்றத்தின் ஒரு வகையாகவே தலித் அரங்கைக் கொள்ள வேண்டும்.

இப்படியான சமூக அரங்குகள் நிலவும் பண்பாட்டு, அரசியல், பொருளியல் தேவைகளுக்கேற்ப எவ்வாறு ஈடுபடுத்திக் கொள்கின்றன என்பதைக் கொண்டுதான் அதன் மீதான பார்வையை மதிப்பிட முடியும். இங்கு என்னதான் திறமை இருந்தாலும் சாதிய மனோபாவம் மேலோங்கி தடுத்தாட்கொண்டுவிடுவதையும், அதனினும் தாழ்த்தப்பட்ட அதிமேதாவித்தனம்கூட தீண்டாமைக் கண்கொண்டு அற்பமாய் மதிக்கும் பண்பையும் உதறிவிட முடியாது. இது பொது விதியாகவே உள்ளது. இருப்பினும் தலித் அரங்கியல் மீதான தீண்டாமைப் பார்வை ஒருபுறம் இருப்பதென்னவோ உண்மைதான். அதே சமயம் இவ்வரங்கியலின் பாத்திரம் குறிப்பிட்ட சமூகத்துக்கேனும் எவ்வகையான தாக்கத்தை உண்டாக்கி இருக்கிறது... என்பதும், அப்பகுதி மக்களை எவ்வாறு வசீகரித்துள்ளது என்பதும், அம்மக்களால் எவ்வாறு வரித்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதும் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது அவசியம். இது தலித் அரங்கியலுக்கு மட்டுமல்ல. தலித்இலக்கியம் போன்ற அனைத்துக்கும் பொருந்தும்.

ஒரு கலைப்படைப்பென்பது அது உருவாக்கப்பட்ட நோக்கத்தை ஈடேற்றியுள்ளதா என்பதைப் பொருத்தே அமைவது. அவ்வாறே தலித் அரங்கியல் தோற்றுவிக்கப்பட்ட நோக்கத்தை ஈடேற்றும் வகையில் அம்மக்களிடம் ஏற்படுத்திய எழுச்சியை ஒட்டியதாகவே அமையும்.

உள்ளடக்கத்தில், உத்தியில், வடிவத்தில் தலித் அரங்கியல் முந்தைய இந்திய மரபுகளை உள்ளடக்கிய அரங்கியலை கேள்விக்குள்ளாக்கியிருக்கலாம். அதற்காக அரண்டு போகிறவர்களா இந்தியச் சாதியவாதிகள்? இப்படியானவர்களின் அரங்க விமர்சனங்களுக்காக உண்டாக்கப்பட்டதாக தலித் அரங்கியலைக் கொள்ள முடியாது. மாறாக, பரந்துப்பட்ட தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களின் மனங்களில் ஏற்படுத்தும் மாற்றத்துக்கானதாக. எழுச்சிக்கானதாகவே கொள்ள வேண்டும். இந்த எழுச்சிதான் இப்படியானவர்களைக் கூட பேசச் செய்யும். அதை ஓரளவு தலித் இலக்கியம் செய்தது



படிப்பகம்

Kavithaasaran, May - July, 2000 Regd.No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL, R. Dis. 5479/90
www.padippakam.com

என்று சொல்லலாம். அதே சமயம் தலித் அரங்கியல் ஏன் அவ்வாறான தன்மைக்கு இட்டுச் செல்லவில்லை?

சமூக அரங்கியல் என்பதன் ஒரு வகையான தலித் அரங்கியல் மக்கள் பயன்படுத்தப்படுவதென்பதைவிட மண்டபமயப் படுத்தப்பட்டுவிட்டது என்பதையும் தயவுசெய்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தாழ்த்தப்பட்டமக்களின் வாழ்நிலைக் கேற்ற வகையில் அவர்களை நெருங்கிச் செல்லாமல் அதே சமயம் அவர்கள் நெருங்கி வராமல் அவ்வரங்கியலின் தயாரிப்பு பயமுறுத்திவிட்டது.

இப்படியான சூழலில் நாடகக்காரர்கள் வாய்மூடி இருப்பதை சாதிய வகை என்றுதான் கொள்ள வேண்டும். நாடகக் காரர்கள் மட்டுமா? இசைக் கச்சேரிகளில் தப்பு ஒலிக்கப் படுகிறதா? நடனக் கச்சேரிகளில் கரகாட்டம் அரங்கேறுகிறதா? ஏனெனில் அவைகள் தாழ்த்தப்பட்டவனின் குறியீடுகள். அவைகள் புறக்கணிக்கப்படும். மீறிக் கேட்டால் அவைகளில் கலந்து விடாமலிருக்கும்படி தனியாக வைத்திருக்கும்படியான ஏற்பாட்டில் முக்கியத்துவம் தரப்படும். அரசே முதன்மைப் படுத்தும். (ஆதிதிராவிடர் நாடக அரங்கம், தப்பாட்டப்பயிற்சி)

இப்படியாகத்தான் தலித் அரங்கியல் குறித்த மௌனத்தையும் கொள்ள வேண்டும். நாடகவெளியோ, சபாக்காரர்களோ, நாடகக்காரர்களோ தலித் அரங்கியல் குறித்துப் பேச வேண்டும் என்ற பார்வை நமக்கு வேண்டியதில்லை. அவர்கள் பேச வேண்டும் என்பதற்காகவோ, பல்கலை வளாகங்களில் ஆய்வுக் கட்டுரை படிக்க வேண்டும் என்பதற்காகவோ இவைகள் தோன்றவில்லை. மாறாக தலித் மக்கள் விடுதலைக்கானதாக படைக்கப்படுகிறது. இக்கலைப் படைப்புகளின் விமர்சகர்கள் தலித் மக்களே! அவர்களின் கைகளில் தலித் அரங்கியலை ஒப்படைப்போம். அவர்கள் முயற்சிப்பார்கள். புது விதிகளை உண்டாக்குவார்கள்.

‘எவன் மயிரேப் புடுங்கப் போனீங்க’ என்ற வரிகளை பாடப்புத்தகங்களில் இல்லாமல் செய்யலாம். பாமரனின் மனங்களிலிருந்து எடுத்துவிட முடியாது. மக்களின் கலை என்பதும் இம்மாதிரியான வெற்றிகளில்தான். ●

Printed by Mrs. Kavithasaran at Allwell Press, 31, T.K.S. Nagar, Chennai-600019. Published at 580, T.H. Road, Chennai-600021 & Edited by: Kavithaasaran.

படிப்பகம்